THE OOLIAN

Reg.No.M.1509

ஊழியன்

தேசீய சித்திர வாரப்பத்திரிகை



ஒருவித ஆஸ்ட்ரேலியன் கரடி.

ஊழியன்

ஆசிரியன்—ராய. சொக்கலிங்கன்.

மலர் கச. சென்னை, பவஹூ ஆடிமீ 19உ வெள்ளி (3-8-1934) இதழ் ரு.

இந்தியத்தாய் முடிசூடி எழிற்சிங்கா
தனமேறி ஈடி லாது
சொந்தவா சேபுரியத் துயர்போக்கி
யாவருமே சுகவாழ் வெய்த
இந்தநிலம் வந்தவருள் இலைபிறப்பில்
இழிவுயர்வென் இயற்கை ஓங்க
நந்தலிலா ஊழியமே நான் கொண்டேன்
நல்லனவெந் நாளும் வாழ்க!

மாளவ்யா-ஆனே

இந்த வாரம் அரசியல் உலகில் எங்கு பார்த்தாலும் மாளவ்யா—ஆனேப் பேச்சுத்தான். பண்டித மாளவ்யாவும் திரு. ஆனேயும் காங்கிரஸ் தேர்தல் போர்டினின்றும் விலகினார்; பின்னவர் காங்கிரஸ் காரியக் கமிட்டியில் தாம் வகித்த அங்கத்தினர் பதவியையும் விட்டு விட்டார். காரணம் வகுப்புத் தீர்ப்புப்பற்றிய கருத்து வேறுபாடே. வகுப்புத் தீர்ப்புப் பற்றிக் காங்கிரஸ்க் காரியக் கமிட்டித் தீர்மானம் தங்கள் கருத்துக்கு மாறுபட்டதென இவ்விரு தலைவர்களும் சில நாட்களாகவே எதிர்த்து வந்தனர். இதற்கு ஒரு சமரசம் ஏற்படும் என நினைக்கப் பட்டது.

காசி நகரில் கூடிய காங்கிரஸ்க் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் காந்தி யடிகளாலும் மற்றையோராலும் ஒருவித உடன்பாட்டிற்குப் பெரும் முயற்சி செய்யப்பட்டது. பல மணி நேரங்கள் பலமாக விவாதிக்கப்பட்டது. முடிவில் உடன்பாடு தோன்றவில்லை. எனவே பண்டித மாளவ்யாவும் திரு. ஆனேயும் இராஜீநாமாச் செய்து விட்டனர். அவை அங்கீகாரமும் பெற்றுவிட்டன. ஆகவே பண்டித மாளவ்யாவும் திரு. ஆனேயும் இப்போது காங்கிரஸ் தேர்தல் போர்டில் இல்லை; திரு. ஆனே காங்கிரஸ்க் காரியக் கமிட்டியில் முன்னே இருந்தார்; இப்போது இல்லை.

வகுப்புத் தீர்ப்புப்பற்றிக் காங்கிரஸ்க் கமிட்டி செய்த தீர்மானத்தை உற்று நோக்கினால் அதில் கமிட்டிக்கு விருப்பமில்லையென்பது விளங்கும். முஸ்லீம் சகோதரர்கள் பலர் அதில் தங்கட்கு நன்மையிருப்பதாகக் கருதுவதால் அதை எதிர்த்தால் பிளவு பலமாக ஏற்படும் எனக் கருதியும் வெள்ளை அறிக்கையையே அடியோடு எதிர்க்கும்போது அதிலுள்ள இந்த ஒரு பிரிவைத் தனியாக எதிர்த்து வீண் பிளவை உண்டாக்க வேண்டுவது அநாவசியம் என நினைத்துமே காரியக் கமிட்டி அதை ஒருவகையாக விட்டது. இந்த வேற்றுமையில் தங்கள் சொந்தக் கருத்தைக் கொஞ்சம் ஒதுக்கிவைத்து—காங்கிரசில் ஒற்றுமையே உணடாக்கும் ஒரு பெருநோக்கத்தைப் பெரிதாகக் கொண்டு காந்தி யடிகள் உள்ளிட்ட தேசத் தலைவர் பல்லோர் வேண்டுகோட்கு இணங்கி யிருந்தால் விலகிய தலைவர் இருவருக்கும் பெருமை அதிகப்பட்டிருக்கும்.

பண்டித மாளவ்யா பழுத்த கிழவர்; நாட்டினர் அனைவராலும் அறியப்பட்ட பெரியவர். அவருக்கும் நமக்கும் சீர்திருத்த விஷயத்தில் கருத்து மாற்றம் பெரிதும் உண்டு. அதற்காக மாளவ்யாவின் உயர்தகைமையை நாம் மறுக்கமாட்டோம். "தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்" என்ற சொற்றொடர்க்கு முற்றும் இலக்காக வாழும் ஒரு சிலருள் மாளவ்யா ஒருவர். அவரது பொதுத் தொண்டையும் பெரும் பயன் நல்கும் அவரால் நடாத்தப்படும் உருவான அமைப்பையும் மனமாரப் போற்றாதார் அறிவு உலகத்தில் இருக்கமாட்டார். அப்பெரியார் நாட்டில் கொண்ட பெருங்காதல் அளவிட முடியாதது. அவர் காங்கிரஸ் சார்பாகத் தேர்தலுக்கு நிற்க முடியாத நிலைமை ஏற்பட்டது வருந்தக்கூடியதே. அந்த நிலை ஏற்படலாகாது என்பதற்காகவே தலைவர்களும் தலைவர்கள் தலைவரும் காசியில் பெரிதும் முயன்றனர். முடியாது போய்விட்டது.

எனவே இனிச் செய்யவேண்டுவ தென்னே?

மற்றையோர் தங்கள் கடமையைச் சோர்வின்றி ஒல்லுமாறு நடத்துதலேயன்றோ? மாளவ்யா விலகி விட்டதற்காகக் காங்கிரஸ் மேற்கொண்ட வேலையை விட்டு விடப் போகிறதா! மாளவ்யா காங்கிரசில் சேர்ந்து சட்ட சபைக்கு நின்றாரானல் காங்கிரசுக்கும் பலம்தான்; மாளவ்யாவுக்கும் அதனல் பெருமை அதிகந்தான். மாளவியா காங்கிரஸ் சார்பாக நிற்பதில் காங்கிரஸ் அடையும் நன்மையைவிட மாளவ்யாவின் பெருமையே மிகுதியும் ஓங்கும். எந்த ஒரு பேராற்றல் படைத்த தனி மனிதரையும்விட, அந்த மனிதரையும் அவருக்கு மேற்பட்ட பலரையும் கொண்ட ஒரு சபை எத்துணையோ பங்கு பெரியதாகவே இருக்க முடியும் என்பதை யாரே மறுக்க வல்லார்?

மாளவ்யா பெரியவர் தாம்; ஆனல் மாளவ்யாவை விடக் காங்கிரஸ் பெரியதென்பதை மறுக்க முடியுமா? மாளவ்யா செல்வாக்குள்ளவரே; ஆனல் காங்கிரசின் செல்வாக்கு மாளவ்யாவின் செல்வாக்குக்குக் குறைவுபட்டதென எந்த அறிஞரும் கூறத்துணிவரா? மாளவ்யா தியாகியே; ஆ னல் தியாகிகட்கெல்லாம் உறைவிடமாகிய காங்கிரசின் முன் அது எம்மாத்திரம்?

இதனல் மாளவ்யாவை நாம் குறைத்துப் பேசுவதாக எவரும் எண்ணமாட்டார். மாளவ்யா காங்கிரசுக்கு விரோதமாகத் தேர்தலில் வேலை செய்யப்போவதாகக் கதைகள் கட்டப்படுகின்றன. அவர் அநேகமாக அப்படிச் செய்ய மாட்டார். அப்படி அவர் நினைத்தாராயினும் அது காரணமாகக் காங்கிரஸ் வீழ்ந்து விடும் என்ற அச்சம் உண்மைக் காங்கிரஸ்காரனுக்கு வேண்டுவதில்லை. உண்மையில் இமய முதல் குமரி வரைப் பரந்துள்ளது காங்கிரசின் புகழ். ஒரு தனி மனிதரோ சில தனி மனிதர்களோ வீழ்த்தக்கூடிய நிலைமையில் காங்கிரஸ் இருக்குமானல் அது வீழ்வதைப் பற்றித்தான் ஏன் கவலைப்பட வேண்டும்?

'மாளவ்யா காங்கிரசை எதிர்த்துச் சட்டசபைத் தேர்தலுக்கு நின்றால் வடநாடு முழுமையும் அவர் அடிக்கீழ் ஒதுங்கிக் காங்கிரசைத் தோற்று ஓடும்படி செய்துவிடும்' எனக் 'காங்கிரஸ் அடையப்போகும் தோல்வியை எண்ணி' நீலிக் கண்ணீர் விடுகின்றார் சில தமிழ் நாட்டுப் பழந் தேச பக்தர்! இவர் தேர்தல் பிரசார வேலைப் பாசாங்கு இது என்பதை யாரே அறியார்? வீண் ஆரவாரத்தாலும் அட்டகாசத்தாலும் நாட்டு மக்களை ஏமாற்றிச் சட்டசபைப் பீடங்களில் ஏறி விடலாம் என யாராவது கருதுவார்களானல் அவர்கள் ஏமாற்றமடைவது உறுதி. அந்தக் காலம் மலையேறி விட்டது. யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை நாடு நன்ருக அறிந்து கொண்டிருக்கிறது. மாளவ்யா வாகட்டும்; ஆனே யாகட்டும்; மற்ற எவராகட்டும். காங்கிரஸ் என்ற சூரியன்முன் மற்றையோர் மின்மினிகளே. இதைக்கூட நாடு இன்னும் உணரவில்லை யென்று நாம் நினைக்கவில்லை.

இடிமுழக்கம்

ஆஸ்திரியன் கலகம்

சென்ற மாத இறுதியில் ஆஸ்திரியாவில் உள்நாட்டுக் கலகம் ஏற்பட்டு சான்சல்லரா யிருந்த டால்பஸ் கொலை செய்யப்பட்டார். அக்கலகத்தின் காரணபூதரா யிருந்தவர்கள் நாஜியக்கக்காரர்களாம். கலகத்தைப்பற்றிய செய்தியை நோக்கும்போது, பலர் இறந்து போனதாகவும் ஆயிரத்திற்கு மேல் நாஜியர் கைதுசெய்யப்பட் டிருப்பதாகவும் தெரிகிறது. எவ்வழியிலோ இக் கலகம் இப்போது அடக்கப்பட்டு, தேசத்தில் சற்று அமைதி நிலவியது போல் காணப்படுகிறது. 1913-ல் ஒரு இளவரசர் கொலை செய்யப்பட்டதற்காக உலகம் முழுவதையும் பற்றிப் பெரும் குழப்பத்தில் மூழ்கவைத்து அசைத்துவிட்ட மகாயுத்தம் முதன் முதலில் ஆஸ்திரியாவில் தான் தோற்றியது. அதுபோல் தற்போதும், யுத்தமென்னும் எரிமலையின் விளிம்பில் உட்கார்ந்து கொண்டிருக்கின்ற ஐரோப்பா, ஆஸ்திரிய சான்சலர் கொலை செய்யப்பட்டதைக் கண்டதும் எரிமலை உடைந்து விடுமோவென்று மிகவும் அஞ்சியது. நல்ல வேளையாக டால்பஸ்கொலை அவ்வளவாக வலிமை பெற வில்லை! டால்பஸ் கொலைக்கு ஒரு வகையில் அவரே காரணமென்று கூறலாம். அவர் தமக்கிருந்த ஒரு 'மைனரிட்டி'க் கட்சி உதவியை வைத்துக் கொண்டு அபேத வாதிகளை அழித்துத் தம் இரத்த வெறியைக் காண்பித்துக் கொண்டதோடன்றி, மறைமுகமாக அவருக் கெதிராய் வேலை செய்து கொண்டிருந்த நாஜியர்கள் கட்சி பலமடைய ஓர் தருணத்தைக் கொடுத்து விட்டார். அபேதவாதிகள் அழிக்கப்படா திருப்பார்களேயாயின் நாஜியரும் அவர்களும் மாறுபட்டு ஒருவருக்கொருவர் எதிரிகளாகவே இருந்து கொண்டிருப்பர். அப்போது டால்பஸுக்குத் தம் கட்சியை வலுப்படுத்திக்கொள்ளும் சந்தர்ப்ப மொன்று கிடைத்திருக்கும். அவ்வாறு செய்யாது போனமையால் எஞ்சியிருந்த ஒரு சில அபேத வாதிகளும் நாஜியர்களோடு சேர்ந்துகொண்டு பழிக்குப் பழி வாங்கினர்களென்று தெரிகிறது. ஆகவே டால்பசின் மரணம் அரசியல் தந்திரிகட்கு ஓர் படிப்பினையாக இருக்கலாம்.

நடக்க உத்தரவில்லை!

சிறைப்பட்டிருக்கும் பண்டித ஜவஹர்லால் நேருவுக்கு நடக்க உத்தரவில்லை போலும்! சென்றவாரம் டேராடூனி லிருந்துவந்த ஒரு செய்தியால் சிறையதிகாரிகள் ஒன்றுவிட்ட நாளையில் நடக்கலாமென்று பண்டிதருக்குச் சொன்னதாகவும், அவர் அங்கிபந்தனை

யை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டதாகவும் தெரிகிறது. ஜெயிலுக்குள் ஒரு மனிதன்—அதிலும் எவ்வளவோ சுகபோகங்களிலிருந்த ஒரு தியாகி—தாராளமாக நடப்பதற்குக் கூட உரிமை பெற்றிருக்கவில்லையென்றால் எந்த இந்தியனும் வருந்தாமலிருக்க முடியாது. ஒரு அரசியல் கைதி நடப்பதனால் அவருடைய உடம்புதான் கொஞ்சம் சௌஸ்தமடையக் கூடுமே தவிர, வேறு சிறைக்கோ சிறை அதிகாரிகட்கோ என்ன கெடுதி வந்துவிடக் கூடுமென்பது நம்மால் யூகிக்க முடியவில்லை. ஒரு கைதி சிறைப்பட்டிருக்குங் காலமளவும் நன்றாகப் பாதுகாத்து வெளியே விடவேண்டிய பொறுப்பை ஏற்றிருக்கும் சிறையதிகாரிகள் மேற் கூறியவாறு நிபந்தனை விதித்தது வருந்தத்தகுந்ததாகும்.


லஞ்சத்தின் பரிசு

ருஷ்யாவில் யூரால் இயந்திர சாலையில் வேலைசெய்து கொண்டிருந்த ஐந்து எஞ்ஜினீயர்களும், வேலைக்காரர்கள் அறுவரும் சேர்ந்து அச்சாலையில் நெருப்பை மூட்டிவிட்டார்கள். அவ்வாறு செய்வதற்குக்காரணம், இயந்திரசாலை அழிந்துவிட்டால், வெளிநாடுகட்கு "ஆர்டர்" கொடுத்துப் புதிய சாமான்களை வரவழைக்கையில், இடையில் நின்று தாம் லாபமடைந்து கொள்ளலாமென்ற ஆசையாகும். உண்மையில் அவ்விஞ்ஜினீயர்கள் வெளிநாட்டுக்காரர்களின் யோசனையின் பேரிலேயே அவ்வாறு செய்தார்கள் என்று சொல்லப்போதிய ருஜு விருக்கிறது. இதனைக் கண்டுபிடித்துக்கொண்ட சோவியத் சர்க்கார் எஞ்ஜினீயர்கள் ஐவரையும் சுட்டுக் கொன்றுவிடுமாறும், மற்ற ஆறுவேலைக்காரர்களையும் சிறையிலடைக்குமாறும் தீர்ப்புக் கூறினர். ருஷியாவில் எத்தகைய குற்றத்தை மன்னித்தாலும் லஞ்சம் வாங்குவதைப் பொறுக்கமாட்டார்கள். அத்தீய வழக்கத்திற்கு அவர்கள் கொடுக்கும் பரிசு மரண தண்டனை பொன்றே. இவ்விதச் சட்டமிருப்பதால் ருஷிய ஆட்சிமுறையில் மிகுந்த ஒழுங்குகாணப்படுகிறது. இந்த வழக்கத்தை இதர கவர்ன்மெண்டுகளும் கையாளுவானால் ஆளுவோர் ஆளப்படுவோர்கட்குள் தகராறு காணப்படமாட்டாது.

மகாத்மா ஸ்காலர்ஷிப்

பிரிட்டிஷ் கயானாவில் படிக்கும் இந்தியச் சிறுவர் சிறுமியர்கட்காக 800 பவுன் மதிப்புள்ள ஒரு ஸ்காலர்ஷிப்பை மகாத்மா காந்தியின் பெயரால் கொடுக்க நிச்சயித்திருக்கிறார்கள். இதற்கு முன்னின்றுழைத்தவர் சட்டசபை அங்கத்தினரான திரு. ஏ. இ. சீராம் அவர்களாவர். பல ஆயிரம் மைல்களுக்கப்பால் வதியும் இந்தியர்கள் காந்திஜீ பெயரால் ஸ்காலர்ஷிப் கொடுக்க நினைப்பது அவர்கள் காந்திஜீ பால் காண்பிக்கும் பக்திக்கு எடுத்துக்காட்டன்றோ?

வந்தது. பத்திரிகை அழகாக நல்ல காகிதத்தில் அமைந்திருக்கின்றது. கிரௌன் 1-க்கு 4 அளவிலிருக்கும் இப்பத்திரிகையில், பல நல்ல கட்டுரைகளும், துண்டுத் துணுக்குகளும், ஆசிரியர் குறிப்புகளும் காணப்படுகின்றன. கட்டுரைகளை நோக்கின் அபேதவாதக் கட்சியைச் சார்ந்ததென்று யூகிக்க விடமிருக்கிறது. தனிப் பிரதி அணா 4. வருடச் சந்தா ரூபாய் 3. வேண்டுவோர் "ந்யூ ஏஜ்", நெ. 3, கொண்டிசெட்டித் தெரு, சென்னை என்ற விலாசத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.



சென்னை மாகாணக் கல்லூரி கணித சங்கத்தின் திறப்பு விழாப் பிரசங்கத்தை கனம் ஜஸ்டிஸ் ஸர். வி. ராமேசம் அவர்கள் ஆற்றினர். —P.P.B.

மதிப்புரை.

"காந்தி"

திரு. டி. எஸ். சொக்கலிங்கம் பிள்ளை அவர்களை ஆசிரியராகக் கொண்டிருக்கும் "காந்தி"ப் பத்திரிகையின் வாரம் இருமுறைப்பதிப்பு மீண்டும் வெளிவரத் தொடங்கி யிருக்கிறது. அண்மையில் நடைபெறப்போகும் சட்டசபைத் தேர்தலை யொட்டியே இது வெளிவந்திருப்பதாகத் தெரிகிறது. இது காங்கிரஸ் கட்சியை ஆதரிக்கிறது. தனிப்பிரதியின் விலை காலணா. 29, செம்புதாஸ் தெரு, சென்னை என்ற விலாசத்திற்கு கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

"ந்யூ ஏஜ்"

இப்பெயருடன் திரு. இ. கிருஷ்ண அய்யரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்திருக்கும் மாத சஞ்சிகையின் இரண்டாவது இதழ் நம் பார்வைக்கு

தாயும் பிள்ளையும்

இப்புத்தகம், இலங்கை அரசினர் வைத்தியப் பகுதியைச் சேர்ந்த திரு. ச. இராசரத்தினம் அவர்களால் எழுதப்பட்டது. இதில் குழந்தைப்பேறு, பிள்ளைவளர்த்தல், கருப்ப இயல்பு முதலிய பெண்கள் (ஆடவரும் கூட) தெரிந்திருக்க வேண்டிய பல விஷயங்கள் தொகுத்து எழுதப்பட்டுள்ளன. பெற்றோர் இதனைப் படிப்பதன் மூலம் மிகவும் நலமடைவர். புத்தகம் நல்ல காகிதத்தில் கிரௌன் 1-க்கு 8 அளவில் அச்சிடப்பட்டிருக்கிறது. அறுபது பக்கங்களுடைய இப் புத்தகத்தின் விலை அணா 8. கிடைக்குமிடம் ச. இராசரத்தினம் அவர்கள், Watawala, Ceylon.

"ஊழிய"னைப் பற்றிய மதிப்புரைகள்

"ஜெயபாரதி"

7–7–34.

பிரபல தமிழ் பத்திரிகாசிரியரான ஸ்ரீமான் ராய. சொக்கலிங்கம் அவர்களின் "ஊழியன்" எனும் தேசிய சித்திர வாரப் பத்திரிகையின் 14-வது மலரின் முதல் இதழ் சென்னை தம்புசெட்டித்தெரு 56 நெ. "ஊழியன்" கட்டிடத்திலிருந்து வரப்பெற்ருேம். நாம் அதைப் பூர்ண மனதுடன் வரவேற்கிருேம்.

இதில் பல உயரிய வர்ண சித்திரப் படங்களுடன், நற்றமிழ் நடையில் அரிய விஷயங்கள் அடங்கிய அறிஞர்களின் கட்டுரைகள் பல வெளி வந்திருக்கின்றன.

"காந்தி"

27–7–34.

காரைக்குடியில் பிரசுரமாய்க் கொண்டிருந்த "ஊழியன்" பத்திரிகையின் ஆசிரியர் திரு. ராய. சொக்கலிங்கம் அவர்கள் சட்டமறுப்பு இயக்கத்தில் ஈடுபட்டுச் சிறை சென்றதால் சில காலம் பத்திரிகை நின்றிருந்தது. இப்பொழுது "ஊழியன்" பத்திரிகை புதிய உருவத்தில் சென்னையிலிருந்து பிரசுரமாகிறது. திரு. ராய. சொக்கலிங்கம் அவர்களே இந்தப் பத்திரிகைக்கு ஆசிரியராயிருந்து நடத்தி வருகிருர். பத்திரிகை கால் டிம்மி சைஸில் வெளிவருகிறது. தேசியத்தை ஆதரித்துப் பல கட்டுரைகளும், ராய. சொ. எழுதிய பல பாட்டுக்களும் பிரசுரமாகின்றன. மிகவும் அழகான அட்டையும் உள் பக்கத்திலுள்ள ஏராளமான படங்களும் பத்திரிகையின் உருவத்தைச் சிறப்பிக்கின்றன.

"இந்து நேசன்"

28–7–34.

"ஊழியன்":—இப்பெயர்கொண்ட வாராந்த சகோதரத் தமிழ்ப் பத்திரிகையின் 14-ம் மலரின் 4-ம் இதழ் வரப்பெற்று அக மகிழ்ந்தோம். இதுகாறும் காரைக்குடியிலிருந்து பிரசுரமாகி வந்த இப் பத்திரிகை இப்போது சென்னை தம்புசெட்டித் தெருவிலுள்ள 56-ம் நம்பரிலிருந்து வெளிவருவதாகத் தெரிகிறது. பத்திரிகையிற் பொறுக்கியெடுத்த வியாசங்களும் இனிமை தருங்கதைகளும் தேசிய மணங் கமழும் விமர்சனங்களும் நிரம்பியுள. அன்றியும் ஆங்காங்கு சித்திரப் படங்களும் திகழ்கின்றன. தமிழர்க்கு நல்விருந்தளிக்கும் இப் பத்திரிகை நம்மத்தியில் வந்திருப்பது தேச பாஷாபி விருத்திக்குப் போதரவு அளிப்பதுபற்றி அதனை நல்வரவேற்றுப் பாராட்டுகிருேம். தமிழர்க்கு நற்சேவை புரிய இது சிறிதும் பின்வாங்காதென்பது திண்ணம். இதன் லக்ஷியம் நிறைவேற இறைவன் அருள் பாலிப்பானாக.

"மணிக்கொடி"

29–7–34.

செட்டிமார் நாட்டைச் சேர்ந்த காரைக்குடி நகரிலிருந்து, சென்ற பல வருஷங்களாக "ஊழியன்" வாரப் பத்திரிகை வெளிவந்து கொண்டிருந்ததைத் தமிழுலகம் நன்கறிந்திருக்கும். "ஊழியன்" பத்திரிகையின் ஆசிரியர், திரு. ராய. சொக்கலிங்கன், நாட்டுக்கோட்டை நகரத்தார் மரபைச் சேர்ந்தவர். கொள்கையை, விடாப் பிடியாகப் பற்றிக்கொண்டு, வினையாற்றும் ஒரு சில காந்தி சீடர்களில் இவர் ஒருவர். சட்ட மறுப்பு இயக்கத்தில், இவர் ஒரு ஆண்டு, சிறையில் வதிந்திருக்கிருர்.

"ஊழியன்," 'நகரத்தார்களின்' சமூகத் திருத்தச் சேவைக்காகத் தோன்றினுைம், தீவிரமாக அரசியலில் புகுந்துகொண்டு, காங்கிரசின் ஆக்ஞைக்குக் கட்டுப்பட்டு, எப்பொழுதும் வெளிவந்திருக்கிருன். ஊழியனுக்குத் தனித் தலைவர் எவர் பேரிலும் மோகமாவது, பகைமையாவது, வெறுப்பாவது கிடையாது. காங்கிரஸ் ஆணை யொன்றே அவன் பெரிதும் பாராட்டும் சட்டமாகும்.

தேசியப் பத்திரிகைக்கு நேரக்கூடிய அவகேடுகளெல்லாம், "ஊழியனு"க்கு நேர்ந்தன. ஜாமீன் கேட்கப்பட்டது; ஆசிரியர் சிறைவாய்ப்பட்டார்; பத்திரிகை சிறிது காலம் நிறுத்தப்பெற்றது. என்றுலும், "ஊழியன்" ஆசிரியர் ராய. சொக்கலிங்கன் அபரிமிதமான நாட்டுப் பற்றுக்கொண்டவராதலின், தளராத ஊக்கத்துடன் இப்பொழுது, "ஊழியனை," சென்னை நகரில் வெளிக்கொணர்ந்திருக்கிருர். "ஊழியன்," இப்பொழுது சித்திரப் படங்கள் கொண்ட வாரப் பத்திரிகையாக மிளிர்கின்றது. 48-பக்கங்கள் கொண்டது. வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் பற்றி, தேர்ந்த கட்டுரைகளும், குறிப்புகளும், சிறு கதைகளும் "ஊழியனி"ல் காணப்படுகின்றன.

ராய. சொக்கலிங்கன் வெறும் தமிழ்ப் பண்டிதர் அல்ல; நல்ல கற்பனையுள்ளவர்; கவிதை புனையும் ஆற்றல் அமையப் பெற்றவர். அவருடைய சிறைவாச காலத்தில், அவர் பாடியுள்ள கவிதைகள் பல, இப்பொழுது "ஊழியனை" அலங்கரிக்கின்றன.

காங்கிரசுக்காக உழைத்த "ஊழியன்," காங்கிரஸ் வலுவடையப்போகும் இச்சமயத்தில் வெளி வந்ததைக் கண்டு மகிழ்ச்சியுற்று, சகோதரனை வரவேற்கின்ருேம்.

——

உலகில் சிறிய குழந்தை

உலகில் சிறிய குழந்தை பிரிட்டனில் வால் தாம் ஸ்டவ் என்ற ஊரில் இருக்கிறது. அதன் பெயர் ஆஞ்சல மார்ட்டன். அதன் எடை 1½ பவுன். பிறந்தபோது 1 பவுன் ¾ ஔன்ஸ் இருந்தது. தினசரி அக் குழந்தை சுமார் ஒரு அவுன்ஸ் வளருகிறதாம். பிராந்தியும் பாலுமே அதன் உணவாம். இவ்வுணவை பௌண்டன் பேனு "பில்லரி"னல் முகந்து கொடுக்கிருர்கள்.

காமண்ட் பிரிட்டிஷ்

காமண்ட் பிரிட்டிஷ் ஒரு பெரிய நடிகரென்று ஆங்கில சினிமா அன்பர்களெல்லாம் ஏகமுகமாக அபிப்பிராயப் படுகிருர்கள். "நான் ஓர் ஒற்றன்" என்ற படத்தில் மிகத் திறமையாக நடித்திருக்கிருர். ஆதலால் அக்கதையின் மூன்று சீன்கள் பத்திரிகையில் வெளியிடப்பட்டன.

திருப் பொன்னூசல்.

ராய. சோ.



பாயிரம்

அகவற்பா

ஐயா யிரத்துமுப் பத்து நான்கென
எய்திய கலியாங் கீரச யாண்டில்
ஆனித் திங்கள் அணிபத் தொன்பான்
பெருநாள் தன்னில் பீடார் காந்தி
திருப்பொன் னூசல் சீர்சால் தமிழில்
சொற்றனன் ராய சொக்க லிங்கன்
வேலூர் அரண்மனை மேவிய நாளென்.

ஏரார் இளங்கொடியீர் ! எங்கள் பெருமானூர்
வாரார் திருமேனி வயங்கும் எழில்பாடிச்
சீரார் ஒளிவீசு திங்கள் முகம்பாடிக்
காரார் அருள்பொழியும் கருணை விழிபாடி
நாரார் அமிழ்தொழுகும் நல்வாய் கனிபாடி
ஓரார் உணர்வரிய ஒற்றைக் கதர்பாடி
நோரார் அதிசயிக்கும் நேர்மைப் புதியமுறைப்
போரார் திறம்பாடிப் பொன்னூசல் ஆடாமோ ! (௬)

"கம்ப மதயானைக் கழுத்தகத்தின்" மீதமரும்
பைம்பொன் முடியரசர்பணியும் பெருங் குணஞ்சேர்
நம்பன், அறம்வளர்க்கும் நல்லோன் திறம்பாடிக்
கொம்பர் வழிந்தொழுகு கொழுந்தேன் கொடுகலங்கொள்
உம்பர் அமிழ்தளிந்த ஒண்டீஞ் சுவைத்தமிழில்
செம்ப வளமுத்தம் சிறிதுபுறம் பொசிய
வம்பார் கருங்குழலீர் ! மணமாலை வாழ்வண்டு
"பொம்பொம்" எனமுழங்கப் பொன்னூசல் ஆடாமோ ! (எ)

காதார் குழையாடக் கழைத்தோள் உயர்ந்தாட
மீதார் துகிலாட மேனி சிறிதாடத்
தூதார் துவண்டாடத் துடிநேர் இடையாட
வாதார் விழியாட மணிக்கை வளையாடத்
தாதார் அணியாடச் சதங்கைப் பதமாட
வேதா வியப்பெய்த விளங்கும் இதழ்திறந்து
மாதா மடிமேல் வளர்வோன் புகழ்பாடிப்
போதார் குழலாடப் பொன்னூசல் ஆடாமோ ! (அ)

வானம் நனிபுதைப்ப வளர்ந்த புகழாளன் !
"தானம் தவமிரண்டும்" தங்கும் வனப்புடையான் !
ஞானம் மிகவுடையான் ! ஞாலந் தனிற்பெரியான் !
ஊனம் சிறிதுமிலான் ! ஒற்றைக் கதருடையான் !
மானக் குழலினிசை வண்யாழ் மிழற்றோசை
கானக் குயிலொலியும் கரும்பும் விரும்பமுதும்
தேனும் குழைத்தமொழிச் சீரீர் ! திசைகடந்து
போன புகழ்பாடிப் பொன்னூசல் ஆடாமோ ! (௯)

சாந்தம் பொறைகருணை தண்மைசீர் புனிதமிசை
வாய்ந்த அறிவேந்தி மாநாடு வாழவந்த
வேந்தன் உயர்காந்தி மெய்சேர்ந்த புகழ்பாடி
ஏய்ந்த கருத்தறிவும் எழிலுமிணை காதலரைக்
காந்தள் வளையணிந்த கவவுக்கை நெகிழாமல்
தேய்ந்த இடைவருந்தச் செய்யகனி வாய்திறந்து
தோய்ந்த இளஞ்சாயல் தோகைமயில் தோற்கடித்துப்
போந்த தமிழியலீர் ! பொன்னூசல் ஆடாமோ ! (௰)

ரயில் போக்குவரவு

மதராஸ்-எழும்பூர்

மெயின் லைன்.

வண்டிப் பெயர்	புறப்படும் நேரம்	வரும் நேரம்
இண்டோ ஸிலோன் எக்ஸ்பிரஸ்	மாலை 9 0	காலை 6 40
செங்கோட்டை பாஸஞ்சர்	காலை 6 55	மாலை 7 25
கூடலூர் பாஸஞ்சர்....	மாலை 4 0	காலை 11 55
திருவனந்தபுரம் பாஸ்டு பாஸஞ்சர்....	மாலை 9 30	காலை 6 5
திருச்சி பார்சல்	மாலை 10 20	காலை 5 35

கார்டு லைன்.

வண்டிப் பெயர்	புறப்படும் நேரம்	வரும் நேரம்
தனுஷ்கோடி பாஸ்டு பாசஞ்சர்	காலை 11 15	மாலை 2 55
திருவனந்தபுரம் எக்ஸ் பிரஸ்	மாலை 7 30	காலை 7 15

மதராஸ்—ஸெண்ட்ரல்

வண்டிப் பெயர்	புறப்படும் நேரம்	வரும் நேரம்
கல்கத்தா மெயில்	மாலை 8 30	காலை 8 35
கிராண்டு டிரங்க் எக்ஸ்பிரஸ்	காலை 8 40	மாலை 4 35
பம்பாய் மெயில்	மாலை 8 40	காலை 5 55
பம்பாய் எக்ஸ்பிரஸ்	காலை 8 30	மாலை 5 0
பங்களூர் மெயில்	மாலை 9 30	காலை 6 15
,, எக்ஸ்பிரஸ்	மாலை 1 0	மாலை 2 10
,, பாஸஞ்சர்	காலை 6 15	மாலை 7 40
,, ,, ...	மாலை 9 40	காலை 5 30
ஜோலார்ப்பேட்டை பாஸஞ்சர்	மாலை 12 45	மாலை 2 0
அரக்கோணம் பாஸஞ்சர்	மாலை 5 30	—
,, ...	6 30	—
மலபார் எக்ஸ்பிரஸ்	8 5	காலை 7 15
ப்ளூமௌண்டன் எக்ஸ்பிரஸ்	9 15	6 35

நமது ஏஜெண்டுகள்.

1.	காரைக்குடி	S. மெய்யப்ப செட்டியார்.
2.	தேவகோட்டை	கொலம்பியா ஹவுஸ், ஆர்சு ரோடு.
3.	கோனுபட்டு	கோநகர் தனலெக்ஷுமி ஸ்டோர்ஸ்.
4.	மதுரை	R. ராமலிங்கம், கருகப்பிலைக்காரத் தெரு, வடக்கு [மாசிவீதி.
5.	விருதுநகர்	P. பழனிக்குமாரு பிள்ளை, நியூஸ் ஏஜண்டு.
6.	மாயவரம்	M. K. சுந்தரம், கதர் ஸ்டோர்ஸ்.
7.	கோயம்புத்தூர்	L. ராஜகோபால், நியூஸ் ஏஜண்டு, பனங்காட் [ரோட்.
8.	ஒலவக்கோடு	மலபார் நியூஸ் ஏஜன்ஸி, நியூஸ் ஏஜண்டு.
9.	திருப்பூர்	P. R. துரைசாமி அய்யர், ஸவுத் இந்தியன் [நியூஸ் ஏஜண்டு.
10.	ராணிப்பேட்டை	S. மோகன முதலியார்.
11.	கோட்டாறு	C. K. கணேசன், நாஷனல் நியூஸ் ஏஜண்டு,
12.	ரேங்கூன்	V. B. சாஸ்திரி, ஜெனரல் நியூஸ் ஏஜன்ஸி, [244, phauyre st.
13.	கொழும்பு	K. N. S. பிள்ளை, No 281, 2-வது டிவிஷன் மருதானை. (Maradana.)
14.	திருச்சிறுப்பள்ளி	S. மாசிலாமணிப் பிள்ளை, தெப்பகுளம்.

மேற்கண்ட ஊர்கள் தவிர மற்ற எல்லாப் பெரிய ஊர்களுக்கும் நமது "ஊழியன்" பத்திரிகையை விற்பனை செய்ய

ஏஜண்டுகள் தேவை.

நிபந்தனைகட்குக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதுக.

டிபாஸிடில்லாமல் ஏஜன்ஸி ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

காரியஸ்தர்,

"ஊழியன்" காரியாலயம்,

56. தம்பு செட்டித் தெரு, சென்னை.

சினிமாப் பகுதி

எறும்பு நர்த்தனம்

யுனைட்டெட் ஆர்ட்டிஸ்டுக் கம்பெனியார் எறும்பு நர்த்தனம் செய்யும் ஒருவிதப் புதிய சினிமாப் படத்தைத் தயாரித்திருக்கிறார்கள். அதில் ஒரு வெட்டுக்கிளி அழகாகப் பிடில் வாசிக்கிறது. அப்பிடில் ஓசைக்கிசைந்த வண்ணம் எறும்பு நர்த்தனம் செய்கிறது. "மிக்கி மௌஸ்" என்ற படத்தைப் பார்த்தோர்க்கு இது பற்றிக் கூறவேண்டியதில்லை. இந்தப் படத்திற்காகும் வேடிக்கைச் சித்திரங்களை எழுதியவர் வால்ட் டிஸ்னியாவர். இவர் தம் படங்கட்குக் கலர் போட்டிருக்கிறார்.

மின்வெட்டு வகுப்பு

கூந்தலைப் பெண்கள் சீவும்போது தலையில் நேராக வகுப்பு எடுக்கிறார்களல்லவா? இதுபோல டான்பார்க் லே என்ற ஹாலிவுட் சினிமா ஆக்டர் தன் கிராப்பைக் கொஞ்சம் வேடிக்கையாகச் சீவியிருக்கிறார். வகுப்பை ஒழுங்காக வைப்பதற்குப் பதிலாக வளைத்து வளைத்து எடுத்திருக்கிறார். அதனைத் திடீரெனப் பார்த்துவிட்டால் வானத்தில் பிரகாசிக்கும் மின்னல் கொடிபோலிருக்கும். இதனை அவர் மின்வெட்டு வகுப்பு என்கின்றாராம். பல வருடங்களாக இப்படியே பழகிவிட்டதால் தலைமயிர் வேறு வழியில் சீவ வருவதில்லை.

பரிசுத்த இயக்கக்காரர்கள்

கிருஸ்தவக் கோயில்கள் பல சினிமாப்படங்களின் மீது போர் தொடங்கியுள. சில படங்கள் நல்லொழுக்கத்தைக் கெடுத்து காம உணர்ச்சியை எழுப்புவதா யிருக்கின்ற தென்று கிருஸ்தவக் கோயில்கள் கூறுகின்றன. இவ்வாறு கூறிச் சீர்திருத்தம் வேண்டும் இயக்கத்திற்குப் பரிசுத்த இயக்கம் என்று பெயர். இவ்வியக்கக்காரர்கள் அமெரிக்காவில் மேவெஸ்டு என்ற மிகப் பிரக்யாதி பெற்ற நடிகையால் நடிக்கப்பட்ட "அது பாதகமில்லை" என்ற படத்தையும், டொலொரெஸ் டெல்ரியோ என்பவர் நடித்த "மாடம் டுபரி" என்ற படத்தையும் குறிவைத்து விட்டார்கள். அதன் பயனாக ந்யூயார்க் படப் பரிசோதனைப்போர்டு பல சம்பாஷணைகளையும் சீன்களையும் தடைசெய்து விட்டது. எனவே முதற்படம் பல மாற்றங்களோடு, பல சம்பாஷணைகளை விட்டுவிட்டு இரண்டாவது திருத்தி அமைக்கப்படுகிறது. இதேபோல மாடம் டுபரியில் ஒரு படுக்கையறை சீன் தடைசெய்யப்பட்டு விட்டது. ஆதலால் இப்போது அதனையும் படுக்கை சீனையொழித்துத் திருத்தியமைக்கின்றார்கள். பரிசுத்த இயக்கக்காரர்கள் 'எங்கள் கொள்கைப்படி எல்லாம் அமைந்திருக்கவேண்டும்; இல்லையேல் படமேயிருக்கவேண்டா'மென்று முனைந்து வருகிறார்கள்.

அஜெண்டாவில் மில்தகராறு

அஜெண்டா கம்பெனியார் படம் தயாரிப்பதில் மிகவும் சுறுசுறுப்புக் காண்பித்து வருகிறார்கள். சமீபத்தில் மூன்று படங்கள் பூர்த்தியாகி வெளிவரும். அடுத்தபடியாக "ஆலை" (மில்) என்ற படம் தயார் செய்யப்படும். இப்படத்தின் கதை முன்ஷி பிரேம்சந்த் என்ற பிரபல ஹிந்து நாவலாசிரியரால் எழுதப்பட்டது. இந்நாவலில் பம்பாயில் தற்போது நடைபெறுகின்ற மில் தொழிலாளர் இயக்கமும் அதோடு மனித வாழ்க்கையிலுள்ள பலரசமான குறிப்புகளும் தரப்பட்டுள்ளன. அக்கதையின் லக்ஷ்யம் முதலாளிகட்கும் தொழிலாளிகட்கும் நல்ல மனப்பான்மை இருந்து வரவேண்டு மென்பதும் தொழிலாளிகள் மிகவும் கஷ்டப்படுகின்றார்களென்பதுமாம்.

ஹாலிவுட் குரலோசை

"ஹாலிவுட்டில் நல்ல குரலோசையுள்ள பன்னிரண்டு பேர் யார்?" என்ற கேள்வி பிரபல அமெரிக்க நாடகக்காரரும், குரலோசையைக் கண்டுபிடிப்பதில் பெரிய நிபுணருமான ஆலிவர் ஹின்ஸ்டெல் என்பவரிடம் போடப்பட்டது. அவர் அடியில் வரும் பன்னிருவரைக் குறிப்பிட்டார். லயோனல் பாரிமூல், ஜியார்ஜ் ஆர்லிஸ், கிளார்க் காபில், கிரேட்டா கார்போ, ஆன் ஹார்டிங், காதெரைன் ஹெப்பேர்ன், ஹெர்பெர்ட் மார்ஷல், ராபர்ட் மாண்ட்கோமரி, மே ராப்சன், நோரா ஷீயரர், பீட் ஸ்மித், லூவிஸ் ஸ்டோன்.

இவ்வாறு பன்னிருவரையும் குறிப்பிட்டு விட்டு தன் தேர்தலைப் பலப்படுத்துவதற்காக ஹின்ஸ்டெல் "இந்த நடிகர்களின் குரலோசை பெரிதும் வித்தியாசப்பட்டது. அதன் தனித்த தன்மையினால் அதனை யுடையவர்கள் மிகவும் குணம் அடையக்கூடும்" என்றார். மேலும் அவர் கூறியதாவது:—சினிமாவில் வெற்றிகரமான பேச்சு ஏற்படுதற்கு நீங்கள் வெளியே தோற்ற வேண்டுமென்பது கூட இல்லை. உதாரணமாக பீட் ஸ்மித் என்ற விகடப் பேச்சுக்காரர் சீனில் அபூர்வமாகவே தோன்றுகிறார். அவரது குரலோசைக்கு ஒருவிதமான கவர்ச்சி யிருக்கிறது.

நடிகைகளின் முத்தமில்லை

அமெரிக்காவில் சினிமா நடிகைகள் வெளியே வரும்போது தாய்மார்கள் தம் குழந்தைகளைக் கையில் கொடுப்பதும், நடிகைகள் அன்புடன் முத்தம் கொடுப்பதும் வழக்கம். அவ்வாறு முத்தம் பெற்றுக் கொள்வதால் குழந்தைகட்குக் கியாதி ஏற்படுமென்பது நம்பிக்கை. இனிமேல் நடிகைகளிடமிருந்து முத்தம் பெறுவது முடியாத செயலென்று தெரிகிறது. காரணம் பீப் டானியல்ஸ் ஒரு தடவை முத்தம் கொடுத்தாராம் ஒரு குழந்தைக்கு.—அது நோயுற்றது போலும்—அவருடைய வாயிலெல்லாம் ஒருவிதமான புண் தோன்றிவிட்டதாம். ஆதலால் சில மாதங்கள் ஆஸ்பத்திரியை அடைந்து குணப்படுத்திக் கொள்ள வேண்டி வந்ததாம்.

ஹாலிவுட்டில் ஆங்கில நடிகி

இங்கிலாந்திலுள்ள சிறந்த நடிக்கைகளுள் எவலின்லேய் என்பவர் ஒருவர். இவரைப்போல் அழகிகள் ஆங்கில சினிமாவுலகில் அதிகமில்லையாம். அவர் சமீபத்தில் ஹாலிவுட்டிற்குச் சென்று ஒரு படத்தில் நடிப்பார். சில மாதங்கட்கு முன்பு சாம் கால்டுவில் ஸ்ரீமதி எவலினை ஹாலிவுட்டிற்கு (முதல்தடவை) போகுமாறு தூண்டினர். அதன் மேல் அவர் சென்று "ஒரு தேவலோக இரவு" என்ற படத்தில் நடித்தார். அது அவ்வளவு வெற்றிகரமாக முடியவில்லை. ஆதலால் அவர் ஹாலிவுட்டிற்குச் செல்லும் கருத்தைக் கை விட்டு விட்டார். ஆனால் காமண்ட் பிரிட்டிஷ் வற்புறுத்தி பேசும் சினிமாவில் நடிக்கச் சொன்னர். அவ்வாறு நடித்ததில் பெரிய வெற்றி கிடைத்தது. ஆதலால் மீட்ரோ கோல்ட்வின் மேயர் கம்பெனியார் அவரைப் பிடித்துக்கொண்டனர். தற்போது இக்கம்பெனியார்கட்காகத் தான் ஹாலிவுட்டிற்குச் செல்கிறார்.

"மகாத்மா அரசியல் வாதியல்ல"

சாது வாஸ்வானி பேசுகிறார்

மகாத்மா காந்தியைப்பற்றி, சாது வாஸ்வானி "பத்திரிகை" நிருபரிடம் கூறியதாவது :—

நான் காந்திஜியை ஒரு அரசியல் வாதியென்று கருதவில்லை. என்னைப் பொறுத்த வரையில் இந்தியாவின் பிரச்னை அரசியலல்ல. பாரத மக்களின் ஜீவசாஸ்திர விஷயமொன்று இருக்கிறது. அதனையும் அதன் சட்டதிட்டங்களையும் கற்றுக்கொள்ள வேண்டும். உலகில் படைக்கும் சக்தியில்லையென்றால் வாழ்க்கையில்லை. இதனை நம்மக்கள் உணராத வரையில் சுயராஜ்யம் பெற்றுக்கொள்ள வழியில்லை.


இந்த சக்தியை நாம் ஏழைகளோடு தோழமைபூண்டு பாருபாடுடனுணர்ச்சியில்லாது தொண்டாற்ற முனைவது மூலம் வளர்த்துக்கொள்ளலாம். ஆதலால்தான் காந்திஜீக்கும் அவரது உபதேசங்கட்கும் மதிப்பேற்படுகிறது. காந்திஜீ ஓர் தேசியவாதி மட்டிலுமன்று; அவர் ஓர் ஜீவகாருண்ய மூர்த்தியாவார்.

அவரது அரசியல் படையாகிய ஒத்துழையாமைக் கருவியை இன்னும் பரிசோதிக்க வேண்டுவதுண்டு. இன்னும் ஒத்துழையாமை வெற்றியடையவில்லை என்று எனக்குத் தோற்றுகிறது. ஒருகால் அதன் காரணம், அடக்க முடியாத சக்தியை எழுப்பிவிட்டதாகவே இருக்கவேண்டும். மாயை கடவுளிடப் பெரிதென்று நிரூபித்துவிட்டாள். உங்கட்கு உங்களையே அடக்க முடியவில்லையானால் பிறர் மேல் வெற்றிகொள்ள முடியாது.

பலாத்காரப் பெருக்கம்

காந்திஜீயின் பலாத்கார மறுப்பு வருங்காலத்தில் சிலாகிக்கப்படலாம். பலாத்கார உணர்ச்சியுடையோர் எக்காலத்தையும் விட இப்போது அதிகரித்திருக்கிறார்கள் என்றாலும் சரித்திரம் காந்திஜீயின் அஹிம்சா தர்மத்தை ஆதரிக்குமென்று நம்புகிறேன். பலாத்காரம் ஜெயமடையும் காலத்தில் இந்தியாவில் ஜீவ சாஸ்திர உண்மை இராது. உலக நிலைமை அதிவிரைவில் மாறிக்கொண்டே வருகிறது. ஆகையால் நாம் நினைப்பதைவிட அதிவிரைவில் இந்தியாவுக்குச் சுதந்திரம் ஏற்பட்டுவிடும். அந்தச் சுதந்திரம் உலக சக்தி அதிகரிப்பதென்ற வாயில் வழியாக வரக்கூடும். இதனை இன்னும் தேசீய மகாசபை அறியவில்லை.

இந்தியா சுயராஜ்யத்தைத் தேடுமானால்-உலகிலுள்ள எந்த அரசினாலும் அவ்வுரிமையைத் தடை செய்துவிட முடியாது. இதன் கருத்து ஒரு கூட்டத்தார் மட்டிலும் மாற்றப்பட்டால் போதாது; ஒருபெரும் சமூகமே மாற்றமடைய வேண்டுமென்பதாகும். இதைவிட ஒரு சாம்ராஜ்யத்தின் அரசாட்சி முறையை மாற்றுவது எளிதல்ல. மிஸ்டர் காந்தி அஹிம்சா தர்மபோதகர் என்பதை எவராலும் மறுக்க முடியாது. அவர் உண்மையிலேயே அவரது எதிரிகளை விரும்புகிறார். உண்மையாக அவர்



வேலையில்லாப் பட்டதாரி

புதல்வன் :—தந்தையே என்னை ஆதரிப்பீர்களா ?

வைதீகத் தந்தை :—நல்லது. உன் குலதர்மத்தை உத்தியோகத்திற்காக விற்று விட்டாயே ?

"நிஷ்களங்கமானவர் காந்தி"

சார்லஸ் லாண்டுபோர்டு கருத்து

மிஸ்டர் சார்லஸ் லாண்டு போர்டு என்பவர் "இந்தியா—வருந்தும் நாடு" என்று ஒரு புத்தக மெழுதியிருக்கிறார். இவர் இந்தியாவின் சுயராஜ்யத்தை எவ்வளவு காலதாமதப்படுத்தலாமோ அவ்வளவு காலதாமதம் செய்ய வேண்டுமென்று நினைப்பவரானாலும் காந்திஜீயைப்பற்றி நினைக்கையில் போற்றாமலிருக்க முடியவில்லை. ஆதலால் அடியில் வருமாறு எழுதுகின்றார்:—

இந்தியா முழுதும் அஹிம்சா தத்துவம் நிரம்பி விட்டதானால்-அக்காலத்தில் தம் கொள்கைக்காகவும் தம் ஜனங்கட்காகவும் இறக்கத் தயார். அவருடைய தவம், விரதம், தன்னை வருத்திக் கொள்ளுமியல்பு, அவருடைய ஜீவகாருண்யம் முதலியவைகளெல்லாம் மிகமிக உயர்ந்தவைகளே. அவரோடு சமாளித்துக்கொள்ள முடியாதபடி இருதய சுத்தியுடனும் நிஷ்களங்கமாகவுமிருக்கிறார். அவர் தன் பொருட்டாக எதுவும்—உத்யோகமோ பணமோ—விரும்புவதில்லை. இந்தியாவிலுள்ள தனவந்தர்களின் பணப் பெட்டிகளெல்லாம் அவருக்குத் திறந்திருக்கின்றன. அவர் தனக்காக ஒன்றும் எடுத்துக்கொள்வதில்லை.

சமூகத்தில் பெண்கள் நிலை

கல்வித் திட்டம் பற்றிய ஆராய்ச்சி

(ஸ்ரீ லக்ஷ்மி N. மேனோன், M.A., L.T., LL.B. (லக்னோ)

உலகிலுள்ள பற்பல வகுப்பார்களுள்ளும், இந்தியர்கள், பெண் கல்வி விஷயத்தில் மிகவும் பிற்போக்கான நிலைமையில் காணப்படுகின்றார்கள் என்பதில் அபிப்பிராய வித்தியாசமில்லை. இந்திய ஆடவர்களில் கல்வி யறிவுடையவர் நூற்றுக்கு 15.6 (சுமார் பதினாறு)தான். பெண்களில் கல்வி கற்றோர் தொகை நூற்றுக்கு சற்றேறக் குறைய மூன்றே. இந்த விகிதத்தைப் பார்த்தால் யார்தான் இந்தியரைக் கல்வி கற்ற ஒரு வகுப்பாரென்று கூறுவார்கள்? ஆகவே இன்று பாடசாலைகளின் தொகையை அதிகப்படுத்தி கல்வியைப் பெருக்க வேண்டுமென்று எவ்லோரும் கூறுகிறார்கள். ஆனால் எத்தகைய கல்வியை நம் பெண் மக்கட்கு (ஹைஸ்கூலிலும் கல்லூரி வகுப்புகளிலும்) கொடுப்பது என்பதில் சில அபிப்பிராய வித்யாசங்கள் ஏற்படுகின்றன.

சின்னாட்களுக்கு முன்பு திரு. ஆர். சாமிநாத ஐயர் மேற்படி விஷயத்தைப் பற்றி ஓர் கட்டுரை எழுதியிருந்தார். அதில் அவர் "இப்போதிருப்பதைவிட ஏராளமான பாடசாலைகள் நிறுவப்பட வேண்டும். அதிகமான படிப்பு வசதி தரும் சாமான்கள் அமையவேண்டும். குழந்தைப் பருவத்தில் ஆண்—பெண்கள் சேர்ந்து படிக்கலாம். அப்பாலும் சிக்கனத்தைப் பொறுத்த வரையில், கலப்புப் படிப்பை ஆதரிக்கலாம்" என்கின்றார். இவ்வளவையும் நாம் மனமார வரவேற்கிறோம். ஆனால் அப்பால் அவர் "தற்போது படிப்பு வகுக்கப்பட்டிருக்கும்முறை நமது பெண்கட்கு மிகவும் பிரயோசனமற்றதாகும். இந்த நிலைமையில் இன்னும் கல்வியை அதிகப்படுத்த வேண்டுமென்று நினைப்பார்களானால் அப்படிச் செய்வதைவிட செய்யாமலிருப்பது மேலென்று சொல்லலாம்" என்கின்றார். சிலருக்குத் தற்போதிய கல்விமுறை 'நிரீஸ்வர வழி பற்றியது, இந்து வழக்க ஒழுக்கங்கட்கு முரணானது, இந்துக் கோட்பாடுகளை ஆதரியாதது, இந்து சாஸ்திரங்கட்கு எதிரானது' என்று தோற்றுவது உண்மை; ஆனால் அவர்கள், தற்போதிய ஜன சமூகம், நவீன, மேனாட்டு, வெளி தேசத்துக் கொள்கைகள் நம்மை வந்து பற்றவில்லையா வென்றும் நம் பெண் மக்கள் அதனால் இயல்புமாறிப் போகவில்லையா வென்றும் ஆலோசிக்க வேண்டும். ஆகவே மேற்படிக் கருத்தைத் தெரிவிப்பவர்களைக் கல்விப் புரட்சிக்காரர்கள் என்று சொல்ல முடியாது.

இது நிற்க, மற்றொரு சாரார், பண்டைய வழக்கங்களையும் பழக்கங்களையும் பற்றிப் பேசி உயிரைப் போக்கிக் கொள்ளாது, அவர்கள், பெண்கட்கேற்றவிடம் வீடுதான் என்ற கொள்கையை ஆதாரமாக வைத்துக்கொண்டு அதற்கான கல்வித்திட்டம் மேற்படுத்த வேண்டு மென்று போராடுகிறார்கள். அத்தகையோர்கட்குப் பெண்கள் ஹென்ரி 8-வது அரசனின் குடும்பக் கலவரத்தையும், "குவாட்ராடிக் இக்வேஷனையும்" பற்றிப் படிப்பதில் அதிகப் பிரயோசனமில்லை என்பது அபிப்பிராயம். அதற்குப் பதிலாக சங்கீதம் ஓவியம், சமையல், சலவைத் தொழில், தாலாட்டு முதலியவைற்றைப் படிக்க வேண்டுமென்கின்றார்கள். அவ்வாறு செய்தால், அப்பெண்களால் (அதாவது அத்தகைய கல்விகற்றுத் தேர்ந்துவரும் பெண்களால்) புருஷனை சந்தோஷப் படுத்தக் கூடுமா? அவர்களுக்குக் குடும்பத்தில் ஏற்படுகிற பங்கை ஒழுங்காகச் செய்யுமாற்றல் கிடைக்குமா? அவர்கள் தங்கட்குப் பிறக்கும் குழந்தைகட்குப் போதிய அறிவைப் புகட்டி வளர்க்கும் ஆற்றல்படைத்தவர்களாகிவிடுவார்களா?

ஆஷியா வாசிகளும் மேனாட்டுக் கல்வியும்

கல்வி யறிவில் மிகவும் மோசமான அல்லது அதோகதியை யடைந்திருக்கும் ஆஷியாத் தேசங்களி லிருந்து மேற் சொல்லப்பட்டது போன்ற அபிப்பிராய வித்தியாசங்கள் வெளிவருவது வருந்தத் தகுந்ததாகும். சீனா, துருக்கி—ஏன் மிகப் பிற்போக்கான சில ஐரோப்பிய தேசங்கள் கூடவும்—தம் நாட்டுக் கல்வி முறையை வகுத்த போது ஆண் பெண் பேதத்தையோ சமூகத்தில் அவர்கட்கிருக்கும் நிலைமையையோ பற்றி யோசிக்கவில்லை. மேனாட்டு முறைகளையும் அமைப்புக்களையும் அப்படியே கைக் கொள்ளுவதில் பின்னடையவுமில்லை. ஒவ்வொருவரும் படிப்புத் திட்டங்களை வகுக்கும்போது அப் படிப்புச் சுற்றுச் சார்புகட்கு ஒத்து வருமா என்றே யோசிக்க வேண்டும். மேலும் பூர்வீக வழக்க ஒழுக்கங்கட்கேற்ப நவீனப் படிப்பு முறையை அமைப்பதென்றால் அது ஓர் அர்த்தமில்லாத விஷயம். வெளிதேசங்களெல்லாம் தம்முறைகளைச் சிறிதும் அங்குமிங்கும் யோசியாதவாறு அப்படி யப்படியேதான் எடுத்துக் கையாடி யிருக்கின்றன. அன்றி, இது சீனா முறையல்லவா, அது துருக்கி முறையல்லவா வென்று ஒருபோதும் யோசித்ததில்லை. ஆனால் நம் இந்தியாவில் சிலர் வேறுவிதமாக நினைப்பதின் காரணம் அவர்கள் வெள்ளைக்காரர்களால் அடிமைப்படுத்தப்பட்டிருப்பதும் அதனால் அவர்கள் நாகரிகத்தில் கொண்டிருக்கும் வெறுப்புமாகும். நாம் எவ்வளவுக்கெவ்வளவு பண்டையப் பெருமையை யெண்ணிப் பழம் புராண சாஸ்திரங்கட்குத் தகுந்தவாறு வாழ வேண்டுமென்று நினைக்கின்றோமோ அவ்வளவுக் கவ்வளவு முன்னேறாது இருந்த விடத்திலேயே இருந்து கொண்டிருப்போம்.

நாம் அடிக்கடி பூர்வீகக்கால ஆச்சரியப் பெண்களொழுக்கத்தைக் கேள்விப் படுகிறோம். அவர்கள் குடும்பத்திற்கும் புருஷனுக்குமாக எவ்வளவோ தியாகம் செய்து விட்டதாகவும் படிக்கிறோம். இருக்கட்டும்; நான் ஒன்று கேட்கிறேன்: மேற்படி சிறந்த தியாகங்களெல்லாம் பெண்கள் தாங்களாக ஏற்றுக் கொண்டவைகளா; அல்லது சர்வாதிகாரத்துவமுள்ள ஆண்களின் வற்புறுத்தலால் பெண்கள் ஏற்று நடாத்த முன்வந்தவைகளா? மனித இயற்கையின் ஆனா ஆவன்னாவாவது தெரிந்தவர்கள் சமூகம் முன்னிறுத்தும் லக்ஷ்யங்களெல்லாம் ஒருவித சமூக சௌகரியத்

தா னென்பதை அறியாமல் போகமாட்டார்கள்.

இல்வாழ்க்கைப் பயிற்சி

அடுத்தபடியாகப் பெண்களை வீட்டு விஷயங்களைப் பார்த்துக் கொள்வதற்காக மட்டிலும் பயிற்றுவதானல் சங்கீதத்தாலும் ஓவியத்தாலும் சலவைத் தொழிலாலும், சமையற் றிறத்தாலும் அதிகமொன்றும் சாதித்துவிட முடியாது. இத்தொழில்கள், ஒரு புருஷன் சுருங்கிய வருமான முடையவனுகவும் வேலை யில்லாதவனுகவும் இருந்தால் தான், ஏதேனும் கொஞ்சம் இன்பம் கொடுக்கமுடியும். சிலர் குழந்தைகளைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் இவ்வறிவு பிரயோசனப்படுமென்று கூறுகிருர்கள். அவ்வாறு குழந்தைகளைப் பாதுகாக்க வேண்டுமென்ருல் பெற வேண்டிய அறிவு வேறு. மனோ தத்துவ சாஸ்திரம், சரீரக் கூற்று சாஸ்திரம், சுகாதார சாஸ்திரம், பொதுவான அறிவியலறிவு முதலியவை பாதுகாப்பாளருக்கு அவசியம் தெரிந்திருக்க வேண்டும். இந்த சாஸ்திர அறிவு, தற்போது போடப்பட்டிருக்கும் பாடத் திட்டத்தைவிட மிகப் பெரிது. உண்மையில் வைடமின் ஹார்மோன், எண்டோ கிரீன் கிளாண்ட் முதலிய எத்தனையோ விஷயங்கள் தெரிந்திருக்கவில்லையானல் எந்தத் தாய்க்கும் குழந்தைகளைச் சரியாக வளர்த்துவிட முடியாது. ஆதலால் இந்த விஷயங்களைத் தாய்மார்களைப் போல் தந்தையர்களும் தெரிந்திருக்க வேண்டும். இந்த இடத்தில் ஒன்றுசொல்ல விரும்புகிறேன்: அதாவது பெண்கள் வெளி வேலைகளை ஒப்புக்கொண்டு விட்டு வீட்டு வேலைகளைப் புருஷர்கட்கு விட்டுவிட்டால் அவற்றைத் திறம்பட நடாத்தும் ஆற்றலுள்ள எத்தனையோ ஆடவர்களிருக்கின்ருர்கள்.

ஆண் பெண்கள் அமைப்பில் சிலமாறுபாடு ஏய்தியிருக்கிருர்களென்பது உண்மை. ஆனல் அதற்காகச்சமூக நிலைமையில் புருஷர்களை விடத் தாழ்ந்திருக்க வேண்டுமென்பதில்லை. ஒரு காலத்தில் பெண்களைத் தாழ்த்தி வைத்திருந்தது பொருளாதார சௌகரியங்களையும் சமூக சௌகரியங்களையும் முன்னிட்டாகும். ஆனல் கைத்தொழில் புரட்சி ஏற்பட்டதும் அந்த உத்தேசங்கள் மாறுபாடடைந்து போயின. மேலும் மனேதத்துவ சாஸ்திரம் மேற்படி ஆண் பெண் வேற்றுமைகட்கு எத்தகைய சமாதானமும் சொல்லவில்லை. நவீன ஆராய்ச்சி, பிளேட்டோ வகுத்த மூன்று புருஷர் பிரிவுக்குள்ளேயே பெண்களையும் கொண்டு வருகிறது.

ஸ்தாபனங்கள், கொள்கைகளெல்லாம் காலத்துத் தகுந்தபடி மாற்றமடைய வேண்டும். ஆராய்ச்சி செய்தால் மாறிக் கொண்டு வருவதாகக் காணலாம். இது ஓர் பெரும் புரட்சிக் காலம். பெரிய அட்லாந்திக் மகாசமுத்திரம் கரை புரண்டெழுந்தாற்போல தினந்தினம் பெரும் பெரும் மாற்றங்கள் மனித சமூகத்தைப் பிடித்தாட்டுகின்றன. அந்த நிலைமையில் நாம் ஏதேதோ தத்துவம் பழங்கதை பேசித் தப்பிவிட முயன்ருல் துடைப்பத்தால் அத்லாந்திக் மகா சமுத்திரத்தைத் துடைத்துவிட முயன்ற கதையாகவே முடியும். ஆகவே பாடத்திட்டங்கள் நம் பெண்களைத் தற்காலப் புரட்சிகளோடு ஒத்துப் போகும்படியான நிலைமைக்குக் கொண்டு வரும் மாதிரியில் அமைக்கப்பட வேண்டும்.

கொஞ்சம் ஆழ்ந்து நோக்கினல் கல்வியென்பது காலத்தோடு ஒத்து இயங்கப்பழக்குவதாகும். அப்பழக்கத்தால் ஜன சமூகமே இயங்கும். வேறு பாஷையில் கூறுவதானல் கல்வி சமூகத்தைத் திருத்தியமைத்துப் புதிய புதிய லக்ஷ்யங்களைத் தரும். சமூகமென்ருல் ஆண்களும் பெண்களும் சேர்ந்ததன்ருே?

இப்போது ஆண்களும் பெண்களும் தங்கள் தங்கட்கு யுக்தமான வேலையைத் தேர்ந்தெடுக்குமுரிமை வேண்டுமென்று கூறுகிருர்கள். ஆதலால் ஒரு பெண், வீட்டு வேலை பழக விழைந்தால் அதற்கான வசதியும், உத்யோக முறையில் போகத் தகுந்த வேறு வேலைகளில் பழக நினைத்தால் அதற்கான வசதிகளும் அமைந்திருக்கவேண்டும். இது காலை இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் பெண்கள் இல்லறச் சீர்திருத்தமும் சமூக ராஜீயச் சீர்திருத்தமும் செய்து புகழ் பெறுவதாகக் காண்கிருேம். ஆகவே எந்த வழியிலும் அவர்கள் மாற்ற முற வசதியளிப்பதில் பாதகமில்லை.

வெறுப்புள்ள மனைவி

வெறுப்புள்ள மனைவி :—இந்தக் கழுதையை எங்கிருந்து கொணர்ந்தீர்கள்?

கணவன் :—சந்தையிலிருந்து ஏலத்தில் வாங்கி வந்தேன்.

மனைவி :—சந்தையில் கழுதை ஏலம் போடுவது தெரியுமானல் இதற்கு முன்னமே தங்களை அங்கு அனுப்பியிருப்பேனே!

சோவியத் சர்க்கார் ஆட்சி முறை

ஸ்டாலின், ஜினோவிவ், காமனெவ் நிலைமைகள்

“ந்யூ ஏஜ்” என்ற பத்திரிகையில் மிஸ்டர் ராபர்ட் பெர்னாண்டஸ் எழுதுவதாவது:—

ருஷ்யாவில் போல்ஷெவிக் புரட்சி ஏற்பட்டுத் தேசம் பொதுவுடைமைக்காரர்கள் கையில் புகுந்த பின்னர், அங்கு காணப்படும் ஜனங்களின் நிலைமை, ஆட்சியின் முறைமை, பொருளாதார சீர்திருத்தம் முதலியவற்றை உலகம் உற்றுக் கவனித்துக் கொண்டிருக்கிறது. அண்மையில் முடிவுற்ற முதலாவது 5 வருடத்திட்டமும் அதன் மேல் போடப்பட்டுத் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் இரண்டாவது 5 வருடத்திட்டமும், ருஷியாவின் பகைவர்களுட்பட்ட எல்லோரையும் மயங்கும்படிச் செய்துவிட்டன. ஆதலால் ஒவ்வொரு வரும் இன்று ருஷ்யாவை நடாத்துகின்ற அதிகாரிகளைப் பற்றிக்கேள்விப்பட ஆசையோடிருக்கலாம். இக்கட்டுரையில் புதிய ருஷ்யாவின் ஸ்தாபகராகிய லெனின் பெரியாரின் நேர்த் துணைவர்கள் சிலரைப்பற்றி எழுதுவோம்.

முத்தலைக் கழகம்

பெரியார் லெனின் நோயில் விழுந்த உடன், அவரது துணைவர்கள் பொதுவுடைமைக் கட்சியின் மத்தியக் கமிட்டியின் தலைவர் பதவியை (அதாவது லெனின் வகித்திருந்த ஸ்தானத்தை)யாராவது ஒரு தனிமனிதனுக்குக் கொடுக்கவேண்டுமென்றும் ஆனால் 3 பேரடங்கிய ஒரு கமிட்டியும் உடனிருக்க வேண்டுமென்றும் தீர்மானித்தார்கள். அதன்படி யொரு முத்தலைக் கழகம் (Triumvirate) அமைக்கப்பட்டது. அக்கழகத்தில் ஸ்டாலின், காமனெவ், ஜினோவிவ் ஆகியோர் அங்கம் பெற்றனர். நியாயமாக, இக்கழகத்தில், ஓர் ஸ்தானம் லெனினின் பின் தலைவராயிருந்த டிராட்ஸ்கி என்பாருக்குக் கிடைக்கவேண்டுவதாகும். ஆனால் அவர் உலகப்பொதுவுடைமைப் புரட்சியொன்றை உடன் தொடங்க வேண்டுமென்று கூறியதாலும், ஸ்டாலினின் ராஜ தந்திரத்தாலும் எந்தவிதப் பதவியையும் பெறக்கூடவில்லை. அப்பால் நடந்த நிகழ்ச்சிகளால் சோவியத் ருஷ்யாவில் ஓர் பெரிய வீரரும், சிவப்பு ராணுவம் என்ற படையின் ஸ்தாபகருமாகிய அந்த டிராட்ஸ்கி தோல்வியுற்று, சொந்த நாட்டையே விட்டுத் துரத்தப்பட்டாரென்று தெரிகிறது.

சோவியத் ஆட்சி

ருஷ்யன் பொதுவுடமைக்கட்சி அறுபது உறுப்பினருள்ள ஒருமத்தியக்கமிட்டியால் ஆளப்படுகிறது. இந்தக் கமிட்டி மூன்று மாதத்திற்கொருதடவை கூடும். அதன் அங்கத்தினரெல்லாம் வருடந்தோறும் நடைபெறும் காங்கிரசில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

மத்தியக் கமிட்டியின் கீழில் வேறு மூன்று கமிட்டிகளுண்டு. இவற்றை ராஜீயக்கழகம், அமைப்புக்கழகம், மேற்பார்வைக் கமிஷன் என்று கூறுவார்கள். ராஜீயக்கழகத்தில் எழுமெம்பர்கள் உண்டு. அவர்கள் கட்சியின் ராஜீயம் பற்றிய விஷயங்களைக் கவனிக்கவேண்டுவது கடன். அமைப்புக் கழகத்திலிருக்கும் உறுப்பினர் மூவர். அவர்களது வேலை கட்சியில் உத்யோகஸ்தர்களைத் தேர்ந்தெடுப்பதும் ராஜ்யத்தை மேற்பார்ப்பதுமாகும். தற்போது இக்கழகத்தின் அங்கங்களாக ஸ்டாலின், டாம்ஸ்கி, கூய்பைஷவ் ஆகிய மூவருமிருக்கிறார்கள். மேற்பார்வைக் கமிஷன் ஒரு சோதனைக் கூட்டந்தான். அது கட்சிக்காரர்களின் நல்லொழுக்க, ராஜீய நடவடிக்கைகளைக் கவனிக்கும்.

மேற்சொன்ன மூன்று முக்கிய கமிட்டிகளிலும் ராஜீயக் கழகம்தான் மிகவும் குறிப்பிடத் தகுந்தது. அதில் லெனினே தலைவராக விருந்தார். இப்போது அதில் ஜினோவிவ், காமனெவ், ஸ்டாலின், டாம்ஸ்கி, ரைக்கெவ், புக்காரின் ஆகியோர் அங்கம் பெற்றிருக்கின்றனர். இவ்வங்கத்தினரையெல்லாம் இன்றைய உலகம் நன்கறியும். அவர்களில் காமனெவ், ஸ்டாலின், ஜினோவிவ் ஆகியவர்கள் ஒரு அமைப்பாகச் சேர்ந்து அரசியல் காரியங்களையும் ருஷியாவைப்பற்றிய சர்வதேச விஷயங்களையும் நிர்வகித்து வருகிறார்கள்.

ஜினோவிவ்

ஜினோவிவ் லெனின் பெரியாரின் உண்மையுள்ள துணைவர். அவர் தம் தலைவரை (லெனினை) விட 10 வயதிற்கு இளமையானவர். யுத்தத்திற்கு முன்பு (அதாவது 1914)க்கு முன்பு நாடு கடத்தப்பட்டுச் சில வருஷங்கள் சுவிட்ஜர்லாந்திலிருந்தார். ருஷ்யாவின் இலக்கிய, தேசிய வளர்ச்சிகளில் பெரிதும் பங்கு கொண்டவர்களுள் இவர் ஒருவர். நல்லவாக்கு வன்மையும் எழுதும் ஆற்றலுமுண்டு. ஆனால் 1917 ல் பீட்ரோகிராட் நகரத்தில் வந்து சேர்வதற்கு முன்னர் நிரம்பப் பேருக்குத் தெரியாது. லெனினின் படை சுமப்பவர் இவர் தானாம்; ஆகையால் தலைவர் சென்ற விடத்திற்கெல்லாம் இவரும் போய்வந்தார். மென்ஷெவிக்கட்சிக்காரர்கட்கு இவரைப்பற்றி நல்ல அபிப்பிராயமில்லை. ஆகையால் இவரை லெனினின் ஆயுதச் சுமைகாரராகவே மதித்து வந்தனர். உண்மையில் ஜினோவிவ் பொதுஉடைமை வேலைத் திட்டத்தில் திறமை வாய்ந்தவர். ஆனால் அரசியலாக்கத்தில் நாம் அவரை அவ்வளவாக அறிய மாட்டோம். சிலர் வேடிக்கையாக நூல் ஊசியைத் தொடர்ந்து போவதுபோல ஜினோவிவ் லெனினைத் தொடர்ந்து போனார் என்று கூறுவதுண்டு. லூனக்கார்ஸ்கி என்ற நூலாசிரியர் 1918 ம் வருடத்திலேயே ஜினோவிவின் திறமையை நன்கு அறிந்திருக்கிறார். ஆகையால் அவர் எழுதிய “அக்டோபர் புரட்சி” என்ற நூலில் “நமது மத்தியக் கமிட்டியில் ஜினோவிவ் சிறந்த ஆலோசனைக்காரர். நான் அவரை நமது கட்சியிலுள்ள நான்கு அல்லது ஐந்து சிறந்த அரசியலறிஞர்களில் ஒருவரென்று சொல்ல அஞ்சமாட்டேன்” என்று எழுதியிருக்கிறார்.

1919 ல் ஜினோவிவுக்கு மூன்றாவது சர்வதேச (பொதுவுடைமைக் கட்சி)ச் கூட்டத்தில் தலைவராயிருக்கும் சந்தர்ப்

பம் கிடைத்தது. அப்போது அவருக்குக் கிடைத்த தேசிய மதிப்பு மிக, அவர் புரட்சிக்காரர்கட்குள் அதிதீவிர வாதி என்ற உலக மதிப்பைப்பெற்றுர். ஜினெவிவ், ஸ்டாலினைப் போல சோவியத் கவர்ன்மெண்டின் ஒரு உறுப்பினரல்லர். அவர் பீட்ரோகிராட் சோவியத்தின் தலைவர்தான். அந்த ஸ்தானம் சற்றேறக்குறைய இங்குள்ள ஒரு நகர மேயரை யொத்திருக்கும். ஜினெவிவிற்குத் தம் கட்சியாருக்குள் மிகுந்த செல்வாக்குண்டென்பதற்கு ஓர் உதாரணம், ஒரு காலத்தில் லெனினுல் வாசிக்கப்பட்டு வந்த வருட அறிக்கையை இப்போது அவரே வாசிக்கின்றுரென்பதுதான். அவர் மூன்றுவது சர்வதேசக் கூட்டத்தின் தலைவராயிருந்து விட்டதால் அவர் பேச்சுக்கு அதிகமான மதிப்பு வைக்கப்படுகிறது. அவர் பிரசங்கம் செய்யும்போது கூடும் கூட்டம்போல வேறெந்தப்பொதுவுடைமையாளருக்கும் கூடுவதில்லை. அவருக்குத் தலைவராகிய லெனினிடம் மிகுந்த மதிப்புண்டு. எனவே அவருடைய (லெனினுடைய) தத்துவங்களிலிருந்து சற்றேனும் நழுவிப் போவதில்லை. மைக்கல் பார்ப்மன் என்பவர் இவ்வாறு எழுதுகிறுர்:—

ஜினெவிவ் ஓர் நல்ல அரசியல் தந்திரி. அவரது பிரசங்கங்கள் நீளமாக இருக்கும். பெரும்பான்மையும் அவரது உண்மை அபிப்பிராயம் பேச்சில் பிரதிபலியாது.

ஜினெவிவ் ருஷ்யாவிலுள்ள மிகவும் வன்மையுள்ள தேசியத் தலைவர்களில் ஒருவராவர்.

காமனேவ்

ஜினெவிவின் தோழராக அரசியல் கழகத்தில் அமர்ந்திருக்கும் காமனேவ் ஓர் நல்ல பிரசங்கியல்ல. ஆனல் செயல் திறமையும் நிர்வாக சக்தியும் மிகுந்தவர். ஆதியில் அவர் பத்திரிகைத் தொழிலிலீடுபட்டிருந்தார். 1908 முதல் லெனினிடத்திலும் ஜினெவிவினிடத்திலும் சம்பந்தமுண்டு. அவரால் நடத்தப்பட்டு வந்த பொதுவுடைமைப் பத்திரிகைகள் பலவென்று தெரிகிறது. பல வருடங்களை அவரும் சிறையிலும் வெளிநாடுகளிலும் கழித்திருக்கிறுர். 1914-ல் அவரும் வேறு ஐந்து போல்ஷவிக் மெம்பர்களும் சேர்ந்து யுத்தத்துக்கெதிராகப் பிரமாணம் செய்ததால் சைபீரியாவுக்குத் துரத்தப்பட்டார். அங்கிருந்து 1917 ம் வருடப் புரட்சியின் போதுதான் ருஷ்யாவுக்கு வந்தாரென்று தெரிகிறது. அவர் பீட்ரோகிராடுக்கு வந்து பிராவ்டாவின் ஆசிரியராயமர்ந்ததும் லெனின் உலகம் முழுதும் புரட்சி உண்டுபண்ண வேண்டுமென்று சொன்ன லக்ஷ்யத்தை எதிர்த்தார். ஆனல் பிற்பால் லெனினின் கொள்கைகளை முற்றிலும் ஆதரித்துத் தீவிரமாக வேலை செய்யலானர். அவருடைய வாழ்க்கை முழுவதிலும் லெனினை எதிர்த்த தருணம் இரண்டு: அவற்றில் ஒன்று 1918 ல் ஆயுதந் தாங்கி எழவேண்டுமென்று சொன்னது. மற்றென்று ஜெர்மனியோடு சமாதானம் செய்துகொள்ள வேண்டுமென்றது. காமனேவ் மாஸ்கோ சோவியத்துக்களின் தலைவர். அவர் சுமுகமுடையவர்; அமைதியானவர்; நன்கு கல்விகற்றவர்.

ஸ்டாலின்

முத்தலைக் கழகத்தில் ஜினெவிவ், காமனேவ் ஆகிய இருவரும் போக மூன்றுவது எழுந்து நிற்பவர்தான் ஸ்டாலின் என்ற வீரர். அவர்தான் ருஷ்யாவை ஆட்டிவைக்கின்றுர். அரசியல் கழகத்தில் அவரே மிகவும் சக்தி வாய்ந்தவர் என்பது உலகப் பிரசித்தம். அவர் அதிகமாகப் பேசுவதில்லை. அவருடைய அமைதியும் மௌனமும் எதிரிகளிடத்துக் கலகத்தை உண்டுபண்ணி மரியாதையையும் பெருமையையும் பெற்றுக்கொள்கிறது. அவர் ஒருபோதும் பேட்டியளிப்பதில்லை; தனிமையையே அதிகம் விரும்புகிறுர். பொதுக்கூட்டங்களில் பேசுவதும் அபூர்வமே. உண்மைகளை உணரும் ஆற்றலிலும், நீதிநெறிகளில் காண்பிக்கும் விருப்பத்திலும் அவர் அவரது தலைவராகிய லெனினை யொத்திருக்கிறுர். ஒரு தத்துவத்திற்காகவோ பெருமைக்காகவோ அவருடைய மனம் ஒருபோதும் பரவசப்பட்டுவிடாது. அவர் தன்னை லெனினின் போதனைகளை நடாத்துபவராகப் பாவித்துத் தம் கட்சிக்குள் நிரந்தர ஒற்றுமையும் நிறைந்த கட்டுப்பாடும் இருப்பதைப் பார்ப்பதில் கண்ணுங்கருத்துமாயிருக்கிறுர்.

ஸ்டாலின் பொதுவுடைமைக் கட்சியின் காரியதரிசியாவர். அவர் கட்சியந்திரத்தைப் பாதுகாத்து அது நிறைவேற்றும் தீர்மானங்களை நடைமுறையில் காண்பிப்பதில் அதிகம் பற்றுடையவர். முதலாவது 5 வருடத் திட்டத்தின் உற்பத்திக்கும் நிகழ்ச்சிக்கும், அபாரமான வெற்றிக்கும் அவரே காரணபூதர்! பெரிய மிராசுதார்களின் பரமவிரோதியான அவருக்குக் கூட்டுவிவசாய முறையில் மிகுந்த ஆர்வமுண்டு என்பதோடு அம்முறையையே பெரிதாக மதித்து வேலைசெய்து வருகிறுர். அவரது லக்ஷியங்களில் ஒன்று பொதுவுடைமை அரசியலமைப்பை மிகவும் பலப்படுத்தி முதலாளிவர்க்க அரசாங்கங்களுக்குள் மாதிரியாகத் தோன்றுவ தென்பாம். ஆகவே உலகப்புரட்சி நடத்தவேண்டுமென்ற திட்டத்தை விட்டுவிட்டு முதலாளி சர்க்கார்களோடு பற்பல உடன்படிக்கை செய்து வருகிறுர். இதன் நோக்கம் ஏற்கனவே பலம்பெற்றுவிட்ட சோவியத் சர்க்காரை எதிரிகள் தாக்கி விடாமல் பாதுகாத்து அதிகப்படியான உறுதிப்பாட்டை உண்டுபண்ணுவதாகும்.

ஜெருசலேம் என்றுல் சமாதானம் நிலவுமிட மென்பது பொருள்.

* * *

ஜெருசலத்தின் சமீபம் கெபர்கென வென்னும் ஓர் கிராம மிருக்கிறது. இந்த விடத்தில்தான் தேவகுமாரன் தண்ணீரை திராக்ஷா ரஸமாக மாற்றும் முதல் அதிசயத்தைச் செய்தாராம். இப்போது கிராமவாசிகள் இங்குள்ள கிணற்று நீரை உபயோகித்து வருகிறுர்கள்.

* * *

உப்புக் கடல் ஜெரு சலத்தின் பக்கத்திலிருக்கிறது. அதன் தண்ணீர் உப்பு அதிகரித்திருப்பதால் மீன்களால் அங்கு வாழ முடிவதில்லை. அக்கடலின் ஓரங்களில் புல் பூண்டுகளும்கூட வளரமுடியாது.

* * *

சந்திரனின் குறுக்களவு 2160 மைல் என்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

* * *

நடு நிசியின் முன்பு ஒரு மணி நேரம் தூங்குவது, பின்பு இரண்டு மணிநேரம் தூங்குவதற்குச் சமம்.

—ஆங்கிலப் பழமொழி

தொடர் கதை


கடுவழியில் காதலி

(Eesy)

(சென்ற வாரத் தொடர்ச்சி)

நான் சாப்பிட்டுக் கை கழுவிய பின்னர், என்னென்னவோ மனோராஜ்யம் செய்து கொண்டு, ஓர் நாற்காலியில் வந்துட்கார்ந்தேன். அப்போது, திரு மலையப்ப முதலியார், தம் மனைவியிடம் வேண்டிக்கொள்ள, அவரும்(முதலியார் மனைவி) மங்கையர்க்கரசியும் நானுட்கார்ந்திருந்த இடத்தின் பக்கத்தில் காணப்பட்ட ஒரு வாயிலைத் திறந்து கொண்டு, ஒரு பெரிய "ஹாலு"க்குள் போனார்கள். அந்த 'ஹால்' பெரிதாகவும், சுமார் ஐம்பது அறுபது பேர் படுத்துக் கொள்ளத் தகுந்த அளவு விஸ்தாரமுடையதாகவும், சுத்தமாகவுமிருந்தது. கல்யாணத்திற்காக அதனை அலங்காரம் செய்திருந்தார்கள் போலும்— அதில் ஏராளமான படங்கள் மாட்டப்பட்டிருந்தன. தரை நல்ல ரத்தினக் கம்பளத்தைப் போர்த்தியிருந்தது. இரண்டு மூன்று மேஜைகளில் தாம்பூலம், சந்தனம், செண்டு, புஷ்பம் முதலியன வைக்கப்பட்டிருந்தன. சில ஹரிக்கேன் லைட்டுகள் சுமாராக ஒளியை வீசி, ஹாலின் அலங்காரத்தை ஆமோதித்தன.

அந்த ஹாலில் பெண்களிருவரும் புகுந்து, கம்பளங்களை ஒரு முறை செவ்வையாகப் பரப்பி, எல்லாம் சரியாக இருக்கின்றனவா வென்று பார்த்த பின்னர், என்னிடம் முதலியார் மனைவி அன்பு நிறைந்த பார்வையுடன் 'அங்கு தாம்பூலம் இருக்கிறது. சாப்பிடச் சாப்பிட எல்லோரும் அங்கு தான் வருவார்கள்' என்றார். இதன் கருத்து நானங்கு செல்ல வேண்டுமென்பதல்லவா? உடன் நானெழுந்து அப்பெரிய அறைக்குள் சென்றேன். அப்போது மங்கையர்க்கரசி—ஆம்—ஸ்ரீமதி முதலியாரின் பின்புறம் நின்று கொண்டு— நாணம் நிரம்பிய நிலைமையில்—கடைக் கண்ணால்— பார்த்துக் கொண்டிருந்தாள். அந்நிலைமையைக் காணக்கான என்னுள்ளம் கோடிக்கணக்கான கேள்விகளால் நிறைந்து குழப்பியது என்றால் வியப்பேது? நான் ஹாலுக்குள் அடியெடுத்து வைக்கும் போது, கடைசி முறையாக மங்கையர்க்கரசியை—ஐயோ! எவ்வளவு நல்ல பெயர்! அவள் தாய் தந்தையர்க்கு அமானுஷீக சக்தி யிருந்திருக்க வேண்டும். எப்படியோ தம் புதல்வி மங்கையர் கட்கெல்லாம் அரசியைப் போன்று மிளிர்வாள் என்பதை முன்னாடியே தெரிந்திருக்கிறார்கள். ஆதலால்தான் மங்கையர்க்கரசி யென்ற நாமம் சூட்டும் கருத்து ஏற்பட்டிருக்கிறது. வாசகர்கள் சிலர் 'இவளை விட உலகில் அழகான பெண்களிருக்க முடியாதா; கோவிந்தராஜு ஏதோ வெறியினால் புலம்புகின்றார்' என்று கூறிவிடலாம்—அப்படிச் சொல்வோரிடம் நான் போருக்கு எழவில்லை. எவர் என்ன சொன்னாலும் சரி, எனக்குத் தெரிந்த வரையில்,மங்கையர்க்கரசிக்கு நிகராக மங்கைகளை எங்கும் பார்த்துவிட முடியாது—அவள் கண்ணெறியும் மாதிரி எந்தப் பெண்ணும் நோக்கு எறிந்ததை நான் கண்டதில்லை. காந்தியின் புன்சிரிப்பு எவ்வளவு கூர்மையாகப் புகுந்து எதிரிகளை இழுத்துத் தன் ஜேபியில் போட்டுக் கொள்கிறதோ, அவ்வளவு கூர்மை அவள் பார்வைக்கு இருந்தது என்றால் காந்திக்குக்கொஞ்சம் உயர்வைக்கொடுத்தவனே யாவேன். மங்கையர்க்கரசி பேசும் போதெல்லாம் கழுத்து, தலை, கைகள், உடம்பு எல்லாம் ஒத்திணைந்து "ஆக்டு" செய்தன. ஆதலால் பேசும் விஷயம் கேட்போர் இருதயத்தில் நன்றாக அழுந்தியதோடு, அவர்களை யொரு வழியில் தம்பால் இழுத்துக்கொண்டது. அவள் கன்னங்களில் நகைத்தால் உருக்காட்டும் இரு சிறு குழிகள் (dimples) உண்டு. அவை தோன்றுவதைப் பார்த்தால் ஆடவரின் இருதயத்தை அடிமைப்படுத்தி வெட்டிப் புதைப்பதற்கு ஏற்பட்ட குழிகளோ வென்றுதோன்றும்! ஆ! அக்குழிகள் நீங்கினால் நிச்சயமாகவும் அவள் கன்னங்களைப் (பண்டைப் புலவர்கள் கூறிய மாதிரி) பளிங்குகள் என்று கூறிவிடலாம். அப்பளிங்குகளில் அவள் காதில் அணிந்திருந்த வைரத் தோடுகளின் பிரதி பிம்பம் காணப்பட்டது. அதனை, நான் அவள்மீது வைத்திருந்த ஆசைப் பிழம்பே பிரதி பலித்ததென்று நினைத்துக்கொண்டேன். இன்றும் அவளழகை—ஆம்—என்னென்றெழுதுவது? உண்மையாகப் பேடித்தன்மையிலிருந்து விடுபட்ட யாவனுமினும் ஒருமுறை (இருவர் கண்களும் ஒரு கடுகத்தனை



சென்னை மாகாணப் பொக்கிஷ மெம்பர் சர். ஸ்டோக்ஸ் தலைமையில் திருச்சியில் நடைபெற்ற எஸ். பி. சி. ஏ. காட்சியின்போது எடுக்கப்பட்ட குருப் படம்.

—Pon.

சந்திக்கும்படியான நிலைமையில்) கண்டுவிட்டானெனில் ஆயுளுள்ளளவும் மறக்க நினைப்பானா? அவளைக் காண்பவர்கள், மேனகைக்கு மயங்கி விஸ்வாமித்திரன் தவத்தை விட்டுவிட்டானென்று படித்தால் ஆச்சரியமே அடையமாட்டார்கள். மங்கையர்க்கரசி போன்ற ஒரு பெண்ணிருந்தால் தவமும் கலையும்; தானமும் கலையும்; திருவும் கலையும்; தீரமும் கலையும்; துணிவும் கலையும்; தூய்மையும் கலையும். அன்றித் தெரிந்த தேர்ந்த யாவும் தையல்பால் தொலைந்தே தோன்று மென்பது தௌர்லபமல்ல. அம்மம்மா! வலிது வலிது! பெண்கள் பார்வை!

நான் ஹாலுக்குள் அடியெடுத்து வைத்ததும் ஒருமுறை அக்கோமள யாக்கையை, குளிர்ந்த உருவத்தை கோதில் மேனியை, குணத்தின் குன்றைக் கடைக்கண்ணால் இலேசாக—ஆனால் ஆழ்ந்து—ஆர்வத்தோடு-அள்ளுகின்ற நிலைமையில்—நோக்கினேன்! நோக்கினேன் என்று கூறுவதா; கண்வேலினால் அவள் இருதயத்தில் குத்தினேன் என்று கூறுவதா!....நான் வேலாயுதத்தை வீசியதும்—ஆம்—அவள் தான் போரில் என்னைவிட அணுத்துணையும் இளைத்தவளல்லவே—ஆதலால் இலேசாக ஒரு கடைக்கண் ஒளியை வீசினாள். அதன் மின்சார சக்தி—அணுவையும் துளைக்கும் ஆற்றல் மின்சாரத்துக்குஉண்டல்லவா—என் கண்களை மழுக்கிவிட்டது. ஆதலால் பெருமூச்சோடு ஹாலுக்குள்போனேன். அந்த வேளையில் யாரோ சிலர் சிலர் சாப்பிட்டுக் கைகழுவி விட்டு அந்த ஹாலுக்குள் வருவது தெரிந்தது. அந்த வருகை எப்படி யிருந்திருக்கும் எனக்கு? காந்திஜீ ஹரிஜனர் ஆலயப் பிரவேசத்திற்காக மார் தட்டி எழும்புவதைக்கண்ட பூரிக்கு எப்படி யிருக்குமோ அதைப் போன்றிருந்தது எனக்கு. நான் ஒன்றும் சொல்லவும் முடியாது செய்யவும் முடியாது ஹாலுக்குள் போனேன். அப்போது ஹா! என்ன தந்திரம்; என்ன வேடிக்கை! என் அருமை மங்கையர்க்கரசி, ஸ்ரீமதி திருமலையப்பரிடம் "என் கை நோவுகிறது அக்கா! நான் செம்பு நிறையத் தண்ணீரைக் கொடுத்தேன். கிள்ளி வைத்துவிட்டார் அண்ணி. எனக்கு இப்போது கை நோவுகிறது; அவர் ராஜா மாதிரி சிங்காசனத்திலுட்கார்ந்திருக்கிறார். 'கிள்ளினேனுமே; எப்படி இருக்கிறது என்று பார்ப்போம்' என்று நினைக்கிறார? கருணையற்ற ஜன்மம்! இவ்வளவு நேரம் தெரியவில்லை வேதனை. இப்போதுதான் பெருக ஆரம்பிக்கிறது!" என்று கூறினாள். அதற்கு,

அவர்:—யார் எந்த அண்ணி? எப்போது கிள்ளினாள்?

மங்கையர்க்கரசி:—அவர்தான்; புதிதாக இன்று வந்தாரே அவர்.

என்றிருவரும் பேசிக்கொண்டே வீட்டுக்குள் வேறு வேலை பார்ப்பதற்காகச் சென்று விட்டார்கள்!!

ஸ்ரீமதி திருமலையப்பர் கேள்வி கேட்டது அவ்வளவு கவலையுடனல்ல; ஆனாலும் எனக்கு மங்கையர்க்கரசியின் சொற்கள் இருதயத்தைச் சல்லடைக் கண்களாகத் துளைத்து விட்டன. நான் அவள் சாதுரியத்தையும் மறைமுகப் பேச்சையும் கவனித்துக் கொண்டே ஹாலின் ஓர் மூலையில் சென்றுட்கார்ந்தேன். என் மனமாகிய வானத்தில் கோடிக்கணக்கான நக்ஷத்திரங்களென்னும் எண்ணங்கள் தோன்றித்தோன்றி மினிர்ந்து கொண்டிருந்தன. அந்நக்ஷத்திரங்களினிடையே ஜோதி மயமாக ஒளிர்ந்து கொண்டிருந்தான் ஓர் சூரியன். அந்தச் சூரியன் யார்? அவன் தான் "எவ்வாறு இப்பெண்ணரசியை அடைவது" என்ற கேள்வி. அந்தச் சூரியனைச் சுற்றிச் சில மேக படலங்கள் காணப்பட்டன. அவைகள் 'அப்பெண் யார்? எவ்வூரினள்? என் ஸ்ரீமதி முதலியாருடன் நடந்து கொண்டிருக்கின்றாள்? இருவருக்கும் ஏதேனும் சம்பந்தமுண்டா? இருந்தாலும் இல்லாவிட்டாலும் என்னை அடைவாளா? அவள் சுற்றுச் சார்புகள் எப்படி? அவள் பெற்றோர்—சுற்றத்தார்—இயல்பு என்ன? அவள் என்மீது காண்பிக்கும் அளவிடமுடியாத காதல் எவ்வளவு பயன்தரும்? நாளை நான் பிரிந்துவிட்டேனென்றால் பிற்பால் காண்பதெப்படி? ரயில் சிநேகம் போலவும், மகாநாட்டு நட்புப்போலவும், மோட்டார் உறவுபோலவுமாகி விட்டால் நான் இப்போது காண்பிக்கும் காதலின் மதிப்பு என்னவாகும்" என்பன போன்ற வினக்களே. இந்தச் சந்தேக மேகபடலங்கள் தோன்றிச் சூரியனைச் சூழ அவன் சரியாக ஒளிதர முடியாது தத்தளித்தான்.

அதிகமேன்? நான் "ஹாலில்" ஒரு மூலையிலுட் கார்ந்து மனோராஜ்ய உலகில் இருளில் உலாவும் பைசாசம்போல் நடந்து கொண்டிருந்தேன்—சாப்பிட்டு விட்டுவந்த பலர் தாம்பூலம் தரித்து ஆங்காங்கே சாய்ந்துவிட்டனர். நானும் ஏதோ தூக்க மயக்கத்தால்தான் கலங்கியிருக்கின்றேனென்று நினைத்து ஒருவரும் பேசவில்லை. ஆ! என்மனச் சஞ்சலத்தை என்னென்று கூறுவேன்! காதல் வலையில் சிக்குண்டோர் சிலகால் மனமுடைந்து தற்கொலை செய்து கொண்டனர், கத்தியால் குத்திப் பழி தீர்த்துக் கொண்டனர், அல்லது நெருப்பைத் தம் ஆடைகளில் மூட்டிக் கொண்டனர், அல்லது (சிற்சில கோழைகள்) சந்நியாசியாகப் போய்விட்டனர் என்று பத்திரிகைகளில் வருவதைப் பார்த்து நகைப்பது தகுதியா? காதலின் வலிமைக்குத் தற்கொலை எம்மாத்திரம்?

3. எங்கும் கலக்கம்

நான் மங்கையர்க்கரசியைப் பிரிந்து ஹாலுக்குட் புகுந்து கொஞ்ச நேரம் மனோராஜ்யத் தவமிருந்ததும் உடம்பு எப்படியோ சோர்வடைவது போல் தோற்றிற்று. அதன் காரணம் மனோவேதனை தான் என்பது என் கருத்து. ஆதலால் படுத்து நன்றாகத் தூங்க வேண்டுமென்று நினைத்தேன். தூங்க வேண்டுமென்றால் என்னால் ஜனக் கும்பலில் ஏலாது. நான் தூங்குமறையில் வேறு ஒரு மனிதன்—குழந்தையாயினும் சரி—இருப்பதாக எனக்குத் தெரிந்தால் அன்று பிரேதத்தண்டை இராக்காவலிருக்கும் கான்ஸ்டேபிலின் கதிதான். இதனை எனது நண்பர் கல்லூர்க் கந்தசாமி நன்றாக அறிவார். ஆதலால் அவர் திருமலையப்ப முதலியாரிடம் என்னியல்பைக் கூறினர் போலும். முதலியார் மிகுந்த சந்தோஷத்தோடு என்னைப் பக்கத்து வீட்டுக்குக் கொண்டு சென்று ஓர் தனியறையில் தூங்க வைத்தார். அவ்வீடு யாருடையதென்று எனக்குத் தெரியாமற் போனாலும் கல்யாணத்திற்கு வருபவர்கட்கு இடங்கொடுக்கும் வீடென்பதை நிச்சயமாக அறிந்துகொண்டேன். அங்கும் கல்யாணத் தாம்பூலம், கல்யாணச் சந்தனம், கல்யாணப் புஷ்பம் முதலியவற்றோடு கல்யாணத்திற்கு வந்தவர்கள் சிலரும் காணப்பட்டனர்.

நான் எனக்குக் கொடுக்கப்பட்ட தனியறையில் சென்று படுத்தேன். அப்போது சுமார் 11 இருக்கலாம் மணி. உறக்கம் வந்து கண்ணை இறுக்குவதைவிட உடம்பு முழுதும் ஒருவிதமான

அசதி (சோர்வு) வந்து என்னைக் கீழே தள்ளியது. தள்ளியதோடன்றி மிகுந்த களைப்பென்னும் பாரத்தையும் தூக்கி என்மேல் வைத்தது. அதனால் மூச்சுத் திணறிய நான் மிகவும் சிரமப்பட்டு மருண்டேன்; உருண்டேன்; புரண்டேன். எனினும் களைப்புப் பாரம் ஒழியவில்லை; அதுவும் கூடவே உருண்டு புரண்டு என் மீது "பாலன்சை" சரிப்படுத்திக் கொண்டிருந்தது. அத்தகைய தொல்லையால் மங்கையர்க்கரசியின் ஞாபகம் என் மனதில் வரவில்லை........... எனக்கு அக்கோமளாங்கியின் எண்ணம் வாராமற் போனதில் மிகுந்த கவலை; எனினும் மூச்சுத்திணறிக் கொண்டே களைப்புக் கடிமைப்பட்டுக் கண்ணை அயரலானேன்; உண்மையில் கண்ணயர்ந்தனவாவென்றால் இல்லை; அயர்ந்ததுபோல் எனக்குத் தோற்றிற்று. இதனை வேறு மொழிகளில் கூறுவதானால் நான் ஏதோ நோயுற்றுத் தத்தளித்தேன். அதன் காரணத்தால் புலன்களெல்லாம் வலிகுன்றத் தொடங்கின. புத்தி குழம்பத் தொடங்கிற்று. வயிற்றுக்குள் ஏதோ குழப்பம் தென்பட்டது. நெஞ்சு எரிவதாகவும் இருதயம் பிடுங்கப்படுவதாகவும் உணர்ந்தேன். ஆனால் என்னை அடிமைப்படுத்தி ஆண்டுகொண்டிருந்த தளர்ச்சி அரசாங்கம் பேச்சுச் சுதந்திரம் ஆலோசனைச் சுதந்திரம் ஆகியவற்றைப் பிடுங்கிவிட்டதால், உண்மையில் என்ன செய்கிறதென்பதை வெளியே எடுத்துக் கூற முடியாதவனாகவிருந்தேன். அஃதன்றி இருந்த விடம்விட்டுப் பெயரலாகாதென்று அவசரச் சட்டமும் "பாஸ்" செய்து விட்டதால் படுக்கையைவிட்டு நீங்க முடியாதவனாகவுமிருந்தேன்.

ஆ! அப்போது யாரோ என்னை விளிக்கும் சத்தம் மெல்லிய ஓசையில் காதில் விழுந்தது. பெரும் பான்மையும் அச்சத்தம் "தம்பி! தம்பி! தூக்கமா! தம்பி! தூக்கமா! தம்பி!" என்பதாகவே இருக்கவேண்டும். நெடுநேரம் அச்சத்தம் விழுந்ததும் எவ்வளவு அவசரச் சட்டம் போட்டாலும் சிறிது பாரத அன்னையின் சொல்லுக்குச் செவி சாய்க்கின்றானல்லவா இந்தியன்? அது போல நான் இலேசாகச் சட்டத்தை மீறிக் கண்ணைத் திறந்து "இங்ங்ங்" என்றேன்.—ஆம் ஞாபகமிருக்கிறது—ஒரு கிழப்பாட்டி—வயது 60 இருக்கலாம்—செல்வமான குடும்பத்தில் வாழ்பவள்போல் தோற்றினாள்—நல்ல வெள்ளைச் சேலையும் கழுத்தில் தங்கக் கொடியொன்றும் அணிந்திருந்தாள்—இளமையில் பல புருஷர்கள் வலம் வருதற்கும், எண்ணியெண்ணிக் கொட்டாவி விடுதற்கும் காரண பூதமா யிருந்திருக்கலாம்—அன்பான புன்சிரிப்புத் தவழ்ந்த முகத்தோடு, கையில் ஒரு செம்பை (பாத்திரத்தை)யும் பிடித்துக்கொண்டு நின்றாள். அப்பாட்டியை எனக்கு எங்கேயோ பார்த்தாற்போல ஞாபகம்........ ஆனால் தளர்ச்சிக் கொடுங்கோல் மன்னனின் கடும் அடக்கு முறையால் என்னால் எங்கு பார்த்தேனென்பதை நிதா



சென்னை மாகாணத்தில் அரிசி நிலைமையைக் கவனிக்க வந்திருக்கும் திரு. வைத்தியநாதன்.

—P. P. B.

னிக்க முடியவில்லை. அப்பாட்டியை நான் மயக்கத்தோடு பார்த்ததும், மீண்டும் "ஈங்ங்ங்" என்று உறுமியதும் அவர்:—தம்பி! தூங்குவதற்கு முன்பு இதோ இந்தக் கொஞ்சம் பாலையும் சாப்பிடுங்கள். பாட்டி தருவதை மறுக்கலாகாது. இன்று பிரசங்கம் செய்து எங்களை அடிமைப்படுத்திய அரசுக்கு இது ஓர் திறை (கப்பம்). ஆம்........தமிழ் மொழி வெள்ளம் பாய்ந்த வாயென்னும் கால்வாயில் நான் ஊட்டும் இப்பால் கடுகினையே ஒக்கும்...." என்று கூறிப் பாத்திரத்தை நீட்டினார். நான் ஒன்றும் பேச ஏலாது நாவினை அசைக்க முயன்றேன்....சில விநாடி நேரம் கடுமையாக முயன்றதும் ஏதோ உளறல் ஓசைகள் என் காதுகளில் விழுந்தன.... அதேபோது பாட்டியின் முகத்தை உற்று நோக்கினேன். ஆம்—அவர் என் நோயைத் தெரிந்துகொண்டார் போலிருக்கிறது. முகத்தில் வியப்புக் குறி தோன்ற கண்ணை அகல விழித்து, "ஆ! என்ன தம்பி! என்ன செய்கிறது? ஐயோ! என் தங்கத்தின் கண், முகம், நா இப்படி ஏன் இருக்கின்றன?" என்று கூறிக்கொண்டு "மங்கையர்க்கரசி! மங்கையர்க்கரசி!" என்று கூப்பிட்டாள். உடன் என் உயிரினுக்குயிராய், உள்ளத்தினுள்ளமாய், இன்பத்தி னின்பமாய், ஆவியாய், அனைத்துமாய் நின்று ஆட்கொண்ட மங்கையர்க்கரசி ஓடி வந்து, "என்ன பாட்டி! என்ன அது?" என்றாள். நான் அவ்வளவு உயிர் போகும் நிலைமையிலும் என் காதல் பிழம்பு—இல்லை காதலின் மனித உருவம்—ஓடி வந்ததும், சுதந்திரதேவியின் திருவுருவம் தோற்றியவிடத்து இறக்கும் தொண்டன் எவ்வாறு ஊன்வலி மறந்து நோக்கிக் கைகூப்புவானோ, அதேபோல, மெய்சிலிர்த்து அவளை நோக்கினேன். என் உயிர் நீங்கும் நிலைமையில் கண்கள் நீர்மல்கின. ஆ! அவளோ என் நிலைமையைக் கண்டதும், வாயு மண்டலத்தில் பறக்கும் விமானி இயந்திர முடைந்து பூமியில் விழுந்துவிட்டாற்போல, ஒரேயடியாய் ஏக்கமுற்று, மெய்மறந்து, செயல் மறந்து, இடம் மறந்து, இயல்பு மறந்து, பாட்டி! "என்ன விதி? என்ன விதி? என்ன விதி?" என்று புலம்பத் தொடங்கினாள். அவள் கண்கள் கேள்விக் குறிகளாய் மாற, நெற்றி ஆச்சரியக் குறியாய்ப் போக, வாய் திகைப்புக் குறியாய் நின்றது.—ஆம் சரிதான்—அப்போது நான், ஒரு முறை வாந்தியெடுத்தேன். என் வாயிலிருந்து சுமார் அரைப்படி இரத்தம் வெளியே பாய்ந்தது. அதனால் சிறிது நான் சாந்தியடைந்ததுபோல் தோற்றினேன்; என்றாலும் மீண்டும் நெஞ்சுக்குள் "அரிப்பு" ஆரம்பித்தது. வயிற்றுக்குள் நெருப்பு (ஜ்வாலை) மூளத் தொடங்கியது.............என் வாயில் இரத்தம் வந்ததைப் பார்த்ததும் மங்கையர்க்கரசி—ஏன் அநியாயமாக எழுதுகிறேன்? பிறரார் முழுதும் நொடிப்பொழுதில் அழிந்து போன

தைக் கண்ட ராஜேந்திரர் மனம்போல், 'காந்திஜீ மீது வெடிக்குண்'டென்ற செய்தித் தலைப்பைக் கண்ட பாரத மக்கள் மனம்போல் மயங்கி, தயங்கி, ஏங்கி மெழுகாய் உருகினள். உடன் பாட்டி "மங்கையர்க்கரசி! நீ சற்று நேரம் பார்த்துக் கொள். நான் கந்தசாமியையும் திருமலையையும் அழைத்துக் கொண்டு இதோ வந்து விடுகிறேன். மற்றவர்கட்கு இப்போது தெரிய வேண்டாம் விஷயம்" என்று கூறிக்கொண்டு தன் வயது 60 என்பதையும் மறந்து வெளியே ஓடினள். அப்போது மீண்டுமொரு முறை இரத்தமாக வாந்தி எடுத்தேன்.

இதனைப் பார்த்தால் சும்மா விருப்பாளா தனிமையிலிருக்கும் மங்கையர்க்கரசி! அவள் ஒருமுறை சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, ஓடிவந்து என் தலையணை உட்கார்ந்தாள். கணப்போதில் அவளது கோமளக் குளிர்க்கரங்கள் என் தலையைத் தூக்கி, சகல லோகமும் அவாவும் அவளது துடைமீது வைத்தன. அப்பால் தன் முன்தானையால் என்வாயை யெல்லாம் துடைத்தாள். அதோடு இரத்தம் வடிந்திருந்த மற்றப் பகுதிகளையும் துடைத்துச் சுத்தப் செய்தாள். ஆ! அப்போது—அந்த உயிர் போகும் தருணத்திலும் எப்படியிருந்தது எனக்கு! என் உடம்பெல்லாம் சந்தோஷப் பெருவெள்ளத்தில் மூழ்கிக் குளிர்ச்சியடையப் புளகாங்கிதம் ஏற்பட்டது. எனவே நான் மிக—மிக—மிக—சிரமப்பட்டு — பிரயாசைப்பட்டு—முயன்று—கண்ணை யேறிட்டு மங்கையர்க்கரசியின் மலர் முகத்தை நோக்கினேன். அது (முகம்) கவலை மூடுபனியினால்இருண்டிருந்தது. எனினும் இருதயத்தில் எரிந்துகொண்டிருந்த காதல் ஜோதி இலேசாக மிளிரத் தவறவில்லை. .... என் கண்கள் இரு சிறிய நீர் முத்துமாலைகளை வெளியே கொட்டின. அதனைக் கண்டதும் அப்பொன்மேனியாள் தானும் கண்ணீர் சிந்த—ஐயோ அக்கண்ணீர்த் துளிகள் என் மார்பில் விழுந்தன! எவ்வளவு "புண்ணியம்" செய்திருக்க வேண்டும் நான் அம்மின்னனையாளின் கண்ணீர்த்துளிகளை ஏந்த! அவள் கண்ணீர் சிந்திக்கொண்டே தன் வெண் பட்டுப் புடவையால் என் கண்களைத் துடைத்தாள். மற்ஞெரு கை என் நெற்றியையும் கன்னங்களையும் மெதுவாக வருடிற்று. அச் செயல் எனக் களித்த இன்பம்! ஏ! உலகமே! உன்னைக் கேட்கின்றேன் இன்று! நீ எப்பொழுதேனும் அனுபவித்திருப்பாயோ! இல்லை; இல்லை. என்னைப் போன்ற இன்பம் எக்காலும் அனுபவித்திராய் !!

நான்—மங்கையர்க்கரசி என் முகத்தைத் தடவியதும்—மிகவும் சிரமப்பட்டு வலக்கரத்தை உயர்த்தினேன். அதனை அவள் அன்பாகப்பற்றி யொரு முத்தமிட்டு மார்போடு அணைத்தாள்; ஆம்—அதன்மேல்—என் கண்கள் மூடின.... ....வாய்திறந்தபடியே இருந்தது........ பெருமூச் சொன்று பாய்ந்ததாக ஞாபகம்! எனக்குப் பிரக்ஞையில்லை...........

(தொடரும்)


மறு மணம் வேண்டல்.
ராய. சொ.
ஆணை! அருந்தவக் காந்தியின்
மீதே; அருமையுடன்
பேணி உயிரிற் பெரிதா
வளர்த்தநற் பெண்மணிகள்,
வீணே இளமை விடுத்துக்
குமுறியுள் விம்மியழ
நாணுகிலிரலீர்! நன்றுந்துய்ப்
பீர்கீர்! நலமிதுவே!
காந்தி அறம்சேர் கருணை
உலகினைக் கண்டிலிரோ?
வந்தும் எழிலும் இளங்கட்
டுடலும் இணைந்தகொடி,
வீழ்ந்து நிலத்தில் விடுத்தகண்
ணீருங்கள் மெய்க்குலத்தைப்
போழ்ந்து தொலைக்கும் வடிவாள்!
பொருந்தும் அறிவிலிரே!
"காந்தி கலித்துறை யந்தாதி"
பெற்றோரின் காதல் வாழ்க்கை
விதவையாகிய இளங்கைம்பெண்ணின் ஆறாத்துயரம்.
A. D. acharya

செய்தித் திரட்டு

தேர்தலில் சீர்திருத்தம்

தற்போது மாகாணமெங்கும் ஏக காலத்தில் தேர்தல் நடத்தப்படுகிறது. ஆதலால் ஏராளமான உத்தியோகஸ்தர்கள் தேவையா யிருப்பதோடு செலவும் ஜாஸ்தியாகிறதாம். எனவே ஜில்லாக்களை மூன்று கூட்டங்களாய் பகுத்து ஒவ்வொரு வருடமும் ஒவ்வொன்றுக்குத் தேர்தல் நடாத்த நிச்சயித்திருக்கிறார்கள். இது சம்பந்தமாக அடுத்து வரும் சட்டசபையில் யோசிக்கப்படும்.

முதல் வருடம் தேர்தல் நடைபெறும் ஜில்லாக்கள்

விசாகப்பட்டினம், செங்கற்பட்டு, மதுரை, நீலகிரி, வடஆற்காடு, பெல்லாரி, தென்கன்னடம், திருச்சினுப்பள்ளி.

அடுத்த வருடம்

அநந்தப்பூர், திருநெல்வேலி, தென்னாற்காடு, கடப்பை, சித்தூர், கர்நூல், மேலக்கோதாவரி, குண்டூர்.

மூன்ருவது வருடம்

சேலம், மலையாளம், கிழக்கோதாவரி, ராமநாதபுரம், கோயமுத்தூர், கஞ்சம், நெல்லூர், தஞ்சாவூர், கிருஷ்ணு.

வேலூரில் புதிய கோர்ட்

வாலிபக் குற்றவாளிகளை விசாரிக்கும் பொருட்டு ஒரு கோர்ட்டை வேலூரில் ஏற்படுத்த சர்க்கார் அனுமதித்திருக்கிருர்கள்.

இந்தியச் சட்டசபைக்கு திரு. ஆர். வி. சாமிநாதன்


வரப்போகும் இந்திய சட்டசபைத் தேர்தலுக்கு திரு. ஆர். வி. சாமிநாதன் அவர்கள் பர்மாவில் காங்கிரசின் சார்பாய் அபேட்சகராய் நிற்கப்போவதாகத் தெரிகிறது.

வைசிராய் நிதி 56 லட்சமாயிற்று

பீஹார் பூகம்ப நிவாரண சம்பந்தமான வைசிராய் நிதிக்கு ஜூலை 24-ந்தேதி வரையிலும் ஐம்பத்தாறேகால் லட்சம் வருவாயிருப்பதாகத் தெரிகிறது.

ஒரு மணி நேரத்தில் 12 ஆயிரம் நாற்று நடல்

நார்விச்சுக் கருகிலுள்ள ஸ்பிரௌஸ்டன் என்ற ஊரில் ஒரு மணி நேரத்தில் 12 ஆயிரம் நாற்று நடும் இயந்திரமொன்று உபயோகிக்கப்பட்டு வருகிறது. அவ்வூரில் 12 ஆயிரம் நாற்றையும் நடவேண்டுமானல் 18 ஷில்லிங் கூலி கொடுக்கவேண்டி யிருந்ததாம். இயந்திரம் வந்த பிறகு 3½ ஷில்லிங் தான் செலவாகிறதாம்.



திருவாங்கூர் சட்டசபை சென்ற வாரம் ஆரம்பித்தது. அப்போது தலைமை வகித்த திவான் சர். மகமத் ஹபிபுல்லா சாகிப் பகதூரும் சட்டசபை அங்கத்தினர்களும் சட்டசபை மண்டபத்தில் இருக்கும் காட்சி விளக்கப்படுகிறது. —P.P.B.

சென்னை ஆக்டிங் கவர்னர் வருகை

சென்னை மாகாண ஆக்டிங் கவர்னரான சர். முகமது உஸ்மான் அவர்கள் ஒங்கோலிலிருந்து ஜூலை 28-ந் தேதி மாலை 4-30-க்கு சென்னை வந்து சேர்ந்தார். நகரசபை மண்டபத்தில் உபசாரப் பத்திரம் வழங்கப்பட்டது.

ஆசாமில் ஏழு கிராமங்கள் மூழ்கின

ஆஸாமில் பிரம்மபுத்திரா நதி பெருக்கெடுத்து ஏழு கிராமங்களை விழுங்கி விட்டதாகவும் கிராமவாசிகள் மிகவும் கஷ்டப்படுவதாகவும் செய்தி கிடைக்கிறது.

ஆகஸ்டு 16-ந் தேதி லார்டு வெலிங்டன் வருகை

இந்தியா கெஜட் பிரசுரமொன்றினல் ஆகஸ்டு 16-ந் தேதி லார்டு வெலிங்டன் ஆகாய விமானம் மூலம் காரச்சியில் வந்திறங்குவாரென்றும் வைசிராய் பதவியை ஏற்றுக்கொள்வாரென்றும் தெரிகிறது.


ஆடு ஏலம்

மகாத்மா காந்திக்கு கான்பூரில் ஒரு ஆடு பரிசளிக்கப்பட்டது. அதனை 22 ரூபாய்க்கு ஏலம் போட்டுவிட்டார்.

எல்லைப்புறக் காந்தி மீது மகாத்மா அன்பு

மகாத்மா காந்தி லாகூரிலிருந்தபோது எல்லைப்புறத் தலைவர்கள் சிலர் பேட்டி கண்டனர். அப்போது அவர் கூறியதாவது:—

அப்துல் காபர்கான் எனக்கு தேவதாஸ் எவ்வளவு பிரியமோ அவ்வளவு பிரியமானவர்—நான் அவ்வெல்லைப்புற காந்தியைப் பார்க்க விரும்புகிறேன்.



விகடத்திரள்

கோபாலன் என்ற சிறுவன்:—அம்மா நான் முத்துச்சாமியோடு விளையாடட்டுமா?

தாயார் :—அவாத்துக்கும் நம்மாத்துக்கும் சண்டை அடா!

கோபாலன்:—அப்படீன்னா அவனோடு குஸ்தி போடட்டுமா?

*   *   *

சிறுமி:—அம்மா! நீ வேலைக்காரி சிகப்பியைப் பார்த்து மாடு, கழுதை, எருமை என்று திட்டுகிறாயே. அப்பா அப்படியா சொல்கிறார்?

தாய்:—வேறென்ன சொல்கிறார்?

சிறுமி:—என் கிளியே, என் குயிலே, என் அன்னமே என்று சொல்கிறாரே. ஏன் அம்மா இந்த வித்தியாசம்?

*   *   *



வாத்தியார்:—இந்தப் பையன்களைக் கேளுங்கள்; உங்கள் புதல்வன் என்னை ஓயாது முட்டாள் முட்டாளென்று கேலி செய்கிறான்?

தந்தை:—அவன் மகா துஷ்டப்பயல். எப்போதும் உண்மையையே கூறுகிறான். வரட்டும்; பார்த்துக் கொள்கிறேன்.



தேர்தல் அபேக்ஷகர்:—மகா ஜனங்களே! எனக்கு நீங்கள் ஓட்டுத் தந்தால் எளிதில் சுயராஜ்யத்தைத் தேடித் தந்துவிடுவேன். உங்கள் வறுமையைப் போக்கி எல்லோரையும் குபேராக்கி விடுவேன். வேலையில்லாத் திண்டாட்டத்தைத் துரத்தி................

கூட்டத்திலிருந்த ஒருவர் :—நீங்கள் பெரும் பெரும் காரியம் சாதிப்பதை நம்பு முன்பு உதாரணமாக ஒரு சிறு விஷயம் செய்யுங்கள். என் புதல்வனுக்கு ஹைக்கோர்ட்டில் ஒரு பியூன் வேலை வாங்கிக் கொடுங்கள்,

ஞான போதகர்:—மனிதனை அரணு செய்யுமூர் எந்த ஊர்?

செட்டிநாட்டுச் சிறுவன் :—(நிரம்ப யோசித்துவிட்டு) கோட்டையூர்.

*   *   *

பிரயோசன மற்ற பத்திரிகையை வெளியிடும் ஒரு ஆசிரியரைப் பார்த்துக் கேலி செய்ய நினைத்த ஒருவர் :—இவ்வளவு ஏராளமான பக்கங்களை வெளியிடுகிறீர்களே; சோர்வு வாராதா?

ஆசிரியர் :—நான்தான் அவற்றைப் படிப்பதில்லையே!

*   *   *

விருந்துக்கு வந்தவர்:—(சிறுவனுடன்) தம்பி சாப்பிட்டு விட்டாயா?

சிறுவன்:—இல்லை.

வி. வந்தவர்:—ஏன் எப்போது சாப்பிடுவாய்?

சிறுவன்:—நீங்கள் வெளியே சென்று கதவை மூடிய உடன்.

*   *   *

"நான் பேசும்போது ஜனங்கள் வாய் பிளந்து கொண்டே கேட்கிறார்கள்.

"நீ தந்த வைத்தியன் போலிருக்கிறது."

*   *   *

தாத்தா :—முருகா நீ எப்போது எழுந்திருந்தாய்?

பேரன் :—சூரிய வெளிச்சம் என் முதுகில் விழுந்ததும் எழுந்திருப்பேன்.

தாத்தா :—அப்படியானால் 7 மணி 8 மணி ஆகுமா?

பேரன் :—இல்லை. எங்கள் வீட்டில் ஜன்னல் மேற்கே பார்த்திருக்கிறது.

*   *   *

புருஷன்:—வத்சலா! உன்னை நான் எப்போது எழுப்ப வேண்டும்?

மனைவி:—நான் எழுந்திருக்க வேண்டும்போது கூப்பிடுகிறேன்.


புராண விநோதம்

(வைசம்பாயனன்)

மகா பாரதத்தில் அசுவத்தாமா என ஒரு வீரன். இருந்தான். அவன் பிறவி விநோதமானது. சாட்சாத் பரமசிவன் துரோணன் என்ற பிராமணன் மனைவியைப் பெண்டாட விரும்பினனும். இது மிக உயர்ந்த செய்கையல்லவா? போகட்டும். அதற்கு உபாயமாக என்ன செய்தான் தெரியுமா அந்தப் பரமசிவன்! (சிவனை அவன் இவன் என்று கூறுகின்றேன் எனச் சிவபக்தர் கோபித்துக் கொள்ளக் கூடாது; கடவுளர்களை ஒருமையில் பேசுவது குற்றமல்ல; தவிரப் பெயரே 'சிவன்' என்றிருக்கின்றதே யொழியச் 'சிவர்' என்று இல்லையல்லவா?) ஒரு அதிதியாகப் புறப்பட்டான் துரோணன் வீட்டை நோக்கி. சிவனுக்கு அதிதிவேஷம் புதிதல்லவே. போய்ச் சேர்ந்தான் துரோணச்சாரி வீட்டிற்கு. சோறு கேட்டான். துரோணன் வீட்டிலில்லை. அவன் மனைவி இலை போட்டாள். நிர்வாணமாக நின்றுதான் தனக்குச் சோறுபோட வேண்டும் என்றான் வந்தவன். பேஷ்! எப்படி! அதற்கு இசைந்தாள் அப்பெண். ஏன்! தன் கணவன் கட்டளை அதிதிமனம் கோணாமல் நடக்கவேண்டும் என்பது. கணவன் சொல்லைத் தட்டுவது கற்பிற்கு விரோதமல்லவா! எனவே பிச்சைக்கு வந்தவன் விருப்பம்போல் நிர்வாணமாகச் சோறிட்டாள் அப்பதிவிரதை. இலைமுன் இருந்த மகா-ள-ள-ஸ்ரீ கைலாசபதி காமத்தால் கலங்கித் தலைகால் தெரியாமல் அப்பெண்ணை அணைய எழுந்தோட முயன்றார். அப்பெரியார் எழும்போதே ஆவேச உணர்ச்சியால் இந்திரியம் சோற்றில் ஸ்கலிதமாயது. அவ்வளவுதான், பிச்சைக்கு வந்தவர் போய்விட்டார். வந்தார் துரோணர். விஷயத்தை யறிந்தார். வந்தவர் சிவனுர் என உணர்ந்து கொண்டாரர். அந்தச் சோற்றை உண்ணும்படி உத்தரவிட்டார் மனைவிக்கு. அந்த அம்மாளுக்கு அது பிடிக்கவில்லை. கணவன் சொற்படி நிர்வாணமாக நின்றவர் இதை ஏன் செய்யவில்லையென்ற கேள்விக்கும் பதில் சொல்லவேண்டிய கடமை என்னுடையதல்ல. அச்சோற்றைக் குதிரைக்குக் கொடுத்தாள். குதிரை அதனை உண்டுவிட்டுக் குட்டிபோட்டது. ஆகவே திருவாளர் சிவனுருக்கும் திருமதி குதிரையாருக்கும் பிறந்த அருமைத் திருக் குமாரன்தான் அசுவத்தாமா. இக்கதை என்னுடையதென்று யாரும் சண்டைக்கு வரவேண்டாம். இது இந்துக்கள் பெரிதும் போற்றும் பாரதக் கதை. இப்போதுகூட இந்திரியத்தைக் குழாய் மூலமாகப் பெண்கள் கருப்பையினுள் செலுத்திக் குழந்தை பெற வைக்கிறார்களாம் டாக்டர்கள். ஆதலால் முந்திய காலத்தில் ஏன் அப்படி நடந்திருக்கப்படாது? இன்னும் கொஞ்சநாளில் மனித இந்திரியத்தைக் குதிரை நாய் பன்றி முதலிய மிருகங்கட்குக் குழாய் மூலம் செலுத்தி மனிதக் குட்டிகளை இந்த டாக்டர்கள் உற்பத்திசெய்து விடுவார்களானுல் அந்தக் கதை சரியான சாட்சியத்தைப் பெற்றுவிடும். அவ்வளவுதானே! என்ன பிரமாதம்.

*　　*　　*

பாரத காலத்தில் பெண் சுதந்தரம் உச்ச ஸ்தானத்தில் இருந்திருக்கவேண்டும். இன்றேல் ஐந்து கணவர்களை ஒரு பெண் கட்டியாண்டிருக்க முடியுமா? ஆ! ஹா! அந்தப் பாஞ்சாலியின் சாமர்த்தியமும் அதிஷ்டமும் பெரிதே. இப்போது காலம் மாறிவிட்டது. பெண்கள் பலர் ஒருவரால் மனைவியர்களாக ஆளப்படுகிறார்களே யொழியப் பல ஆடவர்களைக் கணவன்மாராக ஒரு பெண்ணால் வெளிப்படையாக ஆளப் பாக்கியம் பெண்களுக்கில்லாது போய்விட்டது. ஐவருக்குரியாள் கற்புடையளாகக் கருதப்பட்டாள் என்பது ஒரு ஆச்சரியம். அது உண்மையாக இருக்குமானல் பாண்டவர் ஒற்றுமையும் பொறுமையும் ரொம்பவும் மதிக்கக்கூடியன.




பெஜவாடா, மிஸ்டர் D. T. ராவ், பார்-அட்-லா தலைமையில் ஜுலை 29-ந் தேதி திருச்சி தமிழ்நாடு கிராமப் புத்தகாலய ஊழிய மகாநாடு நடைபெற்றது.

—Pon.



ஜெர்மனியிலுள்ள ‘இருட்காட்டில்’ கைகாட்ட மரங்களை மனித உருவத்தில் மரத்திலேயே வெட்டியெடுத்து விடுகிறார்கள். பின்னர் செடிகளும் அடியில் வளர்க்கப்படுகின்றன. அத்தகைய கைகாட்டி மரத்தின் உதாரணம் ஒன்றைப் படத்தில் காணலாம்.


—N. I. A.




ஆஸ்திரேலியாவில் காணப்படும் "வாம்பெட்" என்ற பிராணி. படத்தில் ஒரு தாய் வாம்பெட் தன் குழந்தையை வளைக்கு வெளியே அழைத்துச் செல்கிறது. N. I. A.




மெல்போர்ன் நகரத்தில் நடைபெற்ற இங்கிலாந்து—ஆஸ்திரேலியா உதைப்பந்துப் போட்டி விளையாட்டு. சுமார் 60 ஆயிரம் பேர் இவ்விளையாட்டைப் பார்க்க வந்திருந்தனர். —N. I. A.



அமெரிக்கா செல்லும் அருண்டேல் தம்பதிகள் பம்பாயில் வரவேற்றுபசரிக்கப்பட்டனர். —S. P. B.



மெல்பேர்ன் நகரத்து 'தொழிலாளர் பெண்கள் பந்து விளையாட்டுச் சங்கத்தின்' உறுப்பினர். இவர்களுடைய அங்க அமைப்புகட்குக் கிரேக்கர்களாலும் அதிகம் குறை சொல்லிவிட முடியாது. —N. I. A.



ஸ்ரீ அருண்டேல் தம்பதிகட்குப் பம்பாய் பிரம்மஞான சபையார் பிளாவட்ஸ்கி மண்டபத்தில் உபசாரப்பத்திரமளித்து வரவேற்றார்கள். படத்தின் நடுவில் ஸ்ரீ அருண்டேலும், ஸ்ரீமதி ருக்மணி அருண்டேலும் காணப்படுகின்றனர்.—S. P. B.



மலைப்பாம்பு குட்டிபோன்ற பன்றிக்குட்டியை விழுங்கும் காட்சி. இப்பாம்பு 1933 ஜூலை 22உ பிறந்தது. திருச்சி செயிண்ட் ஜோசப் காலேஜ் பண்டிதரான லீ பாதிரியார் வளர்க்கிறார். அதன் நீளம் 7 அடி 3 அங்குலம். சுற்றளவு $9\frac{1}{2}$ அங்குலம். நிறை 12 ராத்தல். அது சாப்பிடும் பன்றிக்குட்டியின் எடை 6 ராத்தல். —P. S.



சாவித்திரியின் சாகசம்

அல்லது

தந்தை கற்ற தனிக் கல்வி

(இ. சிவம் எழுதுவது)

திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள அழகிய ஊர்களுள் ஒன்று கடையம். அங்கு ஏராளமான மா, பலா, இலுப்பை, புன்னை முதலிய மரங்கள் செழித்து வளர்ந்து நிற்கின்றன. அவற்றின் இடையிடையே வீடுகள், தெருக்கள், கோவில்கள் அமைந்திருப்பதை நோக்கினால், எந்த மனிதனின் இருதயமும் குளிராமல் போகாது! கடையத்தின் ஓர்பால் வானையளாவிய பொதிகைமலை, பன்னூறு அருவிகளென்னும் முத்தாரங்களை அணிந்தும், பசிய தருநிரைகளென்னும் போர்வையைப் போர்த்தும், மேகங்களென்னும் குல்லாயைத் தரித்தும் வளர்ந்து நிற்கின்றது. மற்றொருபால் கண்ணுக் கெட்டியதூரம் நன்செய் நிலம் பச்சைப்பட்டு விரித்தாற் போல் பார்வை தோற்றுகிறது. அவற்றினிடையே ஆங்காங்கு கூட்டம் கூட்டமாய் காணப்படும் கரும்பு, அகத்தி, வெற்றிலை முதலியவைகள் காற்றுக் கிசைந்த வண்ணம் தலையை அசைத்துக் கொண்டிருப்பதை நோக்கினால் "நன்று நன்று கடையத்தின் காட்சி" என்று ஆமோதிக்கின்றனவோ எனத்தோன்றும். அத்தகைய செடிகளிலும், நன்செய்களிலும், படர்ந்து செல்லும் மந்தமாருதம் பொதிகைமலையிலிருந்து எழுவதாகும். அது வழிநெடுகத் தாமிரவர்ணி முதலிய பல ஆறுகளையும் அருவிகளையும் தாவி வருவதால் குளிர்ச்சியும் மென்மையும் பெற்றிருக்கின்றது. அக்குளிர்ச்சியைக் கடையத்தின் கீழ்புறமாக ஓடிக்கொண்டிருக்கும் ராம நதியின் ஸ்படிக ஜலம் சற்றுத்தண்மை செய்வது பொதுவாகக் கடையத்தை இன்பம் நுகர்தற்கேற்ற ஓர் பெரும் பதியாக்கி விடுகிறது.

இத்தகைய கடையத்தில் இருந்த பல தனவந்தர்களில் ஒருவர் பழனிச்சாமிப் பிள்ளை. அவர் ஜாதியால் வேளாளர். சுமார் 3 லட்சத்திற்கு நன்செய்களும் புன்செய்களுமிருந்தன. நல்ல உழைப்பும் ஊக்கமும், செயல்வன்மையு முடையவராகையால், அவரது வேலைகள் ஒழுங்காய் நடந்தன. அவருக்கு சிவசைலத்தின் சமீபம் சுமார் 400 ஏக்கர் காடிருந்தது; அதனைத் தகுந்தபடி வளம்செய்து கரும்பு நட்டு அக்கரும்பினை அரைக்க ஆயில் எஞ்சினும் வைத்து, மாதவருமானம் ஏராளமாகப் பெற்றுவந்தார்; இஃதன்றி (மலையில்) காடுகளிலிருந்தும் வருஷத்தில் ஆறுதடவைப் பணம் வந்து குவிந்து கொண்டிருந்தது.

இங்ஙனம் நல்ல வருமானமுடைய பழனிச்சாமிபிள்ளை தன் உதவிக்காக ஒரு மானேஜரையும் இரண்டு குமாஸ்தாக்களையும் அமர்த்திக்கொண்டார். அக்குமாஸ்தாக்களில் ஒருவன் பெயர் சோமநாதன். அவனுடைய சொந்தவூர் தென்காசி. பி. ஏ. படித்திருக்கிறான். தற்காலம் வேலையில்லாது திண்டாடும் பெரிய பட்டதாரிகள் படையில் அவனும் சேர்ந்தவன். ஆதலால் தன் கஷ்டத்தைத் தீர்த்துக்கொள்வதற்காகப் பழனிசாமிப் பிள்ளையிடம் வேலைக்கு வந்தான். அவனுக்குக் கல்யாணமாகவில்லை. மாதாமாதம் கிடைத்துவந்த 30 ரூபாயையும் தன் பொருட்டே செலவிட்டு வந்தான். அவனுக்குப் பழனிச்சாமி பிள்ளையின்கீழ் வேலை செய்யவும், மானேஜரென்ற சாதாரண ஆசாமியிடம் உத்யோகம் பார்க்கவும் விருப்பமில்லை. எனினும் ஏதோ சில இரகசிய காரணங்களை முன்னிட்டு வேலை பார்த்துக்கொண் டிருந்தான்.

* * *

பழனிச்சாமிப் பிள்ளைக்கு ஓர் பெண்ணைத்தவிர வேறு குழந்தைகளில்லை. அப்பெண்ணின் பெயர் சாவித்திரி. அவளுக்குப் பிரஸ்தாப காலத்தில் வயது இருபது. புருஷனை இழந்து இரண்டு வருடமாகி யிருந்ததால்— பணக்கார வீட்டுப் பெண்ணாகவு மிருந்ததால்— அவளது உடம்பு கொழுத்து, ஆடவர்

கண்டால் ஆசை மிகுதியால் அடித்து விழுந்து அடைய நினைக்கும் அவ்வளவு அந்தம் அமைந்திருந்தது. வேளாளப் பெண்கள் சாதாரணமாக மறுமணம் செய்து கொள்வதில்லை. எனவே சாவித்ரி பண்டை சாஸ்திர முறைப்படி விரதங்கள், தியானங்கள், ஜபங்களை அனுஷ்டித்து வந்தாள்.

இவளைக் காணவும் சோம நாதனின் மனம் வெகுவாகப் பிறழ்ந்து அவளை அடைந்து விட விழைந்தது. அந்த ஆசையினாலேதான் அவன் அங்கு வேலை பார்த்து வந்தானென்று சிலர் கூறிக்கொண்டனர். அந்த இரகசியத்தின் உண்மை எதுவோ நமக்குத் தெரியாது; என்றாலும் சோம நாதன் சாவித்ரியின் மீது ஒரு கண் வைத்துக் கொண்டே யிருந்தான். அன்றி வேலை பார்த்தாலும் இல்லையானாலும் அவள் கவனத்தைத் தன்பால் இழுத்துக்கொள்வதில் கவனமுடையவனாகவு மிருந்தான்.

ஆனால் சாவித்ரி கொஞ்சமாவது அவன் கண்ணோட்டங்கட்குச் செவி சாய்க்க வில்லை. அவள் வாழ்க்கை எப்போதும் போலவே நெறிதவறாமல் நிகழ்ந்தது. ஆனால் சோம நாதன் தன்னை ஆசிக்கிறான் என்பதை மட்டிலும் தெரிந்து கொள்ளாமலிருக்கவில்லை.

■ அப்படியே சில நாட்கள் போக, சாவித்ரி தன் படிப்பறையில் மேஜையின் மீது சிற்சில வேளைகளில் சில காகிதங்கள், சிறிய புத்தகங்கள், பத்திரிகைத் துண்டுகள் ஆகியவை வந்து விழுவதையும் அவற்றிலெல்லாம் விதவாவிவாகத்தின் குணாகுணங்களைப் பற்றி எழுதியிருப்பதையும் கண்டாள். அவை எவ்வாறு வருகின்றன என்பது அவளுக்குத் தெரியும்; என்றாலும் ஒன்றும் பேசாது அவற்றை வாசிப்பதில் பொழுதைப்போக்கினதன்றி யாதொரு மாற்றமும் காண்பிக்க வில்லை.

இங்ஙனம் சில நாட்கள் போக, அவள் விதவா விவாகம் பற்றிய காகித வரலாறு களொன்றையேனும் பழனிச்சாமி பிள்ளையிடம் கூறாதிருப்பதைக்கண்டு சற்றுத்தைரியம் கொண்ட சோமநாதன் நேரிலேயே கடிதம் எழுதிவிடக் கருதினான். ஒரு நாள் ஆபிசில் வேலை நடக்கும் போதே அடியில் வரும் கடிதாசி யொன்று எழுதப்பெற்றது:—

அன்பார்ந்த சாவித்ரி,

நீ எத்தனை நாள் இப்படியே காலத்தைத் தள்ளப் போகிறாய்? 18 வயது முதல் சாகும்வரையிலும் விதவையாக விருப்பதென்பது சாத்திய மென்று எண்ணுகிறாயா? உன் பெற்றோர் வயதானவர்கள் தாமே—அவர்கள் இறந்து விட்டால் அப்பால் உன் கதிஎன்னாகும்? உனக்குத் துணைதான் யாரிருக்கின்றனர்? மூன்று லட்சம் ஆஸ்தியும் வைத்துக் கொண்டு தனிக்கட்டையாய் வாழ்வதென்றால்—சீ! சீ! அதனை நினைக்கும் பேதே அசிங்கமாயிருக்க வில்லையா?

என்னாசைச் சாவித்ரி,

நான் உனக்காக என்ன பாடு படுகின்றேனென்பதை அறிய மாட்டாயா? உனக்காக வன்றோ இங்கு வேலைக்கிருக்கின்றேன்? என்னை நீ கூடிவாழ்வதில் தடையேது? தக்க பருவத்தை அடைந்திருக்கின்ற நாம் இணைந்திருப்பதை யாரும் குறை கூறமாட்டார்கள். ஏனெனில்பருவமுடையோர் கூடுவது இயல்பு. அன்று நீ அருமையாகத் தானியங்கள் பல போட்டுக் குழந்தைபோல் வளர்த்தாயே ஒரு புறா, அது தனது ஜோடியான ஒரு பறவை வந்ததைக் கண்டதும் எவ்வளவு குதூகலமாகப் பறந்து சென்று மரக் கிளையில், உன் முன்னே, தம் துணையுடன் கூடிக் கொண்டது! நீ அதனை எத்துணை முறை பார்த்தாய்? எத்துணை முறை அழைத்தாய்? அது வந்ததா? நீ காலில் கட்டியிருந்த பட்டுக் கயிற்றையும் கூடப் பொருட்படுத்தாது—எந்த நிமிஷத்திலும் உன்னைவிட்டுப் பிரியாதிருந்த இயல்பையும் மறந்துவிட்டு—தன்னிணையைக் கூடிக்கொண்டதே. அந்தப் பாடத்திலிருந்து என்ன கற்றுக்கொண்டாய்? நீயும் உன் துணைவனொருவனைக் கண்டால் உடன் சென்று கூடிக்கொள்வதன்றோ தகுதி! இயற்கைப் பறவைகட்கு இருக்கும் உணர்ச்சி கூடவும் மனிதர்கட்கில்லையென்றால் என்னென்று கூறுவது?

என்னாசைக் கிளியே! நீயே தஞ்சம்; செய்யாதே வஞ்சம்; உன் பாலதே என் நெஞ்சம்.

அன்புள்ள காதலன்,
சோமநாதன்.

* * *

சோமநாதன் வழக்கத்திற்கு மாறாக ஏதோ யோசித்து யோசித்து எழுதிக் கொண்டிருப்பதைப் பார்க்கில் கண்டுவிட்ட பழனிச்சாமிப் பிள்ளை "சோம



“தனது ஜோடியான ஒரு பறவை வந்ததும் எவ்வளவு குதூகலமாக உன் புறா, பறந்து சென்று கலந்துகொண்டது? நீ எத்தனை முறை அழைத்தாய்? அது வந்ததா?”

நாதன்! இதோ இந்தக் கடிதத்தைத் தபாலில் சேர்த்து வாரும்" என்றார். உடன் அவன் தன் செயலில் சந்தேகமில்லாது போகும்படியாகக் காதற் கடிதத்தை "ரைட்டிங் பாடின்" அடியில் செருகிவைத்துவிட்டு வெளியே சென்றான்.

உடன் பழனிசாமிப் பிள்ளை வந்து அதனை எடுத்துப் பார்த்ததும் தெரிந்தது விஷயம். அவர் எவ்வளவு வியப்பும் வருத்தமும் கொண்டாரென்பதைக் கூறவேண்டுமா? அவர் உடம்பெல்லாம் விறைக்கத் தன் புதல்வியிடம் சென்று "அடீ! நீ நெறி தவறிவிட்டாயே! அந்த அடிமைப் பயல் பி. எ. படித்திருக்கின்றானென்று நினைத்துவிட்டாயோ!" என்று பல பல கூறிவிட்டுச் சற்று நேரத்தின் பிறகு, சோமநாதன் வந்ததும் அவனை வேலையை விட்டு விடுதலை செய்திருப்பதாகக் கூறினார். அவனுக்குத்தான் காரணம் தெரிந்திருக்குமே; ஒன்றும் பேசாது மெதுவாகப் போய்விட்டான்.

* * *


உலகில் சிலருக்குக் கையிலிருக்கும் பொருள் ருசிக்காது. அதே பொருள் கைவிட்டுப் போய்விட்டதானால் அதற்காகக் கொட்டாவி விடுவர். அப்படிப்பட்ட கூட்டத்தைச் சேர்ந்தவள்தான் சாவித்ரி. அவளுக்குத் தினசரி பன்முறை சோமநாதனைப் பார்க்கும் வசதியிருந்தபோது அவனை ஏறிட்டும் பார்க்க மனம் வரவில்லை. அப்பால் அவன் வேலையை விட்டு நீங்கியதும் எங்கிருந்தோ முளைத்துவிட்டது பேராசை. ஒரு அளவுக்குத் தந்தையின் கண்டிப்பிலிருந்து தன் காதலன் பி. எ. படித்தவன் என்றும், அவள் மீது அளவிலாத காதல் வைத்திருந்தானென்றும் தெரிந்திருக்கலாம். ஆனால் முழுக் காதலுக்கும் பழனிச்சாமிப் பிள்ளையே காரண பூதராயிருந்திருக்க முடியாது!

அது எப்படியாவதுபோகட்டும். சாவித்ரியின் மனதில் சோமநாதனின் உருவம் நிலைபெற்றுவிட்டது. அவள் எவ்வழியிலாவது அவனைப் பார்க்கவாவது கூடுமா என்று யோசித்தாள். நல்ல வேளையாக அவன் கடையத்தை விட்டுத் தென்காசிக்குப் போகவில்லை. கடையத்தில் முன் தங்கிவந்த வீட்டிலேயே இருந்து கொண்டிருந்தான். அவ்வீடு சாவித்ரியின் வீட்டின் இருவீடுகளின் பின்புறமிருந்தது. சாவித்ரியின் படுக்கை அறையில் உட்கார்ந்திருந்தால் சோமநாதனின் படுக்கை அறையின் ஒரு ஜன்னல் நன்றாகத் தெரியும். அவசியமானால் சைகைகளால் பேசவோ புன்சிரிப்புத் தூவவோ செய்யவும் செய்யலாம். ஆனால், பாழும் மரக்கிளையொன்று இடையே மறுத்துக் கொண்டிருந்தது. அதன்மேல் கோபங் கொண்ட சாவித்ரி எப்படியாவது அக்கிளையை வெட்டி எடுத்துவிட வேண்டுமென்று யோசித்துக்கொண்டு ஒரு நாள்—அதாவது அவனை வேலையை விட்டு நீக்கிய மறுநாள்—இரவு 11 மணி சுமாருக்கு சாவித்ரி மெதுவாக ஒரு அரிவாளுடன் வெளிப்பட்டு, சோமநாதன் வீட்டின் பின்புறம் ஜன்னலோரம் நீண்டுகொண்டிருந்த கிளையை வெட்டிவிட்டாள். அதன்மேல் திருடன் நடக்கும் மாதிரி திரும்பிச் செல்லலானாள் அவள்.

சோமநாதன் இரவு பற்பலவிதக் கவலைகளால் படுத்திருந்தவன் யாரோ மரக்கிளையை வெட்டும் சத்தத்தைக் கேட்டுப் பொருக்கென எழுந்திருந்து வெளியே ஓடிவந்தான். அந்தோ! என்ன ஆச்சரியம்! அங்கு அதுகாறும் அவனை ஏறிட்டும் பாராதிருந்த சாவித்ரி அரிவாளுடன் போய்க்கொண்டிருந்தாள்! உடன் "யாரது திருடன்" என்று கூறிக்கொண்டு நெருங்கினான். சாவித்ரி வெட்கம், நாணம் முதலியவற்றால் முகம் விகாரமெய்தத் தலையை அப்பாலெடுத்தாள்.

ஆம்! வெற்றி வந்துவிட்டது. சோமநாதன் மெதுவாகத் தன் இடக்கரத்தை அவள் தோளில் வைத்துக்கொண்டு—சாவித்ரி ஏன் இவ்வாறு மரக்கிளையை வெட்டினாய்? இரவு தனியாகத் திருடன்போல் வரக் காரணமென்ன? நீதான், நான் வருடமொன்றாக முயன்றும் எத்தனையோ காகிதச் சுருள் அனுப்பியும் ஏறிட்டும் பார்த்தாயில்லையே. இப்போது வேலையிலிருந்து நீக்கப்பட்ட பிறகு ஏன் இங்குவந்தாய்? உனக்கு இம்மரக்கிளை எதற்கு?

என்பன போன்ற பல கேள்விகளைக் கேட்டான். அவள் வாய்திறக்கவே இல்லை. நாணத்தால் பார்வையைப் பூமிக்கு அர்ப்பணம் செய்துவிட்டாள். பார்த்தான் சோமநாதன் அவளது முழு அழகையும். கண்ணாகிய வாயினால் பருகினான். பருகிய அவ்வழகுக் கள் வெறியை உண்டுபண்ணி விட்டது. எனவே கன்னங்களிலும் நெற்றியிலும் உச்சியிலும் பன்முறை முத்தமென்னும் "சீல்"களைப் போட்டு அம்மங்கையைத்



சோமநாதன் மெதுவாகத் தன் இடக்கரத்தைச் சாவித்திரி தோளில் வைத்துக்கொண்டு பல கேள்விகளைக் கேட்டான்.

தனக்குச் சொந்தமென்று பதிவுசெய்து கொண்டான். இப்படி அவன் யாது செய்தும், அவள் வாய் அசையவே யில்லை. ஆதலால் மெதுவாகத் தன் அறைக்கு இட்டுச் சென்றான். அவள் நடைப்பிணம்போல் பின்னுடிப் போனாள். அங்கு சென்றதும் ஒரு சோபாவில் உட்காரவைத்து அவனும் பக்கத்தில் உட்கார்ந்து என்னென்னவோ கேள்விகள் கேட்டான். அவள் ஒன்றும் பேசாதிருந்துவிட்டுக் கடைசியில் "அப்பா தேடுவர்; போகவேண்டும்" என்றாள்.

சோமநாதன்:—இப்படி அப்பாவுக்குப் பயந்து இருந்து கொண்டிருந்தால் எப்படி நாம்........?

அவள் பேசவில்லை.

சோம:—என்னை வேலையிலிருந்து நீக்கிவிட்டார். நான் இன்னும் சில நாட்களுள் போய்விட வேண்டியவனாகவிருக்கிறேன். சாவித்ரி............நீ இப்படி மௌனமாயிருந்தால் பின்?........

சாவித்ரி எப்படியோ சிரமப்பட்டு "நான் வீட்டில் போய்க் கடிதமெழுதுகிறேன்...........நீங்கள் போக வேண்டாம்" என்று கூறி முடித்துவிட்டாள். இதனைக் கேட்டதும் சோமநாதன் அளவிட முடியாத பெரும் பெரும் சந்தோஷங்கொண்டு பன்முறை அவளுக்கு முத்தமிட்டுப் பொன்முதலிய பல உலோகங்களையும், கிளி குயில் போன்ற பல பக்ஷிகளையும், மான் முதலிய பல மிருகங்களையும் அவளாக உருவகப்படுத்தினான்.

• • •

என் அதிகம்! இருவரும் பிரிந்து சில மணி நேரமாகவில்லை; கடிதங்கள் அங்குமிங்கும் பிரயாணம் செய்யலாயின. கடைசியில் ஒரு நாளிரவு சாவித்ரி காணாமல் போனாள். பழனிச்சாமி எங்கும் தேடித் தேடி உயிரைவிட்டதோடு சோமநாதனையும் நன்றாக விசாரித்துப் பரிசோதித்தார்—அவன் தெரிந்திருப்பதற்கான லட்சணமே யிருக்கவில்லை. அப்படி இரண்டு நாள் போனதும் ரவண சமுத்திரத்தில் ராம நதியில் ஒரு பெண்ணின் பிணம் கிடக்கின்றதென்றும் அழுகி விட்டதால் ஆளடையாளம் தெரியவில்லையென்றும் வதந்தி பரந்தது. பழனிச்சாமி தன் சாவித்ரி தான் சோமநாதனுக்காக இறந்து போய் விட்டாளென்று நினைத்து ஏங்கினார். சில தடவை, "ஏ! சண்டாளி! இப்படி இறந்து போவாயென்று தெரிந்திருந்தால் அவனுக்காவது கட்டி வைத்திருப்பேனே. உயிரை இழப்பதை விட இளம் பெண்ணொருத்திக்கு மறுமணம் செய்து கொடுத்து விடுவது அவமானமா? ஊரார் பழி அதிகப்பட்டால் சீர்திருத்த வாதி என்றாவது கூறிக் கொள்வேனே-பாதகி! இப்படியேன் செய்தாய்? நான் இனி வாழ்ந்தென் செய்வேன்!" என்று கூறிக் கண்ணீர் விட்டார். அவர் மனைவியும் அப்படியே துக்கித்தாள். பக்கத்து வீட்டார் சிலரும் "ஆம். இப்படி இளம் பெண்களை விதவைகளாக்கிச் சித்திரவதைசெய்து அவர்களைத் தற்கொலைக்கு ஆளாக்கிக் கொள்வதைவிடக் கல்யாணம் செய்து கொடுப்பதில் தடையொன்றுமில்லை" என்றனர்.

இப்படிச் சிலநாள் போனதும் "உண்மையில் உங்கள் கருத்தை நிறைவேற்றினால் சாவித்ரி வருவாள்" என்று பொருள்படும் கடிதம் ஒன்று வந்தது.... அதனைக் கண்டால் மனம் குளிராதா? பழனிச்சாமி சம்மதித்தார். மனைவியும் சுற்றத்தார் சிலரும் கூட சம்மதித்தனர். அதன்மேல் ஒருநாள் திடீரெனச் சோமநாதன்—சாவித்ரிகள் தோன்ற சிறப்பாகக் கல்யாணம் நடைபெற்றது. இப்போது கடையம் பகுதிகளில் இளம் பெண்கள் அவ்வளவாகக் கலங்குவதில்லை. பெற்றோர்களும் பழம் புராணம் படிப்பதில்லை. விதவா விவாகத் தம்பதிகள் இன்பமாக வாழ்கின்றனர்.

மலேயாவுக்குத் தொழிலாளர்

மலேயாவில் ரப்பர்த் தோட்டம் அதிகமாக வேலை செய்ய ஆரம்பித்திருப்பதால் ஏராளமான தொழிலாளிகள் சென்று கொண்டிருக்கின்றனர். ஜூலை 27-ந் தேதி சென்னையிலிருந்து புறப்பட்ட எரின்பூரா கப்பலில் 1200 தொழிலாளிகள் போயினர். நாகபட்டணத்திலிருந்து அதே கப்பலில் 1000 பேர் சென்றார்களென்று சொல்லப்பட்டது. இது வரையிலும் இந்தியாவிலிருந்து (சமீபத்தில்) 6000 பேர் போயிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

செட்டிமார் நாட்டில்

தோழர் ஈ. வெ. ராமசாமி.

சுயமரியாதை—சமதர்ம இயக்கத் தலைவரான, தோழர் ஈ. வெ. ராமசாமி தோழர்கள் ராம. அழ. சிதம்பரம்—ரெங்கம்மாள், ராமசுப்பிரமணியம்—நீலாவதி, ராமசுப்பையா, அ. பொன்னம்பலம், ப. ஜீவானந்தன், எஸ். வி. லிங்கம், எஸ். லட்சுமிரதன் பாரதி M. A., B. L., முதலியவர்கள் கீழ்க் கண்ட இடங்களில் சமூகமுன்னேற்றப் பிரசாரம் செய்யச் சுற்றுப்பிரயாணம் வருவார்கள். இதற்குப் பின் திருநெல்வேலி ஜில்லாவில் சுற்றுப் பிரயாணம் செய்வார்கள்.

நிகழ்ச்சி விபரம்.

10—8—34	காரைக்குடி
11—8—34	தேவகோட்டை
12—8—34	குறிப்பிடவில்லை
13—8—34	சிவகங்கை
14—8—34	திருப்புத்தூர்
15—8—34	சிங்கம்புணரி
16—8—34	கீழச்சிவற்பட்டி

இந் நிகழ்ச்சியில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்கள் தவிர, மற்றும் சில இடங்களிலிருந்து பதில் கிடைத்ததும் அவ்விடங்கள் வெளியிடப்படும். சுற்றுப் பிரயாண சம்பந்தமாக ஏதாகிலும் விபரம் தெரிந்துகொள்ள விரும்பும் தோழர்கள் கீழ்க் கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

விலாசம்:—அ. பொன்னம்பலம், சுயமரியாதைப் பிரசார சபை, முத்துப்பட்டணம், காரைக்குடி, ராமநாதபுரம் ஜில்லா.

கோட்டையூர், விதவா விவாஹத் தம்பதிகளான தோழர்கள். ராம. அழ. சிதம்பரம், ரெங்கம்மாள் அவர்கட்கு காரைக்குடி, தேவகோட்டை, திருக்கோஷ்டியூர், கீழச்சிவற்பட்டி, புதுக்கோட்டை முதலிய இடங்களில் பாராட்டு உபசார விருந்துகள் நடைபெறுமென்று தெரிகின்றது.

சுதந்தரமே உயிர்.

பொருளாதார உலகம்

(திரு. B. N. ராஜன்)

இந்தியா அரசாங்கத்தில் ஏராளமான வெள்ளி மிகுந்திருப்பது வரையிலும் ஒரு ரூபாய் நோட்டுகள் வெளியிடுவதாக எண்ணமில்லை என்று பொருளிலாகா மெம்பர் கூறுகின்றார்.

* * *

உரோமாபுரியில் சர்வதேச (கம்பளி) மகாநாடு அண்மையில் கூடினது பொருத்தந்தானே? அதில் இங்கிலாந்தின் பிரதிநிதியான ஜோஸப் கிலே என்பவர் ஜப்பானின் போட்டியானது மேனாட்டு மக்களின் வாழ்க்கை அந்தஸ்துக்கே பெரும் ஆபத்தாகி விட்டதென்றும், அதைப் பாதுகாக்க ஒரு அகில உலகக் குழு நியமிக்கப்பட வேண்டுமென்றும் பரிந்து வேண்டினார்.

இத்தாலியின் பிரதிநிதியான கவாஜி என்பவர், பிரிட்டன்தான் இக்கப்போட்டியினால் அதிகத் துன்புறுவதால் அதுதான் வேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொண்டு முன் வரவேண்டுமென்றாராம்.

அதற்கு ஆங்கிலப்பிரதிநிதி, மேனாட்டுத்தொழிலுலகத்துக்கே பேராபத்தை விளைவிப்பதால் எல்லாரும் ஒன்றாக எதிர்க்கவேண்டுமென்று பதிலளித்தாராம்.

சமீப காலத்தில்தான் ஜப்பான் உரோம நெசவுச் சரக்குகளை ஏற்றுமதி செய்யத் தலைப்பட்டது. ஆனால் அது நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகப் பெருகி வருகின்றது.

இந்தியா, சீனா, டச்சு கீழ் இந்தியா முதலிய நாடுகளுக்கு ஜப்பான் அனுப்பும் ஏற்றுமதிப் புள்ளி விவரங்கள் :—

1931— 264,000 சதுரகஜங்கள்
1933—2,605,000 ,,

இவ்வளவு பெருகிக் கொண்டிருக்கும் ஏற்றுமதிக்கு காரணங்கள் பற்பல. ஜப்பானின் நாணயத் திட்டத்தில் 'என்'னின் மதிப்பைக் குறைத்தது ஒன்றாகும். ஜப்பான் தொழிலாளிகளுக்குக் கொடுக்கப்படும் கூலிக்கும் பிரிட்டனில் தொழிலாளிகட்குக் கொடுக்கப்படும் கூலிக்கும் அஜகஜாந்தர வித்தியாசம் மற்றொன்றாகும். பிரிட்டனிலே இந்தத்தொழிலில் கூலியாகக் கொடுக்கப்படுவதில் ஐம்பதில் ஒரு பங்கு தான் ஜப்பானில் கூலி வகையில் செலவாகின்றது.

ஆகவே ஒரு நாட்டில் மக்கள் சொற்பக்கூலிக்கு வேலை செய்வது மற்றநாடுகளுக்கும் ஆபத்துத்தான்.

பாதுகாப்பு வரிகளால் பிரிட்டனிலிருந்து ஜப்பானில் இறக்குமதி செய்யப்படும் சரக்குகள் எவ்வளவு குறைந்து விட்டனவென்பதைப் பின்வரும் புள்ளிகள் காட்டும்.

பிரிட்டனிலிருந்து இந்தியாவுக்குள் இறக்குமதி

1922 232,000,000 என்
1932 82,000,000 ,,

உரோமச் சரக்குகள் மட்டும்

1922 26,000,000 சதுர கஜங்கள்
1932 5,900,000 ,,

"ஏதிலார் குற்றம்போல் தன்குற்றம் பார்க்கில் பின் தீதுண்டோ மன்னுமுயிர்க்கு"

* * *

இந்திய—ஜப்பானிய ஒப்பந்தப்படிக்கு ஒரு குறித்த அளவுக்குமேல் ஜப்பான் நெசவுச் சரக்குகளை இங்கே இறக்குமதி செய்ய லாகாது. ஆனால் இதைச் சமாளிக்க ஜப்பானிய வியாபாரிகள் ஒரு சூழ்ச்சி செய்தனர். அதாவது சீனாவுக்கு ஜப்பானிலிருந்து சரக்குகளை அனுப்பி, அங்கிருந்து இந்தியாவுக்கு அனுப்பி, அதைச் சீனச் சரக்கு என்று சொல்லிவிடுவது. இதை அரசாங்கத்தார் அறிந்து, எங்கிருந்து வந்தாலும் ஜப்பான் சரக்கானால் அது குறித்த அளவிற்குமேல் வரக்கூடாதென்று தடைசெய்ய வேண்டிய முயற்சிகள் எடுத்துக்கொண்டிருக்கின்றனர்.

* * *

ஒட்டோவா ஒப்பந்தத்தினால் இந்திய அரிசி ஏற்றுமதி சிறிதளவு பெருகி



இவ்வாரத் தொடக்கத்தில் ஏற்பட்ட சந்திர கிரகணத்தன்று திருவல்லிக்கேணிக் கடற்கரையில் ஏராளமான ஜனங்கள் கடல் நீராடினர். —P.P.B.

யிருக்கின்றதென்று தெரிய வருகிறது. சென்னை மாகாணத்திலிருந்து ஏற்றுமதியாக்கப்படும் அரிசியும் அதிகப்பட்டிருக்கிறது.

வருஷம்.	ஏற்றுமதி.
1932–33.	66,912 டன்
1933–34.	79,344 ,,

* * *

பிரிட்டனிலே பல தொழிற்சாலைகளில் தொழிலாளிகளுக்கு இலாபத்தில் ஒரு பங்கும், தொழிலை நடத்துவதில் தக்க ஸ்தானங்களும் கொடுக்கப்பட்டு வருகின்றன. 1933 ல் இவ்வாறு 447 தொழிற்சாலைகள் நடந்து வந்தன. இதனால் நன்மையடைந்த தொழிலாளிகளின் தொகை சுமார் 217,000 இருக்கலாம். இவர்களுக்கு ஆண்டொன்றுக்கு சராசரியாக இந்த முறையினால் வந்த அதிக வருமானம் 10 ப. 11 ஷி. 8 பென்சு. இது அவர்கள் ஒவ்வொருவருடைய மொத்த உழைப்பில் 100-ல் 5½ பங்கு.

பிரிட்டிஷ் தொழில்களின் சமஷ்டிக் கூட்டம், பிரிட்டிஷ் அரசாங்கம் தொழிலுக்காக செய்துள்ளவற்றை ஆராய்ந்துள்ளது.

சமீபத்தில் பிரிட்டனில் நான்கு முறைகள் கையாளப்பட்டன.

(1) புதிதான பாதுகாப்பு வரிகள்.

(2) ஒட்டாவா அகில சாம்ராஜ்ய ஒப்பந்தங்கள்.

(3) ஜர்மனி, நார்வே, ஸ்வீடன், ஐஸ்லாந்து, பின்லாந்து, ஆர்ஜென்டினா முதலிய நாடுகளோடு செய்துகொண்ட ஒப்பந்தங்கள்.

(4) பிரிட்டிஷ் விவசாயப் புனருத்தாரணம்.

இந்த நான்கிலே, முதலாவதான பாதுகாப்பு வரிகளை விதிக்கும்போது பலர் எதிர்த்தார்கள். இதனால் ஏற்றுமதி குறைந்து விடுமென்றார்கள். இவற்றிற்கெல்லாம் மாறாக, உள்நாட்டு வியாபாரத்துக்கும் ஏற்றுமதி வியாபாரத்துக்கும் சற்றுச் செழிப்பு உண்டாயிருக்கிறது. வியாபாரமந்தமே தனி வழக்காக இருக்கும் ஒரு உலகிலே, பிரிட்டிஷ் ஏற்றுமதி சென்ற ஆண்டில் சிறிது கூடியிருக்கிறதென்றால், பாதுகாப்பு வரிகள் எவ்வளவு வேலை செய்ய வல்லன வென்று விளங்கும்.


ஒட்டாவா ஒப்பந்தத்தினால் பிரிட்டனைவிட சாம்ராஜ்ஜிய நாடுகளுக்கே அதிக நன்மை விளைந்துள்ளதாம்.

இறுதியாக, அரசாங்கத்தாரால் செய்யப்படும் விவசாயத் திட்டங்களுக்கும் கைத்தொழில் திட்டங்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டுமென்று அறிவிக்கப்படுகிறது.

* * *

சென்னை சர்வகலாசாலையில் பொருளாதார நூல் சம்பந்தமாகச் சொற்பொழிவுகள் நிகழ்த்தவும், நூற்கள் வெளியிடவும் ஸர். வில்லியம் மேயர் என்று இந்தியா அரசாங்கத்தில் யுத்த காலத்தில் பண இலாகா மெம்பராக இருந்த ஒரு ஆங்கில கனவான் 3000 பவுன் நன்கொடையாக அளித்துப் போனார். ஆண்டாண்டு தக்க அறிஞரைக்கொண்டு சொற் பொழிவுகள் நடாத்தி நூற்களும் வெளியிடப்படுகின்றன. அதற்காக 1500 ரூபா நன்கொடை யளிக்கப்படுகின்றது. இவ்வாறு 1927 முதல் நடக்கின்றது. இந்த வருடம் ராவ்பகதூர் கெ. வி. இரங்கசாமி ஐயங்கார் அவர்கள் இந்தச் சொற்பொழிவுகளை நிகழ்த்துகின்றார்கள்.

அரசாங்கச் செலவைப்பற்றிப் பேசும்போது, படைகளை வைத்துக்கொள்வதற்காகப் பிடிக்கும் செலவே தற்காலம் உலகத்தின் பொருளாதார முற்போக்குக்குப் பெருந்தடையாக இருக்கின்றது என்று அழுத்தமாகக்காட்டினர். மேலும் பொது ஜனங்களுடைய தேகாரோக்கியத்துக்கும், ஆயுள் விருத்திக்கும், கல்விக்கும், தொழிலுக்கும் உதவி செய்யும் செலவே நல்ல வழியில் செய்யக்கூடிய செலவென்றும் மற்றவையெல்லாம் பாழ் என்றும் கூறினர்.



சென்னை சர்க்கார் ஸ்தலஸ்தாபன ஆட்சி இலாக்காவின் காரியதரிசியாயிருந்த மிஸ்டர் E. கொன்ரான் ஸ்மித், இந்திய சர்க்கார் ரிபார்ம் ஆபீஸ் ஜாயிண்டு காரியதரிசியாகப் போயிருக்கிறார். அவருக்கு தேனாம்பேட்டை கோஷன் விடுதியில், விடுதலை செய்யப்பட்ட கைதிகள் உதவி சங்கத்தார் உபசார விருந்தொன்று நடத்தினர்கள். படத்தில் முக்கிய விருந்தினர் நடுவில் காணப்படுகின்றார். —P. P. B.

பல தொழில்கள் அரசாங்கத்திலிருந்து நேராகவே நடத்தப்படவேண்டும். இரயில்வே முதலியன இப்பொழுது இவ்வாறே இருக்கின்றன. இன்ஷ்யூரன்ஸ் தொழிலும் தனிக் கம்பெனிகள் நடத்துவதை நிறுத்தி அரசாங்கத்தார் மேற்கொள்ளவேண்டும். இந்த வழி

யில் ஆண்டொன்றுக்கு 9 கோடி ரூபா வருமானம் வரும். ஆசிரியான திரு. ஐயங்கார் கூற்று சமீபத்தில் திரு. ஸி. டி. நாயகம் அவர்கள் இந்த விஷயத்தில் செய்த கிளர்ச்சியை ஆமோதிப்பதாகுமென்பது அன்பர்கள் அறிவார்கள்.

* * *

புதன்கிழமையன்று இந்தியா சட்ட சபையில் இந்திய இரும்பு வரி மசோதா என்ற ஒரு புது மசோதா கொண்டுவரப்பட்டிருக்கின்றது. இந்தப் புதுப் பில் அமுலுக்கு வருமானல்—வருமென்பதற்குஞ்சந்தேகமா?—அனுவசியமாகஇந்திய இரும்பின் விலை அபரிமிதமாக ஏறும்; பிரிட்டிஷ் இரும்புத் தொழிலுக்கு நல்ல வேட்டைதான்; மற்றை ஐரோப்பிய நாட்டு இரும்புச் சாக்குகளின் இறக்குமதி குறையும். இரும்பு விலையுயர்வதால் குடிமக்கள் பணம் கொள்ளை போகும். அதுவும், பிரிட்டிஷ் இரும்புத் தொழில் கொழுக்க அரசாங்க வரி வருமானம் அதிகரிக்கும். இதற்கு இந்த முறையைத் தவிர வேறு முறைகளில்லையா என்று பல வியாபாரிகள் சங்கங்கள் கொதித்து எழுகின்றன. என்ன எழுந்தால் என்ன? பில்லை அங்கத்தினர்களிடையே முன்னைப் பார்வையிட (circulation)க் கூட அனுப்பவில்லையே.

* * *

ஏப்ரில் மாதத்தில் டில்லியில் நடந்த அகில மாகாணப் பொருளாதார மகாநாட்டில் விவசாயக் கடனைப்பற்றி யோசனை நடந்தது. பொருளாதார நிலைமையிலும், நில உரிமை முறைகளிலும் மாகாணத்துக்கு மாகாணம் பற்பல வேறுபாடுகள் காண்பதால், இந்த பிரச்னையை அந்தந்த மாகாணமே வேண்டியபடி பார்வையிட்டுத் தீர்த்துக்கொள்ள வேண்டியதென்றும், மத்திய அரசாங்கம் தலையிடுவதிற் பயனில்லையென்றும் முடிவு கட்டப்பட்டது. ஒவ்வொரு மாகாணத்திலுமே பொருளாதார நிலைமையிலும், நில உரிமை முறையிலும் பல வேறுபாடுகளிருக்குமே? ஒரு ஜில்லாவுக்கு மற்றொரு ஜில்லா வேறாக இருக்குமே? அப்பொழுது அந்தந்த ஜில்லா அதனதன் கடனைத் தீர்க்கவேண்டிய முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டியது என்று விட்டுவிடுவார்களா? ஒவ்வொரு தாலுகாவுக்குமே வேற்றுமை இருக்குமே? ஒவ்வொரு கிராமத்துக்குமே வேற்றுமை இருக்குமே? ஒவ்வொரு விவசாயிக்கும் வேற்றுமை இருக்குமே? அப்படியானல் அவரவர் கடனைத் தீர்க்க அவரவர் வழி தேடிக்கொள்ளுங்கள் என்று ஏற்படும் போலிருக்கிறது. இதை நேராகவே சொல்லிவிடலாமே. அரசாங்கம் சட்டம்செய்து விவசாயிகள் கடனைத் தீர்க்க? என்னருமை உழவர்களே, பகற்கனவு காணவேண்டாம்.

* * *

அகில சாம்ராஜ்ஜிய பருத்தி சாகுபடி சங்கத்தாரின் 13-வது பொதுக்கூட்டத்தின் அறிக்கை பல முக்கிய விஷயங்களைத் தெரிவிக்கின்றது. பருத்தித் தொழிலில் சென்ற 10 வருஷங்களாக ஏற்பட்டிருக்கும் மந்தம் சற்றும் குறைந்ததாகக் கூறுவதற்கில்லை. ஆனல் பிற நாடுகளைவிட சாம்ராஜ்ஜிய நாடுகளிலேயே இருந்து தனக்கு வேண்டிய பருத்தியை வாங்குவது லங்காஷியர் முதலாளிகளுக்கு இலாபகமான தென்பது எடுத்துக் காட்டப்படுகிறது.

சென்ற வருஷத்தில் இந்தியா தவிர்ந்த ஏனை சாம்ராஜ்ஜிய நாடுகளில் சாகுபடி செய்யப்பட்ட பருத்தியளவு போல அதுவரை கிடையவே கிடையாது. ஆனல் இந்த வருஷம் (1933—34)ல் அதைவிடவும் கூடுதலாக விளைந்திருக்கிறது. மொத்தத் தொகை 50,000 பேல் கட்டுகளாகும். இது உலக உற்பத்தியின் ஒரு சிறிது அளவாகவே இருந்தாலும், வருங்காலத்தில் எவ்வளவோ அதிகரிப்பதற்குள்ள குறிகள் காணப்படுகின்றன.

1931—	1,056, 828, 00	பவுண்டுகள்
1932—	536, 910, 00	,,
1933—	1,089, 486, 00	,,

இதனல், இப்பொழுது இருக்கிற நிலை இருந்தால், நம்பருத்தி விவசாயிகள் இன்னும் விலை குறைந்துவிடுமோ என்ருவது ஒருவாறு மனந்தேறி இருக்கலாமென்று நாம் அபிப்பிராயப் படுவதற்கு இடமுண்டல்லவா?

* * *

பிரஞ்சு நெசவுத் தொழில் மிக நெருக்கடியான நிலைமையில் இருக்கின்றதாம். அதை விசாரணை செய்ய ஒரு மந்திரிக்குழுவை ஏற்படுத்தியிருக்கிறார்கள். நெசவுச் சாக்குகளின் ஏற்றுமதி செய்பவரிடமிருந்து வசூலிக்கப்படும் வரித்தொகை வேண்டிய வளவு குறைக்கப்படப்போவதாக எதிர்பார்க்கப்படுகிறது.

பொதுவுடைமை ஸ்தாபனங்கள் தடை.

27-ந் தேதி இந்தியா சர்க்கார் உள்நாட்டு இலாகா ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளார்கள் அது:— "இந்தியாவின் பொதுவுடைமைக் கட்சி, அதன் கமிட்டிகள், சப் கமிட்டிகள், கிளைகள் முதலியவைகளின் நோக்கம் சட்ட பூர்வமாக நிர்வாகம் செய்வதையும் சட்ட சமாதானத்தைப் பாதுகாப்பதையும் தடைசெய்ய வேண்டுமென்று இருக்கிற தென்றும், அவைகளால் பொதுஜன அமைதிக்கு அபாயம் நேரிடுமென்றும் சபையுடன் கூடிய கவர்னர் ஜெனரல் அபிப்பிராயப் படுகின்றார். எனவே, 1932-ம் வருடத்து (1932-ம் வருடத்து 23-வது சட்டம்) கிரிமினல் லா திருத்தச் சட்டத்தினபடி திருத்தப்பட்ட 1908-ம் வருடத்து (1908-ம் வருடத்து 14 சட்டம்) இந்தியன் பீனல் லா திருத்தச் சட்டம் 16-வது பிரிவு 2-வது உப பிரிவில் கூறப்பட்டிருக்கும் அதிகாரங்களுக் கிணங்க நிர்வாக சபையுடன் கூடிய கவர்னர் ஜெனரல் மேற்கூறிய சங்கங்களையும், அதன் கமிட்டிகளையும், கிளைகளையும் 1908 வருடத்து இந்தியன் கிரிமினல் லா திருத்தச் சட்டம் 2-வது பாகத்தில் கூறப்பட் டிருப்பதைப் போல் சட்ட விரோதமான சபைகளென்று தெரிவித்திருக்கின்றார்".

எலக்ட்ரிக் ரயிலில் முதல் வகுப்பில்லை

ஜூலை 27-ந்தேதி எழும்பூரில் கூடிய தென்னிந்திய ரயில்வேபோர்டுக் கமிட்டிக்கூட்டம் மின்சார ரயிலிலிருக்கும் முதல் வகுப்பை எடுத்துவிடவேண்டுமென்ற ரயில்வே அதிகாரிகள் ஆலோசனையை ஒப்புக்கொண்டது.

காரைக்குடி ரயில்வே ஸ்டேஷனில் சிற்றுண்டிச்சாலை

காரைக்குடி, ஸ்ரீவில்லிப்புத்தூர், திண்டுக்கல் ஆகிய விடங்களில் சீக்கிரத்தில் ரயில்வே சிற்றுண்டிச்சாலைகள் திறவப் படுமென்று தெரிகிறது.

ஆகாகான் செய்த அரும்பெரும் தொண்டு

சமீபத்தில் ஆகாகான் பிரிட்டிஷ் சர்க்காரிடம் தாம் செய்த ஊழியங்கட்காக ஒரு தேசத்தைத் தரவேண்டுமென்று கேட்டதான செய்தி வெளிவந்ததை நேயர்கள் அறிவார்கள். இப்போது ஸ்ரீ பரூசா அவர்கள் ஆகாகான் என்னென்ன ஊழியங்கள் செய்தார் என்பது விளங்க, அடியில்வரும் கேள்விகளை விடுத்திருக்கிறார். இதன் மூலம் அவர் வரலாறும் வெளியாகின்றது.

கேள்விகள்.

1. அரசியல் சதுரங்கத்தில் இந்தியர்கள் ஏமாந்த பேர்வழிகளல்லவா?

2. இல்லையானால் லண்டன் மகாநாடுகளில் இந்தியர் கோஷ்டிச் சார்பாக ஆகாகானை எப்படித் தலைவராகத் தேர்ந்தெடுக்க முடியும்?

3. கிலாபத் இயக்கத்திலே ஆகாகானின் மனப்பான்மை என்ன?

4. ஈராக்கில் அவரை மன்னராகச் செய்ய சூழ்ச்சிகள் நடைபெறவில்லையா! இதை ஐனுப் யாகூப் ஹாசன் சரியான காலத்தில் பலமாக ஆட்சேபிக்கவில்லையா?

5. தீண்டாதார்களை எல்லாம் முஸ்லிம்களாக மாற்றி விடுவதற்கு மௌலானா முகம்மது அலிக்கு ஒரு கோடி ரூபாய் கொடுப்பதாகக் கூறவில்லையா ஆகாகான்!

6. தீண்டாதார்களை இரு பங்காகப் பிரித்து, பாதிப்பேரை முஸ்லிம்களாகவும் பாதிப்பேரை ஹிந்துக்களாகவும் சேர்த்துக் கொள்ளலாமென்று கயா காங்கிரசில் மௌலானா சாஹிப் பஹிரங்கமாக ஓர் யோசனை சொல்லவில்லையா?

7. இதுவரை இந்தியாவின் நன்மையைவிட பிரிட்டனின் நன்மையையே ஆகாகான் முக்கியமாகக் கருதி பிரிட்டன் சார்பாகவே இருந்து வந்ததில்லையா?

8. பிரிட்டனிடம் அதிகமான விஸ்வாசம் கொண்டிருப்பதற்காகப் பாரசீக மன்னரின் அதிருப்திக்கு ஆகாகான் ஆளாகவில்லையா?

9. இதனால் பாரசீகத்தில் அவருக்கிருந்த சொத்தை அவர் இழந்துவிட வேண்டியதாக ஏற்பட்டதல்லவா?

10. பிரிட்டிஷ் பலூசிஸ்தானத்தைத் தமக்கு உரிமையாக்கிக்கொள்ள வேண்டுமென்று ஆகாகான் முயற்சி செய்யவில்லையா?

11. இந்தியர் இன்னும் உண்மையை உணராமல் இங்கிலாந்தில் ஆகாகானின் தலைமையை ஒப்புக்கொள்ளப் போகிறீர்களா?

எவ்வளவு சீக்கிரமாக அவரது தலைமை நிராகரிக்கப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு எல்லோருக்கும் க்ஷேமம் பெருகும்.

காந்தி நாமம் ஓங்குக!

காணாமற் போன சரசா

(நாகப்பன்)

"குழந்தைகளென்ருல் பெற்றோருக் கடங்கவேண்டும். எத்தனை நாள் ஜாடை ஜாடையாகச் சொல்வது ; கண்டிப்பது? ....காலம் கெட்டுப்போய் விட்டது. சின்னப் பயல்களெல்லாம் வாய் பேசத் தொடங்கி விட்டார்கள். உலகம் என்ன அழிவு காலத்தை நோக்கி இயங்கிக் கொண்டிருக்கிறதோ இப்படி இவர்களெல்லாம் பெற்றோருக்கு அடங்காது நடக்க"

"என்ன பாட்டி! திட்டுகிருய்? வாயை மூடிக்கொண்டு வந்த சங்கதியைச் சொல்லேன்."

"என்னடா சீறுகிருய்? கல்யாணத்தைச் செய்து கொள்ளென்ருல் அவள் வேண்டாம், இவள் வேண்டாமென்கிருயே! உன் ஆசையைத்தான் சொல்லித் தொலையேன்"

"என் கல்யாணத்தைப்பற்றி நானல்லவா அக்கரை யெடுக்கவேண்டும்? உனக்கென்ன எரிச்சல்?"

"போ எப்படியாவது, தொலை. பெரியோரிடத்தில் எதிர் பேசலாகாதென்பது தெரியவில்லை. எப்படியாவது உன் மனம்போல் செய்."

என்று கூறிவிட்டுக் கோபமாகப் பாட்டி போனதும் ராஜசேகரன் புத்தகங்களைப் போட்டுவிட்டு துப்பறியும் ராமசாமியிடம் சென்ருன்.

"வரவேண்டும்! ஏது இவ்வளவு தூரம் வந்தது? என்ன விசேடமோ?" என்று விசாரித்தார் துப்பறிபவர்.

"ஒன்றுமில்லை சார்! ஒரு சிறு சமாசாரத்தை உம்மிடம் சொல்லிச் செல்லலாம் என்று வந்தேன்" என்ருன் இராஜசேகரன்.

"என்ன சமாசாரம், சொல்லுங்கள். தங்களுக்கு என்ன உதவி வேண்டுமோ அவ்வளவும் நான் செய்யத் தயாராக இருக்கிறேன்."

"நான் சொல்லப்போகும் விஷயம் மிகவும் இரகசியமாகச் சிலகாலம் இருக்க வேண்டும். ஆகையால் தயைசெய்து அதைக்கேட்டு விசாரித்து எனக்கு உதவி செய்வீரா?"

"அப்படியே ஆகட்டும்; சொல்லுங்கள்."

"துப்பறிபவரே! நான் கூறும் விஷயம் 5 வருடங்களுக்கு முன்பு நடைபெற்ற சம்பவம். எனது வாழ்க்கையையே மாறச்செய்த சம்பவம் அது. எனது வீட்டில், நானும் எனது தாயாரும்—ஒரு வேலைக்காரியான இளம் பெண்ணும்தான் அப்பொழுது இருந்து வந்தோம். அவ்வேலைக்காரப் பெண் நல்ல அழகுடையவள். தொழிலால் வேலைக்காரியே யாயினும் அழகில் அவளுக்கு நிகர் யாருமில்லை. வீட்டு வேலை முழுதும் அவளே கவனித்து வந்தாள். அவளுக்கு வயது சுமார் 15 இருக்கும். தக்க பருவம். எனக்குக் கலியாணமுமில்லை. இப்படி இருந்தால் என்ன ஏற்படும்? எங்களுக்குள் சிநேகம் உதயமாயிற்று. அச்சிநேகம் அதிகம் ஆக ஆகக் காதலுருவடைந்தது. இனி சொல்லவும் வேண்டுமா? மாதங்கள் பல இன்பமாகக் கழித்தோம். இவ்விஷயம் ஒருவருக்கும் தெரியாது.

"இப்படி நடந்து கொண்டிருக்கும் சமயம் ஓர் நாள் மாலை சுமார் 6 மணி இருக்கும். என்னை எனது தாயார் அழைத்தார். நான் சென்றேன். ஆ! அங்குகண்ட காட்சியை நான் என்னென்று சொல்லுவேன்! அன்பரே! நான் உண்மையாக—காதலித்த பெண்ணை—வேலைக்காரியான சரசா—அழுது கொண்டு சோர்ந்த முகத்துடன் குனிந்த தலையுடன் நின்று கொண்டிருப்பதையும் எனது தாயார் கோபமாக—கடுமையான பார்வையுடன்—அவளை நோக்கிக் கொண்டிருப்பதையும் கண்டு நான் திடுக்கிட்டேன். எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. அப்படியே ஸ்தம்பித்து நின்று விட்டேன். எக்காரணம் பற்றியோ அறிகிலேன். என்னைப் பார்த்து எனது தாயார் "சேகரா! இப்பெண் கூறும் விஷயம் முழுதும் உண்மைதானு?" என்று கேட்டாள்.

நான் எதை நினைத்துக்கொண்டு, எப்படிப் பதில் சொல்வது? நான் எனது தாயாருக்குப் பயந்துகொண்டு "அவள் சொல்வது பொய்" என்று கூறினேன். ஆ! நண்பரே! நான் அப்பொழுது அப்படிப் பொய் சொல்லியதற்கு இப்பொழுது படுகிறேன் கஷ்டம்"

என்று மேல் சொல்லாமல் நிறுத்தினுன்.

"என்ன கஷ்டப்படுகிறீர்?" என்று துப்பறிபவர் கேட்டார்.

"நான் அவ்வாறு கூறியதும் எனது தாயார் உடனே அவளை வீட்டைவிட்டுச்சென்று விடும்படி உத்தரவு போட்டாள். பரிதாபகரமான நிலைமையில் அவள்—சரசா—உண்மையாக நான் காதலித்த எனது கண்மணி—ஒன்றும் பேசாமல் வீட்டைவிட்டுச் சென்று விட்டாள். அன்று இரவு முழுதும் எனக்குத் தூக்கமில்லை. ஆம்! தூக்கமுமில்லை —சுகமுமில்லை. அபலைப் பெண்ணின் அழுகுரல் என்னைத் தூங்க விடவில்லை.

தோழரே! நான் ஒன்று சொல்ல மறந்து விட்டேனே! அதாவது, நானும் அவளும் பல மாதங்கள் வரை இரகசியமாக இன்புற்ருேம் என்று சொன்னேன் அன்ருே? அச்சமயம் அவள் கர்ப்பவதியானுள். இதை உங்களுக்கு முதலில் சொல்லவில்லை. அவள் என் வீட்டை விட்டுச் செல்லும் பொழுது 7 மாதக் கர்ப்பிணி. அந்தோ! சண்டாளனுன நான் கிஞ்சிற்றும் முன் யோசனையின்றி எனது தாயாரிடம் 'இல்லை' என்று சொன்னேனே, என்று பின்புதான் எனது மனம் அல்லல் உற்றது.

"மூன்று மாதத்திற்குப் பின்பு எனது காதலியான சரசாவிட மிருந்து ஒரு கடிதம் வந்தது. அதிக ஆவலுடன் அதைப் பிரித்துப் பார்த்தேன். அதில் "ஆண் குழந்தை ஒன்று பிறந்தது" என்றுமட்டும் எழுதியிருந்தது; வேறு விஷயமேயில்லை. எனக்கு அப்பொழுது தான் எனது நிலைமையைப் பற்றியும், நான்செய்த துரோகச் செயலைப்பற்றியும் தோன்றிற்று. எந்த ஊரிலிருந்து அக்கடிதம் போடப்பட்டது என்பதைப் பார்க்க, சென்னையில் திருவல்லிக்கேணியில் பார்த்தசாரதி கோவில் தெருவில் 454 நெம்பர் வீடு என்ற விலாஸமிருந்தது. உடன் நான் சென்னைக்கு ஒரு டிக்கட் வாங்கிப் புறப்பட்டுச் சென்றேன். திருவல்லிக்கேணியில் குறிப்பிட்ட வீட்டை அடைந்து விசாரிக்க, "அப்பெண் சென்ற இரவுதான்

இங்கிருந்து எங்கேயோ சென்று விட்டாள்'' என்ற தகவலை அவளர் கூறினர். ஆ! எனது மனம்பட்ட பாட்டை என்னென்று சொல்வேன்! சென்னை முழுதும்தேடி அலைந்தேன். கண்டு பிடிக்க முடியவில்லை. பத்திரிக்கைகளிலும் விளம்பரம் செய்தேன். ஒரு தகவலும் கிடைக்கவில்லை. இது வரையும் எந்தத் தகவலும் பெற்றேனல்லேன். வருடமும் ஐந்துக்கு மேலாகக் கழிந்தாயிற்று'' என்று கூறி முடித்தான்.

"அவளை இப்பொழுது கண்டு பிடிக்க வேண்டுமென்கிறீரா?'' என்று கேட்டார் துப்பறிபவர்.

"ஆம்! அவசியம் கண்டு பிடிக்க வேண்டும்.''

"ஏன் இவ்வளவு நாட்களாக இதைப் பற்றிக் கவலை எடுத்துக்கொள்ளவில்லை?''

"இப்பொழுதுதான் அதற்கு அவசியம் ஏற்பட்டது. ஏனெனில் எனது தாயார், என்னை இப்பொழுது என் பாட்டி மூலமாகத் திருமணம் செய்து கொள்ளும்படி வற்புறுத்துகிறார். ஆனல் எனக்கோ மணம் செய்து கொள்ளப் பிரியமில்லை.''

"ஏனே?''

"முன்பு எனது தாயாருக்கு எதிரில் கோழைத்தனமாக நடந்துகொண்டதை இப்பொழுது அறிந்தும்—நான் தெரிந்தும் இன்னுமா வேறு பெண்ணை மணந்துகொள்ள வேண்டும்? அப்படிச் செய்து கொண்டால் அப்பெண்ணின் கதி என்ன ஆகும்? வீணுக ஓர் பெண்ணைக் கெடுத்தவன்—கயவன்—பாதகன்—என்ற கெட்ட பெயர்தானே எனக்குக் கிடைக்கும்? ஆகையால் நான் குற்றமற்றவன் என்பதை அவளுக்கு இப்பொழுது நிரூபித்து மறுபடியும் அவளையே மணம்செய்து கொள்ள முயற்சிக்கிறேன். அவளிடம் எனது முழு விருத்தாந்தத்தையும் தெரிவித்து—மன்னிப்புக் கேட்டுக்கொண்டு........''

"அவள் இவ்வுலகில் இல்லாமலிருப்பின்'' என்று இடைமறுத்துக் கேட்டார் துப்பறிபவர்.

"அப்படி இருந்தால் வேறு பெண்ணை நான் மணம்செய்து கொள்வது குற்றமில்லை யன்றோ? ஆனல் எனது மனதில் என்னவோ—அப்பெண் இன்னும் இவ்வுலகில் இருக்கிறாள் என்ற எண்ணமிருக்கிறது. ஆகையால் துப்பறிபவரே! எப்படியாவது நீர் கஷ்டப்பட்டு 4 மாதங்களில் உண்மையை எனக்குத் தெரியப்படுத்த வேண்டும். அதனல் ஏற்படும் முழுச் செலவும் எனதே!''

"சரி—என்னல் கூடிய மட்டும் முயற்சி செய்து பார்க்கிறேன்'' என இராஜசேகரன் அவரிடம் விடைபெற்றுச் சென்றான்.

• • •

மாதங்கள் மூன்று ஓடி மறைந்தன. இராஜசேகரன் ஒரு நாள் தினசரிப் பத்திரிக்கையை எடுத்து படிக்க ஆரம்பித்தான். அவனுக்குப் பக்கத்தில் அவனுடைய தாயார் வீற்றிருந்தார்.

"அம்மா! இன்று ஒரு விசேடம். நமது ஊருக்கு ஒருவர் வருகிறாராம்—நேற்று நான் படித்தேன் பார்—அதாவது "உலகில் அழகிய பெண் ஒருத்தி சென்னைக்கு வந்திருக்கிறாள்'' என்று—அவள்—அந்த அழகி—நமது நகருக்கு வருகிற வெள்ளிக்கிழமை வருகிறாளாம் என்றான்.

"எங்கு இறங்குகிறாள்!'' என்று கேட்டார் தாயார்.

"நமதூர் ஜெமீன்தாருடைய விருந்தினராக வருகிறாளாம்''

"ஓகோ அப்படியா? அப்படியாயின் அன்று அவளுக்கு ஒரு விருந்தேற்படுத்துவார்கள்—நாமும் சென்று பார்ப்போம்'' எனச்சம்பாஷணை முடிவுற்றது.

மறுநாள் வியாழக்கிழமை இவனுக்கு அழைப்புத்தாள் ஒன்று வந்திருந்தது. அதில் வெள்ளிக்கிழமை மாலை ஜெமீன்தாருடைய வீட்டில் நடக்கும் டீ—பார்டிக்கு வரும்படி அழைக்கப்பட்டிருந்தது. மறு நாள் மாலை இராஜசேகரன் நன்ருக உடை உடுத்திக்கொண்டு ஜெமீன்தாருடைய பங்களாவிற்குச் சென்றான்.

பங்களாவின் முன் புறம் பந்தல் போடப்பட்டு, அழகிய கொடிகளினல் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மோட்டார்கள் 'வரிசையாக ரோட்டில் நின்று கொண்டிருந்தன. 'ஹால்' முழுதும் கூட்டம் நிரம்பி இருந்தது. மத்தியில் அழகில் தனக்கு நிகரில்லை என்று நினைக்கும்படியான ஓர் இளம்பெண்—வயது 19 அல்லது 20 இருக்கலாம்; நடு நாயகம் போல் வீற்று இருந்தாள். அவளுடைய அழகைப் பற்றி அதிகம் எழுதவில்லை—எழுதினல் ஒரு கால் வாசகர்கள் வெருண்டாலும் வெருண்டு விடுவார்கள்.

இவ்வழகிய அணங்கை அக்கூட்டத்திலுள்ளோர் எல்லோரும் இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டேயிருந்தனர் என்று சொல்லவும் வேண்டுமோ?

நமது கதா நாயகனை இராஜசேகரன் ஹாலில் நுழைந்ததும் அவனை வரவேற்று, ஜெமீன்தார்—அவ்வழகியினிடம் அழைத்துச் சென்று அவனை அறிமுகப் படுத்தி வைத்தார். இருவரும் சிறிது நாழிகை சம்பாஷித்தனர்.

இராஜசேகரனுக்கு அப்பெண்ணை எங்கேயே—முன்பு, பார்த்திருப்பது போலவும்—அவளுடைய பேச்சுகளையும் கேட்டிருப்பது போலவும் தோன்றிற்று. ஆனல் நிச்சயமாக நினைப்பதற்கில்லை என்று நினைத்து டீ—பார்ட்டியில் கலந்து கொண்டான். மணியும் 7 அடித்தது. இச்சமயம் யாரோ அழைப்பதாக இராஜசேகரனிடம் அரண்மனை வேலைக்காரன் வந்து தெரிவித்தான். "இது என்ன—சிவ பூஜையில் கரடி புகுந்தாற் போல இச்சமயத்தில் நம்மை அழைப்பது'' என்று நினைத்துக்கொண்டு பங்களாவை விட்டு வெளியில் வர, அங்கு துப்பறியும் ராமசாமி நின்று கொண்டிருப்பதைப் பார்த்து "என்ன சமாசாரம்?'' என்று கேட்டான்.

"கண்டு பிடித்து விட்டேன்'' என்றார் துப்பறிபவர்.

"கண்டு பிடித்து விட்டாயா? எங்கு இருக்கிறாள்? சீக்கிரம் சொல்'' என்று கேட்டான்.

"இங்குதானிருக்கிறாள்''

"இங்கென்றால் இவ்வூரிலா? எவ்விடத்தில்?''

"இந்த வீட்டிலேதான்

"இவ்வீட்டிலா? ஹா! கடைசியில் என்னுடைய எண்ணம் நிறைவேறி விட்டது போலும்''

"அழகிற் சிறந்தவள் என்று சொல்கிறவளான அப் பெண்ணே தான்—உனது வேலைக்காரியும்—நீ காதலித்து நிராகரித்த பெண்ணும்'' என்றார் துப்பறிபவர்.

இதைக் கேட்டு ஆச்சரியப்பட்டவனல் அரை மணி நேரம் பேச வில்லை. துப்பறிபவருக்கு இனாமாக இரண்டாயிர ரூபாய்க்கு ஒரு 'செக்' எழுதிக் கொடுத்து விட்டு இராஜசேகரன், பங்க

ளாவினுள் சென்ருன். இதற்குள் வந்த விருந்தினர் எல்லோரும் சென்று விட்டனர். பங்களாவிற்குப் பின்புறமுள்ள நந்தவனத்தில் அழகிய அவ்வணங்கு ஓர் சாய்வு நாற்காலியில் வீற்றிருப்பதைப் பார்த்து இராஜசேகரன் அங்கு சென்ருன்.

இவனைக் கண்ட அப்பெண்—அவ்வழகி—எழுந்து நின்ருள்.

உடன் ராஜசேகரன் அவளிரு கைகளையும் பற்றிக்கொண்டு அழுகை நிரம்பிய குரலில் "சரசா! நான் தெரியாத்தனத்தால் செய்துவிட்ட தப்பிதத்தை மன்னிப்பாய்" என்று கெஞ்சிக் கெஞ்சி வேண்டினன்.

அதற்குச் சரசாவும் பன்னெடுநாள் அனுபவித்த வருத்தங்களை யெல்லாம் கண்ணீர் வடிவத்தில் விழிகள் என்னும் மடைவழியாக வெளியே கொட்டி விம்மி விம்மி ஏங்கினள். நெடுநேரம் இருவரும் ஆநந்தக் கண்ணீரால் மௌன முற்றிருந்த பின்னர் இராஜசேகரன் "குழந்தை எங்கே?" என்ருன்.

சரசா:—குழந்தை பிறந்த மறுநாள் இறந்துவிட்டது.

* * *

சந்தோஷத்தில் சிறிது துக்கம். இப்பொழுது இராஜ சேகரனுடைய தாயார் சரோஜனியை மருமகளாக ஏற்றுக் கொண்டார். அப்பொழுது வேலைக்காரி இப்பொழுது அழகி—பணக்காரி.

வறுமை வந்து முன் வாயிலைத் தட்டும்போது, காதல் பின் வாயில்வழியாகக் குதித்தோடி விடுகிறது.

—ஆங்கிலப் பழமொழி

* * *

புத்தியுடையவன் பலகாலும் தன் தவறை யொப்புக்கொள்வான். முட்டாள் ஒருபோதும் ஒப்புக்கொள்ளான்.

—பழமொழி

* * *

அரேபியாவின் கீழ்முனை பூராவும் கடலின் அடிப்பாகத்தில் விஷக்காற்று பரவியிருக்கிறது. அழுகிய முட்டையிலிருந்து வெளிப்படும் துர்நாற்றம் போல் இவ்விஷக்காற்றின் கந்தமிருக்கிறது. இதில் எத்தகைய பிராணிகளும் உயிர் வாழாது.

கலியுக ஜாம்பவான்

160 வயதான ஜாரோ ஆகாவின் வரலாறு

துருக்கி தேசத்தில் 160 வருடம் தளர்ச்சியடையாது வாழ்ந்து வந்த ஜாரோ ஆகா வென்னும் உலகில் பெரிய (வயதில்) மனிதர் சமீபத்தில் இறந்து போனர். இவர் 11 மனைவிகளை மணம் செய்து, இறக்கும்போது 12-வது மனைவியுடன் சுகமாக வாழ்ந்து வந்தார். ஆகா 12 துருக்கி அதிபர்கள் வருவதும் போவதுமான பெரும் சரித்திரப் பகுதியை நேரில் கண்டவராவர். அவரைப்பற்றி திரு. வி. ஆர். பட் என்பவர் எழுதியிருப்பதின் தமிழுருவமாவது:—

ஜாரோ ஆகா கண்ணால் கண்ட பெரிய சம்பவம் 12 துருக்கி அரசர்கள் சிங்காதன மிழந்ததாகும். ஜாரோவுக்குத் தற்போதிய துருக்கி சர்வாதிகாரியான முஸ்தபா கமால் பாக்ஷாவிடத்தில் அளவில்லாத மதிப்புண்டு. அவர் பாக்ஷாவின் சீர்திருத்தங்களில் பெண்கள் சுதந்திரத்தைத் தவிர, மற்ற எல்லாவற்றையும் போற்றினர். உண்மையில் 11 மனைவிகளை மணந்துவிட்டு 12-வது மனைவியோடு வாழ்கின்ற ஒரு மனிதன் பெண்கட்கு ஆதிக்க மிருக்க வேண்டுமென்ருல் எவ்வாறுதான் ஒப்புக்கொள்ளுவான்? ஜாரோ பெண்களின் ஏற்ற விடம் வீடுதான் என்று சொல்வதில் எட்டுணையும் வழுவுவதில்லை. எவரேனும் துருக்கிப் பெண்மணிகள் குறுகிய பாவாடையுடனும் கிராப் செய்த கூந்தலுடனும் அவர் முன் வந்துவிட்டால் அவரது அங்கங்களெல்லாம் குன்றிப் போய் விடும்.

மனிதர்கள் நீண்ட நாள் வாழ்ந்திருந்தால் இரண்டாவது ஒரு இளமைப் பருவ மேற்படுவதுண்டு. ஆனல் 1930-ல் உலகில் மிகவும் வயதான மனிதனென்று ஜாரோவைக் குறிப்பிட்டபோது அவருக்கு மூன்ருவது குழந்தைப் பருவம் வந்திருக்கவேண்டும். அப்போது அவருடைய வயது 156. என்ருலும் அசையாத உடம்பும் தளராத ஊக்கமும் பெரிய உலக அனுபவமும் பெற்றிருந்தார்.

எட்டாவது அதிசயம்

ஜாரோ உலகினரால் வியப்புடன் பார்க்கப்பட்டார் என்று தெரிந்ததும் கொஞ்சம் மமதைகொண்டு தம் வேலையையும் (உத்யோகம்) 12-வது மனைவியையும் மக்களையும் விட்டுவிட்டு அமெரிக்கா சென்று விட்டார். (இவரை மெதுசலே என்று துருக்கியர் அழைத்தனர்.)

அமெரிக்காவில் இம் மெதுசலே ஒரு பேராச்சரியப் பொருளாக மதிக்கப்பட்டார். எங்கும் அவருடைய பேச்சே நிரம்பியது. பத்திரிகைகளிலெல்லாம் பெரிய கொட்டை யெழுத்துக்களில் அவர் பெயர் விளம்பரம் செய்யப்பட்டது. உலகில் 8 வது அதிசயமென்று அவரைக் கொண்டாடினர்கள். அவர் ஓர் விளம்பர நிர்வாகஸ்தரையும் அந்தரங்கக்காரியதரிசி யொருவரையும் அமர்த்திக் கொண்டார். மிகவும் நாகரிகமான ஆடையணிகளும் பரிவாரங்களும் உற்பத்தி செய்துகொண்டார். சுருக்கத்தில் ஒரு சினிமா நடிகரைப்போல் அபூர்வ மனிதராகத் தோன்றலானர்.

சில நாட்களுக்குள் அவரது புகழ் அவர் தலையில் லாகிரிபோன்று ஏறத் தொடங்கிவிட்டது. அமெரிக்க வாரப் பத்திரிகைகள் அவரைப்பற்றி வேடிக்கைகள் எழுத ஆரம்பித்தன. தன்னிலைமைக் கேற்ற மரியாதை அடையாது, பாவம்! அவர் ஒரு 'பபூன்' ஆகிவிட்டார். ஒரு நாள் அழகொழுகும் பற்பல இளம்பெண்கள் ஸ்நான உடையில் அவரைச்சுற்றி நின்று புகைப்பட மெடுத்தனர். பத்திரிகைகளிலும் அக்காட்சி பிரசுரம் செய்யப்பட்டது.

நாடு திரும்பினர்

நல்ல வேளையாக ஜாரோவுக்கு சீக்கிரத்தில் புத்தி வந்துவிட்டது. 1931-ல் தன் உலகச் சுற்றுப் பிரயாணத்திட்டத்தை நீக்கிவிட்டு இஸ்தம்பூலி லிருக்கும் 12-வது மனைவி மக்களிடம் திரும்பி

வந்தார். திடீரென்று வருவதற்குக் காரணம் கட்டுரெஸ்டு என்னும் உயிரோடிருக்கும் 90 வயது மனைவி விவாகரத்துச்செய்துக் கொள்ள நோட்டீஸ் விட்டதுதானென்று கூறப்படுகிறது. எப்படியும் அப்பெண், தன் கணவனை அமெரிக்கக் கட்டழகிகள் பலர் பாதி நிர்வாண உடையில் சுற்றிக்கொண்டிருப்பதைப் பத்திரிகைகளில் பார்த்துவிட்டார்.

ஜாரோ அமெரிக்கப் பிரயாணத்தின் பின்னர் ஒருவிதமான நாகரிக (அமெரிக்கன்) ஆடையோடு இஸ்தம்பூலில் வந்து இறங்கியதும் மனைவி மக்கள் வாஞ்சையோடு வரவேற்றார்கள்.

அப்பால் ஜாரோ ஒரு காபி ஹோட்டலில் வேலைக்கமர்ந்து, காபிவிட்டுக் கொடுத்தும் தமது சாகசங்களின் வரலாறுகளை எடுத்துச் சொல்லியும் மாதாமாதம் 8 பவுன் சம்பளம் பெற்று வந்தார். இந்த வாழ்வு முறையைப் பலர் வெறுத்து அவர் இருப்பதைவிட இறந்து போவதே சிறப்புடையதென்று கருதலானார்கள்.

அந்த வேளையில் யாரோ சிலர் ஜாரோ ஆகாவுக்கு வயது 160 ஆகவில்லை, 120தான் ஆயிற்று என்று கதை கட்டினார்கள். இந்த இடி, ஏற்கனவே, இருந்த மனவருத்தத்தைச் சேர்ந்து அவருடைய மரணத்தைத் துரிதப்படுத்திவிட்டது.

அவருடைய மரணத் தருவாயில் அவர் அதிகம் மரியாதை பெறவில்லை; ஆனாலும், அவருடைய நீண்ட வாழ்வு அவரைப் பிரசித்தம் செய்துவிட்டது. அவர் 160 வருடம் யாதொரு விதமான மருந்தின் உதவியோ குரங்குக்காளைச் சிகிச்சையோ யில்லாது வாழ்ந்து வந்தாரென்றால் ஆச்சரியமல்லவா? அவர் சாதாரணமாக நம்மைப் போலவே வாழ்ந்து வந்தார். நம்மைப் போலவே இன்பம் துய்த்துவந்தார். நம்மைப் போலவே மகிழ்ந்தும் சிரித்தும் தூங்கியும் உண்டும் வந்தார். ஆனால் அவர் செய்த யாவற்றிற்கும் ஓர் அளவிருந்தது. அவருடைய நீண்ட ஆயுளின் இரகசியம் இதுவாகவேதானிருக்க வேண்டும்.

கடைசியாக, ஜாரோ ஆகா—உலகில் பெரிய ஆயுளை யுடையவர்–160 வருடமாகக் காலனைக் கடிந்து துரத்திய கண்ணிய முடையவர்—12 அரசர்கள் அரியணை யமர்வதும் அப்பால் அழிந்து போவதுமான சரித்திரப் பெரும் செய்தியைக் கண்டவர்—எத்தனையோ "மனிதப் புழு"க்களின் பிறப்பையும் இறப்பையும் கண்டு தேர்ந்தவர்—மலையசைந்தாலும் தாமசையாத ஆயுளையுடையவர்—இறந்துபட்டார். சற்றேறக்குறைய (நீண்ட ஆயுளுடைய) சாதாரண மனிதர்களைப்போல் இருபங்கு வாழ்ந்துவிட்டார் என்பது வெளிப்படை யன்றோ? இதுகாலை உலகில் நூறுவருடம் கூடவும் ஜீவித்திருப்பவர்களைக் காண்பது மிகவும் அரிது. அந்த நிலைமையில் இரண்டாவது நூற்றாண்டின் பெரும் பகுதியையும் ஒருவர் பார்த்துவிட்டாரென்றால் அற்புத மென்பதில் என்ன தடை!

எவ்வளவு பழமை!

ஜாரோ ஆகாபிறந்தது............ஆம்! ரயில்வேக்கள் ஏற்படுதற்கு முன்பு—நீராவிக் கப்பல்கள் கட்டப்படுவதற்கு முன்பு—நிலக்கரியும் மின்சாரமும் மனிதருக்கு ஊழியம் புரிவதற்கு முன்பு—பெட்ரோலும் ஆகாயத் தந்தியும் மனிதர்கைக்குள் அகப்படுவதற்கு முன்பு! அதுபோது மனிதர் ஒரு குதிரை மீது ஏறி உட்கார்ந்து மணிக்கு 10 மைல் விகிதம் போய்க் கொண்டிருந்திருக்கலாம்; பாய்மரக் கப்பல்கள் காற்றினுதவியால் ஆம்— சுமார் 10 மைல் போய்க்கொண்டிருந்திருக்கலாம். ஜனங்கட்கு எதிர்காலத்தில் என்னென்ன புதுமைகள் ஏற்படக்கூடுமென்பது தெரியாமலே இருந்திருக்கலாம்.

அவர் பிறப்பு

அத்தகைய காலத்தில் ஜாரோ ஆகா 1774 ல் கர்டிஸ்டான் பகுதியில் பிரிட்டிஸ் என்ற கிராமத்தில் பிறந்தார். அதுபோது பிரிட்டன் அமெரிக்காவை இழந்துவிடவில்லை. நெப்போலியன் போனப்பார்ட் ஒரு சிறு குழந்தையா யிருந்து கொண்டிருந்தார். ஜாரோ பிறந்தவுடன் கிராமஜோசியர்கள், ஆகா எதிர்காலத்தில் பெரும் புகழ்பெற்று வாழ்வார் என்று கூறினர்களோ என்னவோ?

சாதாரணமாக ஒரு மனிதனின் ஜீவிதத்தைப்பற்றி எழுத வேண்டுமானால் மிகவும் பிரயாசை யெடுத்துக்கொள்ள வேண்டும். அப்படியிருக்க 160 வருடம் வாழ்ந்த ஒரு அற்புத மனிதனின் சரித்திரத்தை எழுதவேண்டுமென்றால் மிக மிக சிரமப்பட வேண்டுமன்றோ? ஆனால் ஆகா விஷயத்தில் அப்படியில்லை. அவர் அமெரிக்கப் பிரயாணம் செய்த காலையில் வாய் வளர்ந்துவிட்ட ஏதுவால் தன் சரிதையை அவரே பலவிடங்களில் சொல்லி விட்டார். ஆகவே அதிலிருந்து சிலவற்றை நாம் திரட்டிக் கொள்வது இலேசாக இருக்கும்.

பிரஞ்சுக்காரர்களோடு யுத்தம்

அவர் அடிக்கடிக் கூறி வந்த தற்புகழ்ச்சிகளில் ஒன்று பிரஞ்சுகாரர்களோடு போர் செய்தார் என்பதாகும். நெப்போலியன் போனப்பார்ட் பெரும் சேனையோடு எகிப்தின் மீது படையெடுத்து வந்தபோது ஆகா வாலிபராயிருந்தாராம்; ராணுவத்தில் அவரும் சேர்ந்து பிரஞ்சுக்காரர்களோடு போர் செய்தாராம். அப்பால் துருக்கியை விட்டு கிரீஸ் நீங்கிக்கொண்டபோது அவருக்கு வயது ஐம்பதாம்—பின் மூன்றாவது நெப்போலியன் செடானை இழந்தபோது ஆகாவுக்கு மூன்று பற்கள் விழுந்திருந்தனவாம். ஐரோப்பா அடைந்த மாற்றங்களை எல்லாம் கான்ஸ்டான்டு நோபிலிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தாராம்.

சுமார் 100 வருடம் வரையிலும் ஆகா கான்ஸ்டாண்டு நோபிலிலேயே இருந்திருக்கிறார். அதுபோது அவர் பார்த்த வேலைகள் பல. கல்யாண விஷயமாகப் பல பல சோதனைகள் செய்தார். அந்தக் காலங்களிலெல்லாம் எத்தனை மனைவியரை மணப்பார் என்பது அவருக்குத் தெரியாது. அவர் கடைசியில் 12 மனைவியரை மணந்து 160 வருடமிருந்தாலும் மனைவியர் கொடுமைக்கு ஆளாகாமலிருக்கவில்லை. அவர் எல்லா மனைவியரையும் சமமாகவும் அன்புடனுமே நடாத்தினராம். ஆனால் சமையலறையை விட்டு வெளிவர விடமாட்டார். ஒருபோதாவது ஆகா, மனைவியரை முகமூடியை எடுக்க விடவோ அந்தப் புரத்தை விட்டு வெளி வரவோ விடவில்லை.

அவர் தம் வாணாளில் உழைத்ததின் பயனாகக் கொஞ்சம் பணத்தைத் தேடி வைத்திருந்தார். அந்தப் பணத்தைத்தான் அமெரிக்க யாத்திரையில் செலவிட்டார். ஒருமுறை இத்தாலிக்குச் சென்று போப்பைக்கண்டு தன் கதைகளைக் கூறினாராம்.

உலகப் போக்கு

திருவாங்கூரில்


ஒரு சிறுவனுக்கு நாட் போகப்போக வால் நீண்டு வருவதாகத் தெரிகிறது. இவன் மாவேலிக்கரை யென்ற இடத்தில் வசிக்கிருன். இப்போது வயது மூன்று ஆயிற்ரும். பிறக்கும்போது சிறிதாகவிருந்த வால் இப்போது சில அங்குலங்கள் வளர்ந்து விட்டதாம். ஏராளமான ஜனங்கள் 'டார்வின் கொள்கை'யை நினைப்பூட்டும் இவனைப் போய்ப் பார்த்து வருகிருர்களாம். ஒரு பத்திரிகை "இப்பையனுக்கு வாலிருப்பதைத் தவிர இதர விஷயங்களிலெல்லாம் சாதாரண மனிதர்களைப்போலவே இருந்து வருகிருன்" என்கின்றது. இதன் கருத்து மாத்திலேருமலும் கூரைக்குக் கூரை குதித்துத் தாவாமலுமிருக்கின்ருன் என்பது போலும்.

மண்ணையும் கல்லையும்

சாப்பிடுகின்ருராம் ஒரு துருக்கியர். அவர் பெயர் இப்ராகாம் ஹுசேன் அபந்தி. ஒரு நாள் அவர் கல்லைமென்று தின்று கொண்டிருந்தபோது அவருடைய மனைவி பார்த்து அவருக்குப் பைத்தியம் பிடித்து விட்டதாகப் போலீசாரிடம் கூறினுள். போலீசார் பைத்தியக்கார டாக்டர்களிடம் ஒப்படைத்தார்கள். அவர்கள் புத்திசாலித்தனமாக, கல் மண்ணில்லாத அறையொன்றிலடைத்தனர். எனவே வந்துவிட்டது ஹுசேனுக்கு வயிற்றுவலி. வயிற்றுவலியென்ருல் பொறுக்க முடியாதது. டாக்டர்களாலும் குணப்படுத்த முடியவில்லை. உடனே அவர்கள் ஒரு இரும்புக்கம்பியைக் கொடுக்க ஹுசேன் சுவரை இடித்துச்சாப்பிட்டு ஏப்பமிட்டார். வயிற்றுவலி தணிந்துவிட்டது. கடைசியில் டாக்டர்கள் ஹுசேனுக்குப் பைத்தியமில்லை; அவன் மனைவிக்குத்தான் கிறுக்கு என்று நினைத்தார்கள். எனவே விட்டுவிட்டார்கள் ஹுசேனை. ஒரு கால் அடைத்து வைத்திருந்தாலும் கூட அவன் தான்! சுவரைத் தின்றழித்துவிட்டு வெளிவந்து விடுவானல்லவா? துருக்கியர் இவனைக்கண்டு வியக்கின்றனராம். எனக்குப் பொருமை வருகிறது. அவனைப்போல மண்ணைத்தின்று வாழலாமானல் இந்தியர் தரித்திரம் எவ்வளவு சுளுவாகத் தீர்ந்துவிடும்!....

மகாத்மாவுக்கு நோட்டீஸ்!

ஆண்டவன் பல அற்புதங்களை இயற்றுவான் என்று சொல்லப்படுவது ஏமாற்று என்று நிரீஸ்வர வாதிகள் கூறிவிடலாம்: ஆனுல் கண்ணுரக் கடவுள் செய்யும் பல ஆச்சரியச் செயல்களைக் காண்கிருேம். சில நாட்களுக்கு முன்பு பீஹாரில் பூமியைத் துளைத்துக்கொண்டு வந்து ஒரு முஸ்லிம் பக்தருக்கு அருள் சுரந்தார். கோயமுத்தூரில் சில மாதங்களுக்கு முன்பு ஒருவரிடம் தன் புதல்வனைத் தேரடியில் பலிகொடுக்கும்படிக் கேட்டுக்கொண்டார். சென்ற சிலவாரங்களாக வட திருவாங்கூரில் (கோட்டையத்தில்) ஒரு கல் நந்தியின் உடம்பில் சிலந்தியாகத் தோன்றி சீயாக வடிந்து அற்புதம் செய்து வருகிருர். அதுபோல சுமார் ஒருவாரத்திற்கு முன்பு காசியில் சனுதனிகளிடம் வந்து காந்திஜியைப் பற்றிச்சில இரகசியங்களைக் கூறிப்போனுராம்.......காசிச் சனுதனிகள் உடன் ஒரு நோட்டீஸ் எழுதி மகாத்மா கான்பூரிலிருக்கும்போது ரஜிஸ்தர் செய்து அனுப்பினர். அந் நோட்டீசில், தாங்கள் கடவுள் சொன்னபடிக்கு நோட்டீஸ் விடுவதாகவும், காந்திஜி 25–7–34 லிருந்து 5–8–34 வரைக் காசியில் அடியெடுத்து வைக்கக் கூடாதென்றும், வைத்தால் சமாதானம் குலைந்து போவதால் அவருக்கு இன்னல்கள் வந்து விடக் கூடுமென்றும், தாங்களும் சைது செய்ய ஏற்பாடு செய்துவிடுவார்களென்றும் எழுதப்பட்டிருந்தது. காந்திஜீ அவற்றைப் பொருட்படுத்தவில்லை. காரணம் சனுதனிகட்குப் பைத்தியமென்று நினைத்தார் போலும். எப்படியும் காந்திஜீ காசிக்குப் போனுர். சனுதனிகளிடம் இரகசியம் பேசிய கடவுள் இதுகாறும் அந்தப் பகுதியிலேயே வந்ததாகச் செய்தி கிடைக்கவில்லை.



நாகர்கோவிலில் கட்டப்பட்டிருக்கும் புதிய இரக்ஷண்ய சேனை ஆஸ்பத்திரியை ஜுலை 25-ந் தேதி சர். சி. பி. ராமசாமி அய்யரவர்கள் திறந்து வைத்தபோது எடுத்த படம். சர். சி. பி. ஏழைகளைப் பார்வையிடுகிருர்.

—P. P. B.

மீசைச் சேய்தியோன்று

புடாபஸ்டிலிருந்து வெளிவந்திருக்கிறது. அச்செய்தி வீரத்திற்கழகு

மீசை யென்றும், போலீசார் வீரர்களானதால் அவர்கட்கு மீசையிருக்க வேண்டுவது அவசியமென்றும் மறைமுகமாகக் கூறுவதோடு மீசைகளில் வீரம் மிகுந்த மீசை கெய்சர் மீசையே யென்றும் ஞாபக மூட்டுகிறது. அச்செய்தியின் சாரமாவது:—ரோமாபுரியில் ஹங்கேரியப் போலீசார் அனைவரும் கேய்சர் மீசையே வளர்க்க வேண்டும். அப்படி யில்லையானால் அவர்கள் வேலையை விட்டுத் தூத்தப்பட்டு விடுவார்கள்........இவ்வுத்தரவைக் கேட்டதும் நாவிதர்கட்கு மிகுந்த சந்தோஷம் வந்து விட்டதாக ஒரு பத்திரிகை கூறுகிறது. சந்தோஷத்திற்கென்ன காரணமென்று தெரியவில்லை. ஒருகால் முக க்ஷவரத்தில் ஒரு கஷ்டமான பகுதி லாபமென்று நினைத்தார்களோ என்னவோ? யார் எப்படி நினைத்தாலும் கெய்சருக்கு ஒரு பெரிய அதிர்ஷ்டம் தான். ஜனங்கள் அவர் ராஜ்யத்தை மறுத்துவிட்டாலும் அவர் மீசையை மறக்கவில்லை அல்லவா? அதோடு அவர் மீசை வீரத்திற்கு அடையாளமென்றும் கொள்கின்றார்களல்லவா!

ஒருவழியில் சண்டை


ஓய்ந்துவிடலாம் பெர்ஷியாவில். அங்கிருந்து வரும் செய்தி யொன்றினால் சுமார் 2 வருடங்கட்கு முன்பு பெர்ஷியன் ஷாவுக்கும் பிரிட்டிஷாருக்கும் ஏற்பட்ட எண்ணெய்ச் சண்டையைப் போல புதிதாக வோர் சண்டையேற்பட இடமுண்டென்று தெரிகிறது. அதாவது பெரிங் கடலோரத்தில் சில எண்ணெய்க் கிணறுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவைகளை ஷா தமக்கென்கின்றார்; சில பிரிட்டிஷார்கள் தங்கட்குரிமை யுண்டென்கின்றார்கள். இந்தச் சண்டை வளர்ந்துவிடக் கூடுமோ வென்றிருந்த வேளையில் ஹாலண்டிலிருந்து ஒரு மங்கலச்செய்தி முழங்கி வருகிறது. அங்குள்ள விஞ்ஞான நிபுணர் ஒருவர் சூரிய வெளிச்சத்திலிருந்து சக்தியை இழுத்து அதனால் மோட்டார்களை ஓட்டுகிறாராம். இப்படிப்பட்ட முறை பிரசாரமாகி விட்டதானால் பெட்ரோலைத் தீண்டுவாரே இருக்கமாட்டார்கள். அதிலும் விசேஷமாக சூரிய வெளிச்ச மதிகமுள்ள பெர்ஷியா போன்ற தேசங்களில் எண்ணெய் கொஞ்சமுமே தேவைப்படாது. ஆதலால் பிரிட்டிஷ்—பெர்ஷியா சண்டை இருந்தவிடம் தெரியாமலே ஓய்ந்துவிடக்கூடும். அத்தகைய நிலைமை வருமா? டச்சு நிபுணருக்கே வெளிச்சம்!

பணம் பாதாளம்

மட்டும் போகும் என்று கூறினார்கள் வானத்தில் பறக்க முடியாத நம் தாத்தாக்கள். இப்போது வானத்தில் பறக்க முடியுமல்லவா? பழமொழி மாறவேண்டியிருக்கிறது. தென்னமெரிக்காவில் பன்னிரண்டாயிரம் அடி உயரத்தில், ஆண்டீஸ் மலை உச்சியில், சூரியக் கடவுள் கோவிலில் தங்கமிருக்கிறது! அதனை எத்தனையோ வருடங்கட்கு முன்பு இன்காஸ் என்ற ஜாதியார்கள் வெட்டியெடுத்துக் கொண்டிருந்தார்களாம். பிறகு அந்த வேலை நடைபெறவில்லை. ஆனால் இப்போது அம்மலைக்குச் சொந்தக்காரர்களான பெருவியன் சர்க்காருக்கு மீண்டும் தங்கமெடுக்க வேண்டுமென்ற ஆசை பிறந்திருக்கிறது. ஆதலால் அவர்கள் "சந்திரனில் தங்கமில்லை என்று தெரிகிறது. ஏனெனில் ஆங்கிலேயர் அங்கு குடியேறவில்லை" என்பனபோன்ற வாக்கியங்களால் நெப்போலியன் போன்ற பெரியோர்களால் சிறப்பிக்கப்பட்ட இங்கிலீஷ்காரர்களைத் துணைக்குப் பிடித்துக் கொண்டார்கள். சமீபத்தில் பல பெருவியன் நிபுணர்களும் இங்கிலீஷ் எஞ்ஜினீயர்களும் ஆண்டீஸ் உச்சிக்குப் போவர்களாம். அவர்கள் வேலை தொடங்கினால் இயந்திரங்கள் வேண்டுமல்லவா 12 ஆயிரம் அடிக்குமேலே. அவற்றை ஆகாய விமானம் மூலம்கொண்டு செல்வார்களாம். ஆ! எவ்வளவு ஆச்சரியம்! 12 ஆயிரம் அடி உயரம் மலைக்குமேலே விமானம் பறக்கவேண்டும்; அவ்விமானம் தங்கமெடுக்கும், மலையுடைக்கும், உணவூட்டும் இயந்திரங்களைக் கொண்டு செல்லவேண்டும்! அன்றி மலையில் இறங்கவும் அங்கிருந்து பறந்து வரவும் வேண்டும். பணத்தின் பெருமையல்லவா ஆகாயம்வரைப் பாய்கிறது.

ருஷ்யாவில்

ஒரு பதினாறு வயது 'பையன்' ஒருவன்—லெவ்சென்கோ என்பது பெயர்—உபா என்ற ஊரில் பிறந்தவன்—ஒரு மாதிரி விமானத்தைக் கட்டி அதில் 28 நிமிஷம் 9 செகண்டு நேரத்தில் 5450 கஜ தூரத்தைப் பறந்து கடந்துவிட்டானாம். இதுபோல் இதுவரையிலும் உலகில் எவரும் ஒரு மாதிரி விமானத்தில் பறந்து சென்றதில்லையாம். விமானமில்லாமலே ருஷியர் வானத்தில் பறந்துதானே உலகிற்குத் தோன்றுகின்றனர். அப்படியிருக்க சிறிய விமானத்தில் பறந்தது அவ்வளவு பெரிதா?



நாகர்கோவிலில் கட்டப்பட்டிருக்கும் புதிய ரக்ஷண்ய சேனை ஆஸ்பத்திரி. இதனை சர். சி. பி. ராமசாமி அய்யரவர்கள் திறந்து வைத்தார். —P.P.B.

ஜெர்மன் சர்வாதிகாரி

ஹெர் ஹிட்லரின் ஜாதகக் குறிப்பைப் பற்றி எட்வர்டு விண்டோ வென்பவர் சில விஷயங்களை இங்கிலாந்திலுள்ள பீப்பில் பத்திரிகையில் எழுதியிருக்கிறார். அதில் ஹெர் ஹிட்லருக்கு இன்னும் ஒரு வருடத்திற்குள் எத்தனையோ கண்டங்கள் ஏற்படலாமென்றும், அவற்றிலிருந் தெல்லாம் அவர் தப்பிவிட்டாலும் 1935-வது வருடத்தில் வரப்போகும் ஒரு பெரிய கண்டத்திலிருந்து தப்பப் போவதில்லையென்றும் நிச்சயமாகவும் உயிரிழந்துவிடுவாரென்றும் சொல்லியிருக்கிறார். இது ஜாதக கணிதந்தானோ அல்லது தன் வயிற்றெரிச்சலின் அளவுதானோ சொல்லமுடியாது. ஆனால் எட்வர்டு விண்டோவின் துணிச்சலைப் பார்த்தால் எனக்குப் பயமாயிருக்கிறது. ஹிட்லரென்றால் யுத்த தேவதையின் மூர்த்திகாரமென்று நினைக்கின்றது உலகம்; அவருடைய கண்டத்தைப்பற்றிக் கூறுகிறார் விண்டோ! எப்பொழுதாவது தப்பித்தவறி அவர் ஜர்மனிக்குச் சென்றுவிட்டாரானால் ஹிட்லரின் பரிசு நிச்சயமாகவும் கிடைத்து விடக்கூடும்.

வால் நக்ஷத்திரம்

தோன்றினால், அது தென்படும் நாட்டிற்குப் பெரிய நஷ்டமுண்டாகும் என்று நம் தாத்தாக்கள் கூறி வருகிறார்கள். ஆனால் நவீன வான சாஸ்திரிகள் தூமகேது (வால் வெள்ளி) ஒரு கோளமென்றும் அது சூரியனைச் சுற்றி வருகையில் பல வருடங்கட்கொரு முறை பூமியில் வசிப்பவர் கண்ணுக்குத் தென்படலாமென்றும் கூறுகின்றார்கள். அக்கூற்றை, நமது நவீன காலத் தாத்தாக்கள் நம்புவார்களோ என்னவோ? நேர்முகமாக ஒருவனைக்கண்டு அவனோடு பல வருடங்கள் பழகிப் பார்த்த பின்னரும், 'நீ என்ன ஜாதி' என்று கேட்டுத் தெரிந்துகொள்ள முயல்கின்றார்களல்லவா நம் தாத்தாக்கள்? அப்படிப்பட்டவர்கள் வான சாஸ்திரிகள் கூற்றை எப்படி நம்புவார்கள்? அது எப்படியாவது போகட்டும். டெல்லியில் சில தினங்கட்கு முன்பு ஒரு வால் நக்ஷத்திரம் தென்பட்டதாம். அது தோன்றிச் சில மணி நேரங்கட்குள் மறைந்துவிட்டதாம். அப்பால் கிடைத்த ஒரு செய்தியால் ஜூலை 27-ந் தேதி மாலை 6–50-க்கு தரங்கம்பாடியில் ஒரு வால் நக்ஷத்திரம் மெதுவாகத் தலை நீட்டியதாகத் தெரிகிறது. இந்த நட்சத்திரம் டெல்லியில் வந்ததுதானா அல்லவா வென்பது தெரியவில்லை. பெரும்பாலும் இது வேறு ஜாதியைச் சேர்ந்ததாக இருக்க வேண்டும். ஏனெனில் இதன் நிறம் வேறு. இந்த நட்சத்திரம் ஒரு பெரிய வாணத்தைப் போல நீலநிறத்துடன் தோன்றி மெதுவாகத் தென் கிழக்கில் மறைந்ததாம். இதர வால் நட்சத்திரங்களை விட மெதுவாகப் பிரயாணம் செய்ததால் பலர் இதனைப் பார்த்துக்கொள்ள சந்தர்ப்பம் வாய்த்ததாம். காரைக்கால் வாசிகளும் இந்த வால் வெள்ளியைப் பாத்ததாகத் தெரிகிறது. இந்த வெள்ளி ஒருகால் கெடுதியைக் காண்பிப்பதற்காக வந்திருக்குமோ வென்று நினைத்து நாட்டில் இப்போது புதிதாக என்னென்ன நிகழ்கின்றது கெடுதி தர அல்லது கெடுதி யடைய என்று பார்த்தால் (1) காந்திஜீமீது சனாதனிகள் காட்டும் எரிச்சல் (2) வெள்ளை யறிக்கை ஆகிய இரண்டுமே புலப்படும். ஆகவே இவ்விரண்டும் ஒழிய வேண்டுமென்று யூகிக்கலாம்.

—

டாக்டர் கிச்லு உண்ணாவிரதம்

ஜாலியன்வாலாபாக்கில் ஒரு வாரமாக உண்ணாவிரத மிருந்து வரும் டாக்டர் கிச்லு பின்வரும் அறிக்கையை வெளியிட்டுள்ளார்:—

இப்பொழுது நான் அனுஷ்டித்து வரும் 1 வார பட்டினி பூர்த்தியான பிறகு மேலும் கடுமையான நடவடிக்கையை மேற்கொள்வது பற்றிச் சிந்தனை செய்து வருகின்றேன். ஆனால் எவ்விதத் திட்டமான முடிவுக்கும் வரும் முன்பு நான் எனது நண்பர்களுக்கும் சகாக்களுக்கும் எனது அந்தரங்கத்தைச் சொல்லியே தீருவேன். காங்கிரசில் சேர்ந்துள்ள வகுப்பு வாதத்தையும், சுயநலக்காரரான துஷ்டர்களின் விஷமத்தையும் எதிர்த்துப் போராடப் பரிசுத்தத்தையும் ஆன்மபலத்தையும் பெறவே நான் 1 வாரம் உண்ணாவிரதம் அனுஷ்டித்து வருகின்றேன்."

இவருக்கெதிராக வேறொரு காங்கிரஸ் வாதி (எதிர் கக்ஷியைச் சேர்ந்தவர்) ஜாலியன்வாலாபாக்கிலேயே உண்ணாவிரதமிருந்து வருவதாகக் கூறப்படுகிறது.

அபேதவாதிகளுக்குக் காங்கிரஸ்

—

மகாத்மா காந்தி ஜூலை 27-ந் தேதி காசியிலிருந்தபோது காங்கிரஸ் அபேதவாதிகள் துண்டுப் பிரசுரம் மூலமும் கூட்டங்கள் மூலமும், அபேதவாதிகள் சம்பந்தமாகக் காரியக் கமிட்டி நிர்ணயித்துள்ள வேலை முறையைக் குறித்துத் தங்கட்கிருக்கும் அதிருப்தியைத் தெரிவித்துக் கொண்டார்கள் என்றும் அதற்குக் காந்திஜீ அடியில்வரும் பதிலை விடுத்தாரென்றும் செய்தி வருகிறது.

காந்திஜீ பதில்

அபேதவாதிகள் காங்கிரஸ் காரியக் கமிட்டியையும் அதன் வேலைத் திட்டத்தையும் அனாவசியமாய் அடிக்கடி தாக்கி வருவதை நான் கண்டிக்கிறேன்.

நீங்கள், ஒன்று காங்கிரசில் அனாவசியமாகப் பிளவு உண்டாக்க முயற்சிக்காமலிருக்க வேண்டும்; அல்லது காங்கிரஸ்தாபனம் முழுமையும் உங்கள் பொறுப்பில் வைத்துக்கொள்ள முன்வர வேண்டும். அங்ஙனம் செய்ய விரும்புவதா யிருந்தால் இந்த ஸ்தாபனத்தை உங்களிடம் கொடுத்துவிட்டு விலகிக்கொள்ள நானும் காரியக் கமிட்டியைச் சேர்ந்த மற்ற அங்கத்தினர்களும் தயாரா யிருக்கிறோம்.

—

பாலஸ்தீனத்தில் முக்கியமாக கிருஸ்தவர்கள், யூதர்கள், முகம்மதியர்கள் ஆகியோர் வசிக்கின்றனர். இவர்களில் முகம்மதியரே பெரும்பான்மையோர்.

• • •

பாலஸ்தினத்தில் சற்றேறக்குறைய 10 லட்சம் பேர் வசிக்கிறார்கள். 1917ல் இந்நகரை சர்வதேசசங்கத்தார் பிரிட்டனின் ஆதிக்கத்தில் விட்டனர்.

• • •

அமெரிக்கப் பத்திரிகைக் கணிதச் செய்தி யொன்றினால், உலகில் (பத்திரிகைச்) செய்திகட்கு முதலிடம் பெறுபவர் தலைவர் ரூஸ்வெல்ட் என்றும் அடுத்தபடி நிற்பவர் காந்திஜீ யென்றும் தெரிகிறது.

எனது தபாற் பெட்டி

(பகீரதன்)

மிஸ்டர் மால்கோம் மக்கரிட்ஜ்,
c/o, 'ஈவனிங் ஸ்டாண்டர்டு,'
லண்டன்.

நண்பரே,

மகாத்மா காந்தி கல்கத்தாவிலிருந்து கான்பூருக்கு வந்து கொண்டிருந்த போது, வழியில் மிர்ஜாபூரில், பொது ஜனங்கள் கூடி ஒரு பிரசங்க மேடை மீது மேஜையொன்றைப் போட்டு அதன்மேல் நின்றுகொண்டு ஒரு சிறிய பிரசங்கம் செய்யும்படி காந்திஜியிடம் கேட்டுக் கொண்டார்கள். காந்திஜி என்ன நினைத்தோ "மேஜை உடைந்தல்லவா இருக்கிறது?" என்றார். ஜனங்கள் "இல்லை; நல்ல மேஜைதான்" என்று அழுத்திக் கூறினர்கள். காந்திஜி "இல்லை; அது உடைந்ததுதான்; நீங்கள் சந்தேகிக்கவேண்டாம்" என்றார். அப்பால் பார்த்தபோது உண்மையிலேயே மேசை சுக்குநூறாக உடைந்து விட்டது.

இந்த சம்பவத்தைப்பற்றி நீங்கள் "ஈவனிங் ஸ்டாண்டர்டு" பத்திரிகையில் எழுதும்போது, காந்திஜீ அரசியலியக்கத்தில் சேர்ந்து கெட்டுப்போய் விட்டாரென்றும், வரவர அவருடைய செல்வாக்குக் குறைந்துகொண்டு வருகின்றதென்றும், உண்மையில் அவர் மகாத்மாவாக விரும்பினல் ஜனங்களை விட்டு நீங்கித் தனியாக வாழவேண்டுமென்றும் வரைந்திருக்கிறீர்கள்.

காந்திஜீ அரசியலியக்கத்தில் சேர்ந்ததால் உங்கட்கு வயிற்றெரிச்சல் உண்டென்பதை நாங்கள் அறிவோம்; ஆதல் பற்றித்தான் காந்திஜீயைப் பிரித்துவிட மனோராஜ்யம் செய்கின்றீர். மகாத்மாக்கள் காட்டினுறைந்து, தம் காரியத்தை மட்டினும் பார்த்துக்கொண்டு இறந்து போவதைவிட, மக்களிடை விரவி உலக துன்பங்களை நீக்கித் தொண்டு புரிய நினைப்பதுதான் மேலானது. அரசியலியக்கத்தில் சேர்ந்து காந்திஜீ புகழ் குன்றிவிட்டார் என்று மனப்பால் குடிக்கவேண்டாம். நீர் கூறுவது போன்ற ஓர் அற்புத மனிதர்—ஆச்சரியமியற்றத் தகுந்த ஒரு சித்தர்—ஒரு இயக்கத்தில் சேர்ந்துழைத்தால் செல்வாக்குக் குன்றக்கூடுமா? அவர் நினைத்தால் ஒரு நிமிஷத்தில் உலகையே மயக்கிவிடக்கூடுமல்லவா? நீர் காந்தியை அரசியலியக்கத்தி லிருந்து நீக்கி விடுவதால் லாபமடைந்து விடலாமென்று நினைத்திருப்பீராகில் நிச்சயம் அக்கருத்தை விட்டுவிடும்.

உண்மையாராயும்,
பகீரதன்.

மிஸ். மேயோ,
அமெரிக்கா.

அக்காள்,

உங்களைப்பற்றி நான் நினைத்துப் பல வருடங்களாயின. இப்போது மீண்டும் நினைக்கும்படியான கெட்டகாலம் வந்துவிட்டதற்காக வருந்துகிறேன்.

சமீபத்தில் நீங்கள் மீண்டும் ஒரு முறை இந்தியாவில் அடியெடுத்து வைக்கப் போகிறதாகச் சொல்லப்படுகிறது. என்ன விபரீத காலமோ தாங்கள் இங்குவர! முன்வந்த அலங்கோலத்தால் எழுந்த புத்தகங்கள் பல இன்னும் விற்பனையாகியே முடியவில்லை. அதற்குள் மீண்டும் வரப்போகிறீர்களென்றால் என் மனமெல்லாம் (தம்பியென்ற முறையில்) எரிகிறது. வால் வெள்ளி ஆங்காங்கே எட்டிப் பார்க்கிறதென்பது தங்கள் வருகையை எச்சரிக்கை செய்யத்தானோ என்னவோ?

அக்காள்! இப்போது காலம் மாறி விட்டது. முந்தி நீங்கள் வந்தபோது இருந்த இந்தியர்களல்ல இப்போது. அதிலும், முன் தங்களைத் தெரியாது; வந்துவிட்டுப் போய்விட்டீர்கள். இப்போது ஆளைத் தெரிந்துவிட்டதால் சும்மா விட்டுவிட மாட்டார்கள். ஆகவே வலது காலெடுத்துவைத்து இரவில் வந்து விட்டு இரவிலேயே போய்விடுக.

நீங்கள் திருவடியெடுத்து வைத்தால் இந்தியர்கள் எப்படி வரவேற்பார்கள் என்பதைக் காண்பிக்க 'அட்வான்ஸ்' பத்திரிகை ஒரு படம் வெளியிட்டிருக்கிறது. அதில், நீங்கள் இந்தியாவுக்கு வருவது போலவும், தங்கட்கு விளக்குமாற்றோடு பலர் காத்து நிற்பது போலவும் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. விளக்குமாறு ஏன் உங்கள் வரவேற்புக்கு உபயோகிக்கப்படுகிறதென்பது திட்டமாகத் தெரியாமற் போனாலும், (காந்திஜீ கூறியவாறு) நீங்கள் வந்து குப்பைகளைக் கூட்டுவதற்குதவும்படியாக வைத்திருக்கிறார்களென்று நினைக்கிறேன்.

நான் தம்பி என்ற முறையில் இங்குள்ள இரகசியங்களைக் கூறினேன். அதேபோல மற்றொரு இரகசியம்: உங்களைப் பலருக்கு நேரில் தெரியாது. எனவே ஆர்ப்பாட்டம் செய்யாது கல், மண், வானம், தண்ணீர் என்பது போன்ற ஏதாவது மாறு பெயரைச் சொல்லிக்கொண்டு வந்து போய்விடுங்கள். வேணும் ஆண்டவன் துணை.

அன்புள்ள தம்பி,
பகீரதன்.

மாஜிஸ்திரேட், திருகோணமலை,
இலங்கை.

ஐயா,

யாரோ மூன்று பேர்கள் அங்குள்ள துறைமுகத்தில் திருடி விட்டார்கள் என்ற குற்றம் சாட்டப்பட்டுத் தங்கள் முன் விசாரணைக்கு வந்தபோது நீங்கள் அவர்களைத் தண்டித்ததோடு நில்லாமல், பிரமாதமாகப் பிரிட்டிஷ் ஆட்சியால் எவ்வளவு நன்மைகள் ஏற்படுகின்றனவென்று ஒரு பிரசங்கம் செய்தீர்களாம். அதை ஒரு பத்திரிகை எளனம் செய்கிறது. அது எப்படியாவது போகட்டும்; எனக்குக் கவலையில்லை. நீங்கள் உத்யோகத்தி லிருக்கின்ற முறையில் அந்த ஸ்தாபனத்தைப் புகழ்வதில் பிரயோசனமில்லை. புகழ வேண்டுபவர்கள் உத்யோகப் பற்றற்றவர்கள்தாம் என்பதை மட்டினும் கூறிக் கொள்கிறேன்.

அன்புள்ள,
பகீரதன்.

இந்தியச் சட்டசபைக்குக் காங்கிரஸ் அபேட்சகர்கள்

தேர்தல் கமிட்டியின் முடிவு

காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டைச்சேர்ந்த அபேட்சகர் தேர்தல் கமிட்டியினர், அடுத்துவரும் இந்தியச் சட்டசபைத் தேர்தலில், பல்வேறு தொகுதிகளின் சார்பாகக் காங்கிரஸ் அபேட்சகர்களாக நிற்கக் கீழ்க்கண்டவர்களைக் காசியில் நடந்த கூட்டத்தில் தெரிந்தெடுத் திருக்கின்றனர்:—

தொகுதி அபேட்சகர் பெயர்

சென்னை நகர்:—திரு. எஸ். சத்தியமூர்த்தி.

செங்கல்பட்டு, தென்னாற்காடு:—திரு. வி. என். முத்துரங்க முதலியார்.

திருச்சி, தஞ்சை:—டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன்.

கோயம்புத்தூர், சேலம், வட ஆற்காடு:—திரு. டி. எஸ். அவினாசி லிங்கம் செட்டியார்.

சென்னை இந்திய வர்த்தகர் சபை:—திரு. சாமி வெங்கடாசலம் செட்டியார்.

கஞ்சம், விசாகப்பட்டினம்:— திரு. வி. வி. கிரி.

மேற்கு, கிழக்கு கோதாவரி, கிருஷ்ணா ஜில்லாக்கள்:—திரு. கே. நாகேச்வர ராவ் பந்துலு.

நெல்லூர், குண்டூர்:—புரபஸர் என். ஜி. ரங்கா.

மலையாளம், தென்கன்னடம்:—திரு. ஸாமியுல் ஆரன்.

பம்பாய் நகரம்:—திரு.கே. எப். நாரிமன், டாக்டர் ஜி. வி. தேஷ்முக்.

கூர்ஜரம்:—திரு. புலபாய் தேசாய்.

கர்னாடகம்:—திரு. எஸ். கே. ஹோஸ்மானி.

மகாராஷ்டிரம்:—திரு. என். வி. கட்கில், திரு. கேசவராவ் ஜேதே.

முஸ்லீம் மத்தியத்தொகுதி:—டாக்டர் காஜி அப்துல் ரஹீம்.

இந்தியச்சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகர்களுக்கே தங்கள் ஆதரவனைத்தையும் அளிக்குமாறு வாக்காளர்களுக்கு அபேட்சகர் தேர்தல் கமிட்டி விண்ணப்பித்துக் கொள்ளுகிறது.

மற்றத் தொகுதிகளுக்கான அபேட்சகர்களது பெயர்கள் சீக்கிரத்தில் அறிவிக்கப்படும்.

மத்தியமாகாணம் சம்பந்தமாக யார் யாரை அபேட்சகராக நியமிக்கலாமென அம்மாகாண காங்கிரஸ் காரியக்கமிட்டி அபேட்சகர் தேர்தல் கமிட்டிக்குத் தெரிவித்துளது. திரு. தேசாய் ஆகஸ்டு மாத மத்தியில் ஜப்பல்பூருக்கு விஜயம் செய்கையில் அவ்வபேட்சகர்கள் இறுதியாகத் தெரிந்தெடுக்கப் படுவர்.

உபவாசம்பற்றிக் காந்திஜி நண்பர்கள் செய்யவேண்டுவதென்ன?

காந்திஜியால் அடியிற்கண்ட அறிக்கை வெளியிடப் பட்டிருக்கிறது:—

“உண்ணா விரதத்தின்போது, அதாவது ஆகஸ்ட் மாதம் 7-ந்தேதி முதல் 14-ந்தேதி வரை யொருவரும் வார்தாவிற்கு வரமாட்டார்களென்ன நம்பப்படுகிறது. மேலும் பலஹீனத்திலிருந்து தேறும்போது எனக்குப் பூரண அமைதியும் களைப்பாறுதலும் தேவை. இத்தினங்களில் தங்கள் அனுதாபத்தைக் காட்டுவதற்குரிய சிறந்த மார்க்கம், ஒவ்வொரு நண்பரும், ஆடவராயினும், ஸ்திரீயாயினும் ஹரிஜனர்களிடம் அன்புடன் நட்புரிமை பூணுவதேயாகும். தங்கள் தவறற்ற, சாந்தமான நடத்தையால், எதிரிகளையும் நமது பக்கம் திருப்பக்கூடும். தங்கள் தவறைத் தைரியமாக ஒப்புக் கொண்டவர்கள் என்னுடன் உண்ணாவிரதத்தில் சேர்ந்து சொள்வதினும், இனிமேல் இவ்விதத் தவறு செய்வதில்லையென உறுதிகொள்வதன் மூலம் தங்கள் கடமையை யாற்றியவராவர்.”



சென்னை ஆக்டிங் கவர்னரான மே. த. சர். மகமது உஸ்மான் சாகிப் பகதூருக்கு ஒங்கோல் முனிசிபாலிட்டியார் ஓர் உபசாரப் பத்திரம் வழங்கினர்.

—P. P. B.

பிரஸ் போட்டோ பீரோ

சொந்தக்காரர் சுற்றுப் பிரயாணம்

சென்னை பிரஸ் போட்டோ பீரோவின் சொந்தக்காரரான திரு. எ. சர்போஜீ ராவ், அவரது மனைவியார், அவரது புதல்வியான ஸ்ரீமதி சரோஜினி ஆகியோர் திருவாங்கூருக்குச் சென்று அரசாங்க விருந்தினராகத் தங்கியுள்ளார்களென்றும் கன்னியா குமரி, நாகர் கோவில் முதலிய விடங்களைப் பார்வையிட்டார்களென்றும் தெரிகிறது. அவர்கள் 28ந் தேதி அரசரைப் பார்த்து விட்டு 29ந் தேதி குற்றாலத்துக்கு வந்துள்ளார்களென்றும் ஆகஸ்டு முதல் வாரத்தில் கொடைக்கானல் வழியாகச் சென்னைக்கு வருவார்களென்றும் சொல்லப்படுகிறது.

கவர்னர் ஜனரல் நிர்வாக சபை

புதிய ஹோம் மெம்பர்

ஜூலை 28ந்தேதி வெளியான விசேஷ கெஜட்டினால், கவர்னர் ஜெனரலின் நிர்வாக சபையில் ஹோம் மெம்பர் பதவி வகித்து வந்த சர் ஹாரி ஹெயிக்குக்குப் பதிலாக சர் ஹென்ரி கிரெய்க் பதவி யேற்றார் என்று தெரிகிறது.


காங்கிரஸ்

மகாசபைக் கூட்டத்திற்கு இடம்

பம்பாயில் அக்டோபர் மாதத்தில் நடைபெறும் தேசியக் காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்திற்கு காங்கிரஸ் வரவேற்புக் கமிட்டி ஒரு இடத்தைத்தேர்ந்தெடுத்து அதனை உபயோகித்துக் கொள்ள அனுமதி கொடுக்க வேண்டுமென்று பம்பாய் சர்க்காருக்குக் கடிதமனுப்பியிருந்தது. அனுப்பிச் சுமார் மூன்று வாரமாகியும் பதில் கிடைக்கவில்லை. ஆதலால் மீண்டுமொரு முறை கடிதமனுப்பி யிருக்கிறது. இதற்கும் பதில் கிடையா விட்டால் வேறொரு இடம் தேடுவதென்று தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது.

மாளவ்யா—ஆனே ராஜினாமா

வகுப்புத் தீர்ப்புச் சம்பந்தமாகக் காங்கிரஸ் காரியக் கமிட்டி பம்பாயில் நிறைவேற்றிய தீர்மானத்தை அக் கமிட்டி மாற்றுமாறு செய்யத் தாங்கள் செய்த முயற்சி பலிக்காமல் போகவே பண்டித மாளவ்யாவும், ஆனேயும் காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டிலிருந்து தமது பதவிகளை ராஜினாமாச் செய்து கொண்டனர். திரு. ஆனே காங்கிரஸ் கமிட்டியிலுள்ள தமது பதவியையும் ராஜினாமா செய்து விட்டாரென்று தெரிகிறது.



சென்னை வால்டாக்ஸ் ரோடிலிருக்கும் சோட்டாதாஸ் பரமானந்ததாஸ் மண்டபத்தில் எம். அண்டு எஸ். எம். ரயில்வே ஊழியர் சங்கத்தின் 5-வது மகாநாடு நடைபெற்றது. திரு. வி. வி. கிரி (பார்-அட்-லா) தலைமை வகித்தார். படத்தில் திரு. கிரி நடுவில் காணப்படுகிறார். —P. P. B.

ஜெர்மனி மீது படையெடுப்பு?

ஜெர்மனியிலும் பிரான்சிலுமுள்ள பெரிய பத்திரிகைகள் அடுத்த யுத்தத்திற்கான பிரசாரம் மும்முரமாக நடைபெறுகின்றதென்று கூறுகின்றன. இவ்விரு நாடுகட்கு மிடையே எல்லைப் புறத்தில் வசிப்பவர்கள் வெகுவாகப் பயப்படுகின்றனர். ஸ்டிராஸ்பர்க்கிலுள்ள பிரெஞ்சுத் துருப்புகள் சதியாலோசனை செய்து கொண்டே இருப்பதாகக் 'கிளாரியன்' பத்திரிகை கூறுகிறது. அந்தத் துருப்புகட்கு விசேஷ உத்தரவு ஒன்று கிடைத்துள்ளதாம். அவ்வுத்தரவுப்படி துருப்புகள் ரைன் நதிக்கரையோரமாகவுள்ள கோட்டைகளில் தங்கி இருக்கவேண்டும். இது ஒரு பாலிருக்க, யுத்தம் வருமென்பது பற்றிய வதந்திகள் பிரான்சிலும் ஜெர்மனியிலும் புற்றீசல் போல் தினந்தினம் கிளம்பிக் கொண்டிருக்கிறது. பொதுவாக ஜனங்கள் பயந்தே காலந் தள்ளுகின்றார்கள்.

கம்பையில்

பாரிஸ்டர் அழகப்ப செட்டியார்

கம்பைக் கல்வி நிலையத்தின் 5வது ஆண்டு விழா ஆகஸ்டு 3ந் தேதி நடைபெறும். திரு. கவீ. அழ. ராம. அழகப்ப செட்டியார் பார்-அட்-லா தலைமை வகிப்பார். ஆண்டு விழாவன்று இரவு மாணவர்கள் 'மார்க்கண்டேயர்' என்ற சரித்திரத்தை நாடகமாக நடத்துவர் என்று ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

விலை வாசிகள்.

வட்டி விகிதம்.

இம்பீரியல் பாங்கு:—மூன்றரை பெர் [செண்டு.

இங்கிலாந்து பாங்கு:—இரண்டு பெர் [செண்டு.

இரங்கூன் நடப்பு வட்டி.

பவ-ஷு ஆனி	0—4—0

இரங்கூன் தவணை வட்டி.

ஆடி 7-௳	0—3—6

சிங்கப்பூர் நடப்பு வட்டி.

பவ-ஷு வைகாசி	0—5—3

சிங்கப்பூர் மூன்று மாத தவணை வட்டி.

ஆடி 1-௳	0—4—9

கொழும்பு நடப்பு வட்டி.

ஜுன்	0—6—0

செய்கோன் நடப்பு வட்டி.

பவ-ஷு சித்திரை	0—5—3
தவணை வட்டி	0—5—3

சென்னை நடப்பு வட்டி.

பவ சித்திரை	0—8—0
வைகாசி	0—7—6
ஆனி	0—7—0

உண்டியல் விலை.

ஸ்டொபிட்ஸ் விற்பனை	157¼
„ 30 நாள் தவணை வாங்குவது	150

தங்கம், வெள்ளி.

சென்னை, ஜுலை 31-௳

சவரன் (சில்லரை)	21—10—6
„ மொத்தமாக	21—10—3
ஆபரணத்தங்கம் தோலா 1-க்கு	34—4—0
மூனா தங்கம்	33—12—0
வெள்ளி	
1 ரூபா எடைக்கு	0—9—9
100 ரூபா எடைக்கு	57—8—0

கப்பல்.

ரங்கூன்

எதோபியா ஜுலை 30௳ சென்னை வந்து ஆகஸ்டு 3-ந் தேதி புறப்படும்.

அரோண்டா ஆகஸ்டு 10-ந் தேதி புறப்படும்.

மெயில் கப்பல் வெள்ளிக் கிழமை தோறும் போகும்.

மலேயா

ரோஹ: ஜுலை 28-ந் தேதி வந்து 31-ந் தேதி புறப்படும்.

ரஜுலா: ஆகஸ்டு 11-ந் தேதி வந்து சேரும். ஆகஸ்டு 14-ந் தேதி மீண்டும் புறப்படும்.

தூத்துக்குடி, கொச்சி, பம்பாய்

கோஹினூர்: ஆகஸ்டு 6-ந் தேதி சென்னைக்கு வரும்.

பாண்டிச்சேரி, சிங்கப்பூர், செய்கோன்

காம்பெயின்: ஆகஸ்டு 7-ந் தேதியும்

ஜெனரேல் மேட்ஜிங்கர்: செப்டம்பர் 4-ந் தேதியும்

காமிசேயர் ராமேல்: அக்டோபர் 2-ந் தேதியும் சென்னை வந்து சேரும்.

லண்டன்

ஆஸ்திரேலியா: ஆகஸ்டு 14-ந் தேதி வரும்.

மேஹ: செப்டம்பர் 11-ந் தேதி வரும்.

டோமலா: அக்டோபர் 9-ந் தேதி வந்து 10-ந் தேதி புறப்படும்.

கிளான்மக்னுப்: ஆகஸ்டு 16-ந் தேதி வரும்.

ரப்பர்.

லண்டன் ஜுலை, 30௳

புகைப்போட்ட ஷீட் ரப்பர் வாங்குபவர் விலை ராத்தல்.	7 1/16பென்ஸ்
விற்பவர் விலை	7 3/16 „

கொழும்பு, ஜுலை 30.

	ரூபாய்
டார்செட் எஸ்டேட்ஸ்	8
இந்தோமலாய் எஸ்டேட்	11
கலுத்தரா கம்பெனி	20
லாங்கட் ரிவர் செலாங்கர்	14½
லாண்ட்ஸ் டெளன்	10

பிற்பகல் 2–15 மணிக்கு ரப்பர் விலை கிரிப் 37 1/8 செண்டும் ஷீட் 34¼ செண்டுமாக விருந்தது.

தேயிலை

லண்டன், ஜுலை 30.

19900 கட்டு இந்தியன் தேயிலை ஏலம் போடப்பட்டது. நன்றாக விற்பனையாயிற்று. அடியில் வருவது தாழ்ந்த விலை:

	பென்ஸ்.
சுத்தமான காமன் பெகோ ராத்தல்	12
காமன் பொகோ ராத்தல்	12
சுத்த காமன் புரோக்கன் பெகோ ராத்தல்	12¼
காமன் புரோக்கன் பெகோ ராத்தல்	12
சுத்த காமன் ஆரஞ்சு பெகோ ராத்தல்	12⅛
காமன் ஆரஞ்சு பெகோ ராத்தல்	12
சுத்த காமன் ஆரஞ்சு புரோக்கன் பெகோ ராத்தல்	12⅜

உலகத்தின் பெரியகாமரா யுனைடெட் ஸ்டேட்சில் இருக்கிறது. அது 32 அடி நீளம்; 14 டன் கனம். அது சர்க்காரின் ரகசியப் பத்திரங்களையும் ஆகாய விமானப் பாதைகளின் வழியையும் படம் பிடிக்க உபயோகிக்கப் படுகிறது.

Printed and published by Rama Kasinathan for the India Publications Ltd., at the Oolian Power Press, 56, Thambu Chetty Street, Madras.